பக்கங்கள்: பதினான்கு

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 7.00

சுடர்17 வள்ளுவர் ஆண்டு 2033 ஆடி 04 சனிக்கிழமை (20-07-2002) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:237

### வலி.வடக்கில் மீள்குடியமர்வு குறித்து ஆராய

## ஒஸ்ரின் பெர்னாண்டோ தலைமையில் உயர்மட்டக் குழு இன்று வருகின்றது!

### சாவகச்சேரிக்கும் சென்று பார்வையிடும்

யாழ்ப்பாணம்,ஜூலை20

வலி. வடக்கில் இருந்து இடம் பெயர்ந்த மக்களை அவர்களது சொந்த இடங்களில் மீளக் குடிய மர்த்துவது தொடர்பாக நேரில் ஆராய் வதற்காக பாதுகாப்பு அமைச்சுச் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ தலைமையில் உயர்மட்டக்குழு ஒன்று இன்று யாழ்ப்பாணம் வருகின்றது.

இராணுவத் தளபதி லெப்டினன்ட ஜெனரல் லயனல் பலகல்ல, கடற் படைத்தளபதி ரியல் அட்மிரல் சந்த கிரி ஆகியோரும் செயலாளருடன் வருகின்றனர்.

வலி. வடக்கில் உயர்பாதுகாப்பு வலயத்துக்குள் மக்கள் மீளக் குடி அமரக்கூடிய பகுதிகளை இக்குழு நேரில் பார்வையிடும்.

இந்து கலாசார அமைச்சர் தி. மகேஸ்வரனும் இக்குழுவுடன் வர விருக்கின்றார்.

தமிழ் கூட்டமைப்பின் நாடாளு மன்ற உறுப்பினர்களான வீ.ஆனந்த

(14ஆம் பக்கம் பார்க்க)

### தீவக தாக்குதல் சம்பவம் குறித்த

## சுயாதீன ஆணைக்குழு விசாரணைகள் பூர்த்தி!

யாழ்ப்பாணம்,ஜூலை20

விடுதலைப் புலிகளின் தீவக அரசியல்துறைப் பொறுப்பாளர் செம் மணன் மற்றும் தயாளன் தாக்கப் பட்ட சம்பவம் தொடர்பான சுயாதீன ஆணைக்குழு தனது விசாரணை களை யாழ்ப்பாணத்தில் நேற்றுப் பூர்த்திசெய்தது.

இன்று கொழும்பு திரும்பும் ஆணைக்குழுவினர் நாளைமுதல் எதிர்வரும் 24ஆம் திகதிவரை கொழும்பில் பண்டாரநாயக்க சர்வ தேச மாநாட்டு மண்டபத்தில் இது தொடர்பான விசாரணைகளை மேற் கொள்வர்.

யாழ்ப்பாணத்தில் விசாரணை கள் பூர்த்தியானதை அடுத்து விடுத லைப் புலிகளின் யாழ். மாவட்ட அர சியல்துறைப் பொறுப்பாளர் இளம் பரிதி, அரசியல்துறையைச் சேர்ந்த குட்டி ஆகியோர் ஆணைக்குழுவின ருடன் கலந்துரையாடினர்.

சமாதானத்துக்கான நல்லெண்ண மக்கள் குழு உறுப்பினர்களும் நேற்று ஆணைக்குழுவினருடன் யாழ்.

(14ஆம் பக்கம் பார்க்க)

# ஜனாதிபதி-பிரதமர் நடத்திய இணக்கப் பேச்சில் பிணக்கு!

## ஒன்றரை மணிநேரச் சந்திப்பு முடிவு ஏதும் இன்றி முடிந்தது

கொழும்பு,ஜூலை20

**ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் நாடு எதிர்நோக்கும் முக்கிய பிரச்சினைகள் குறித்து இணக்கம் காண்பதற்கு நடத்திய பேச்சுகளில் பிணக்கு ஏற்பட்டது. இருவரும் சந்தித்து ஒன்றரை மணிநேரம் பேசினர். முடிவு ஏதும் எடுக்கமுடியாத நிலையில் பேச்சு முடிந்தது.**

அமெரிக்க விஜயத்தை மேற்கொள் வதற்கு முன் பிரதமர் ரணில், ஜனாதி பதி சந்திரிகாவை சந்தித்துப் பேச்சு நடத்தினார். இப்பேச்சு நேற்றுமுன் தினம் ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்றது.

அரச நிர்வாகத்தில் அன்னியோன் னிய ஒத்துழைப்புடன் செயற்படுவது தொடர்பாக இருவரும் முக்கியமாகக் கலந்துரையாடினர் எனத் தெரிகிறது.

பிரதமர் ரணில் அமெரிக்க விஜ யத்தை இன்று ஆரம்பிக்கவிருக்கிறார்.

தனது இந்த விஜயம் குறித்து விளக்கிய பிரதமர், அமெரிக்காவில் கையெழுத்திடப்படவிருக்கும் ஒப்பந் தங்கள் குறித்தும் விவரம் தெரிவித் திருக்கின்றார்.

ஜனாதிபதிக்கும் அரசுக்கும் இடையிலான மோதல்கள் குறித்தும்

(14ஆம் பக்கம் பார்க்க)

## தேடப்படும் ஈ.பி.டி.பி. உறுப்பினரை நீதிமன்றில் ஒப்படைக்கப் பணிப்பு

### கட்சித் தலைமையகப் பொறுப்பாளருக்குக் கடிதம்

யாழ்ப்பாணம்,ஜூலை20

ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜன் படுகொலை தொடர்பா கத் தேடப்பட்டுவரும் ஈ.பி.டி.பி. அமைப்பைச் சேர்ந்த சந்தேகநபரை அடுத்தமாதம் 2ஆம் திகதி நீதிமன் றத்தில் ஆஜர்செய்யுமாறு கொழும்பில் உள்ள அந்த அமைப்பின் தலைமை அலுவலகப் பொறுப்பாளருக்கு யாழ். நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

பிரஸ்தாப சந்தேகநபரைக் கைது செய்ய கொழும்பு, பார்க் வீதியில் 121ஆம் இலக்கத்தில் உள்ள ஈபிடிபி. தலைமையகத்தில் தேடுதல் நடத்த அனுமதிதருமாறு இந்த வழக்கை விசாரணை செய்துவரும் குற்றப்புல னாய்வுப் பிரிவினர் யாழ். நீதிமன்றத் தில் மனுத்தாக்கல் செய்திருந்த தும் -

அந்த மனுவை ஏற்று நீதிமன்றம் வழங்கிய உத்தரவின்பேரில் பிரஸ் தாப அலுவலகத்தில் குற்றப்புல னாய்வுப் பிரிவினர் தேடுதல் நடத்தி

(14ஆம் பக்கம் பார்க்க)

## இந்திய மத்தியஸ்தத்தை கோருகின்றார் மஹிந்த

கொழும்பு,ஜூலை20

அரசுக்கும் புலிகளுக்கும் இடை யிலான சமாதானப் பேச்சுகளுக்கு இந்திய அரசு மத்தியஸ்தம் வகிக்க முன்வரவேண்டும். இது தொடர்பாக இந்தியத் தரப்பினருடன் அடுத்தமாதம் பேச்சு நடத்தப்படும் என்று இந்தியா சென்றுள்ள எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்திருக்கி றார்.

இந்தியாவில் உத்ராஞ்சல் மாநி லத்தில் மனித உரிமைகள் தொடர் பான சர்வதேச மாநாடு நடைபெறு கிறது. இதில் பங்குபற்றுவதற்குச் சென்ற மகிந்த ராஜபக்ஷ செய்தியா ளர்களிடம் பேசுகையில் மேற்கண்ட வாறு தெரிவித்தார்.

இலங்கையில் நிலவும் பிரச்சினை பற்றி பிற நாடுகளைவிட இந்தியாவே நன்கு உணர்ந்துள்ளது. இலங்கையு டன் வரலாற்றுத் தொடர்புகளையும் கொண்டுள்ளது. அதனால் இந்தியா, அரச - புலிகள் பேச்சுக்களுக்கு மத் தியஸ்தம் வகிக்க முன்வரவேண்டும்.

- இப்படி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்தார். (ம)

### இரணைதீவு கடல் சம்பவத்தில் சம்பந்தப்பட்ட

## மீன்பிடி ட்றோலர் இந்தியாவிலிருந்து வந்ததல்ல என்று அரசுக்கு அறிவிப்பு!

கொழும்பு,ஜூலை20

கடந்த சனியன்று இரணைதீவுக் கடலில் கடற்படையினருக்கும் புலி களுக்கும் இடையில் பிணக்கை ஏற் படுத்தக் காரணமாகவிருந்த மீன்பிடி ட்றோலர் இந்தியாவில் இருந்து வந்த தல்ல. 'ஆர்.எம்.எஸ். 512' என்ற தென் னிந்தியப் பதிவையும் 'மனாட்சி' என்ற பெயரையும் இந்த ட்றோலர் கொண் டிருந்தாலும் தமிழகத்தின் பிரதான நிலப் பரப்பிலிருந்து கடந்த ஆறு வருடங் களாக மீன்பிடித் தொழிலுக்கு இந்த ட்றோலர் பயன்படுத்தப்படவில்லை.

- இவ்வாறு புதுடில்லியிலிருந்து அதிகாரிகள் இலங்கைக்கு உத்தி யோகபூர்வமாகத் தெரிவித்திருக்கிறார் கள் என அறியவருகின்றது.

நான்கு விடுதலைப் புலிகளுடன் வந்த இந்த மீன்பிடி ட்றோலரை வழி மறித்த கடற்படையினர், அது இந்தியப் பதிவில் காணப்பட்டதால், சட்டவிரோ தமாக இந்தியாவில் இருந்து இலங் கைக்குள் நுழையும் ட்றோலர் எனக் குறிப்பிட்டு, அதைத் தடுத்து காங்கே சனுக்குக் கொண்டுசெல்ல முற்பட்ட னர்.

அப்போது ஏற்பட்ட இழுபறியில் கண்காணிப்புக்குழு உறுப்பினர்கள் இருவருடன் சேர்த்து ட்றோலரை தமது கட்டுப்பாட்டில் உள்ள கடற்கரைப் பிர தேசத்துக்குப் புலிகள் கொண்டுசென் றது தெரிந்ததே.

(14ஆம் பக்கம் பார்க்க)

## சிறை சென்று வைகோவை பார்த்தார் பெர்னாண்டஸ்

சென்னை,ஜூலை20

விடுதலைப் புலிகளுக்கு ஆதர வாகப் பேசியதற்காக பயங்கரவா தத் தடுப்புச் சட்டமான 'பொடா' சட் டத் தின்கீழ் கைது செய்யப்பட்ட வைகோவை மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் ஜோர்ஜ் பெர் னாண்டஸ் நேற்று வேலூர் சிறை யில் சந்தித்துப் பேசினார்.

வைகோ கைதுசெய்யப்பட்ட பின் னர் அவரைச் சந்தித்துப் பேசிய தேசிய ஜனநாயகக் கூட்டணியின் முதல் தலைவர் ஜோர்ஜ் பெர்னாண் டஸ் என்பது குறிப்பிடத்தக்கது.

வைகோவை சந்தித்த பின் செய் தியாளர்களிடம் பேசிய ஜோர்ஜ் பெர்

(14ஆம் பக்கம் பார்க்க)



வைகோவைச் சந்தித்தபின் செய்தி யாளரிடம் பேசும் பெர்னாண்டஸ்.

## முகாமிலிருந்து 200 மீற்றர் தள்ளி மீளக்குடியமர்வதற்கு அனுமதி!

### மண்டைதீவுக் கடற்படை அதிகாரி தெரிவிப்பு

மண்டைதீவு,ஜூலை20

மண்டைதீவிலுள்ள உயர்பாது காப்பு வலய எல்லையில் இருந்து 200 மீற்றருக்கு அப்பால் மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்படுவர் என்று மண்டைதீவுக் கடற்படை கொமாண்டர் நிசாந்த தெரிவித்தார்.

மண்டைதீவில் கடற்படை அதி காரிகளுக்கும் பொதுமக்களுக்கும் இடையில் நேற்று நடந்த சந்திப்பு ஒன்றில் உரையாற்றுகையிலேயே அவர் இப்படிக் கூறினார்.

அவர் அங்கு பேசுகையில் மேலும் கூறியதாவது:

தற்பொழுது நீங்கள், ஒரு வீடு களில் 4,5 குடும்பங்கள் என்ற ரீதி யில் வசித்து வருவதை நான் அறி வேன். நீங்கள் எதிர்நோக்கும் பிரச்சி னைகளும் தெரியும். உங்களில் சிலர் குடியிருக்க இடமின்றி இருக்கி

(14ஆம் பக்கம் பார்க்க)

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# விளையாட்டு

## 83 ஓட்டங்களுக்கு ஸ்கந்தா சுருண்டது!

வலி.வடக்கு,ஜூலை20

ஸ்கந்தவரோதயக் கல்லூரி மற்றும் மகாஜனக் கல்லூரி அணிகளிடையேயான வீரர்களின் மாபெரும் துடுப்பாட்டம் (Battle of the Heros) நேற்றுப் பிற்பகல் 2.15 மணிக்கு ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமானது. தனது முதலாவது இனிங்ஸில் ஸ்கந்தவரோதயக் கல்லூரி 83 ஓட்டங்களுக்கு சுருண்டது.

முதலில் துடுப்பெடுத்தாடிய ஸ்கந்தவரோதயக் கல்லூரி அணி தமது சகல விக்கெட்டுக்களையும் இழந்து 83ஓட்டங்களை மட்டும் பெற்றுக்கொண்டது. [illegible] கல்லூரி வீரர் ஆர். ராஜகாந்தன் 10 ஓவர்கள் பந்து வீசி 22 ஓட்டங்களை மட்டும் விட்டுக் கொடுத்து 5 விக்கெட்டுக்களையும், கே.அன்பழகன் 12.5 ஓவர்கள் பந்து வீசி 48 ஓட்டங்களுக்கு 5 விக்கெட்டுக்களையும் கைப்பற்றினர்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய மகாஜனக் கல்லூரி அணி ஆட்ட நேர முடிவில் இரு விக்கெட் இழப்பிற்கு 26 ஓட்டங்களைப் பெற்றது.

ஸ்கந்தா வீரர் ஏ.துஸ்யந்தன் இந்த இரு விக்கெட்டுக்களையும் வீழ்த்தினார். இன்று காலை 9 மணிமுதல் ஆட்டம் தொடர்ந்து இடம்பெறும். (ம-86)

## பொன் அணிகள் போரில் சென்.பற்றிக்ஸ் முன்னணி!

யாழ்ப்பாணம்,ஜூலை20

'பொன் அணிகள் போர்' (Battle of the Gold) என்று வர்ணிக்கப்படும் சென்.பற்றிக்ஸ் கல்லூரி மற்றும் யாழ்ப்பாணக்கல்லூரி ஆகியவற்றின் இடையேயான கிரிக்கெட் போட்டி நேற்றுக்காலை 10 மணிக்கு சென்.பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமானது.

நேற்றைய ஆட்டநேர முடிவில் பற்றிக்ஸ் அணி யாழ்ப்பாணக்கல்லூரி அணியைவிட முன்னணியில் இருந்தது.

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற சென்.பற்றிக்ஸ் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது.

துடுப்பெடுத்தாட முதலில் களமிறங்கிய யாழ்ப்பாணக் கல்லூரி 105 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. அந்த அணி வீரர்கள் ராஜ்குமார் 43 ஓட்டங்களையும், ஏ.திலீபன் 21 ஓட்டங்களையும் அணிக்குப் பெற்றுக்கொடுத்தனர்.

பற்றிக்ஸ் வீரர் செல்வின் லொயிட் 21 ஓட்டங்களை மட்டுமே கொடுத்து 7 விக்கெட்டுக்களை வீழ்த்தினார்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய பற்றிக்ஸ் அணி நேற்றைய ஆட்டநேர முடிவில் 121 ஓட்டங்களைப்பெற்று 6 விக்கெட்டுக்களை இழந்திருந்தது.

ஆர்.விநோதன் 37 ஓட்டங்களையும், ரீ.றொஷான் பேரி 26 ஓட்டங்களையும் பெற்றனர்.

ஆட்டம் இன்றுகாலை 9.30 மணி முதல் தொடர்ந்து இடம்பெறும்.(ம)

## இலங்கை-பங்களாதேஷ் டெஸ்ட் நாளை

இலங்கை - பங்களாதேஷ் அணிகளிடையேயான முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி நாளை ஆரம்பமாகவுள்ளது.

இத்தொடரில் இரு போட்டிகள் இடம்பெறவுள்ளன. முதலாவது போட்டி நாளைமுதல் கொழும்பு பி. சரவணமுத்து அரங்கில் நடைபெறவுள்ளது.

இரண்டாவது போட்டி ஜூலை 28 முதல் எஸ்.எஸ்.ஸி. மைதானத்தில் நடைபெறும்.

## இன்றைய ஆட்டங்கள்

யாழ்ப்பாணம்,ஜூலை20

யாழ். ஹற்றன் நஷனல் வங்கியின் ஏற்பாட்டில் கழகங்கள் மற்றும் பாடசாலைகளுக்கிடையில் யாழ். இந்துக்கல்லூரி ஆடுகளத்தில் நடைபெற்றுவரும் கூடைப்பந்தாட்ட சுற்றுப் போட்டியில் இன்று இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

☆ காலை 8 மணி - திருக்குடும்ப கன்னியர் மடம் ம.வி. எதிர் வேம்படி உயர்தரப் பாடசாலை.

☆ மாலை 4.30 மணி - கொக்குவில் இந்து - எதிர் யாழ். சென்ரல். (ம-3-86)

★ ★ ★

யாழ். உதைபந்தாட்ட லீக்கின் ஏற்பாட்டில் இடம்பெற்றுவரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று இடம்பெறும் ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

துரையப்பா ஸ்ரேடியம்

☆ மாலை 4 மணி - சென். அன்ரனிஸ் எதிர் சென்.நீக்கிலஸ்.

☆ மாலை 5.15 மணி றோயல் எதிர் சென்.றோக்ஸ்.

சென்.அன்ரனீஸ் மைதானம்

☆ மாலை 4 மணி - பல்கலைக் கழகம் எதிர் சென். மைக்கல்.

☆ மாலை 5.15 மணி - பொற்பதி எதிர் பாடும்மீன். (ம-3)

★ ★ ★

யாழ்ப்பாணப் பாடசாலைகள் கிரிகெட் சங்கத்தால் நடத்தப்படும் - 13 வயதுக்குட்பட்டோருக்கான - தோறபந்து கிரிக்கெட் சுற்றுப்போட்டியில் இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு இடம்பெறவுள்ள ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

☆ யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி எதிர் வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி. (யாழ்.மத்திய கல்லூரி மைதானம்)

☆ கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம் எதிர் தெல்லிப்பழை யூனியன் கல்லூரி. (கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலய மைதானம்)

☆ மானிப்பாய் இந்துக் கல்லூரி எதிர் பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி. (மானிப்பாய் இந்துக் கல்லூரி மைதானம்)

☆ யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி எதிர் உடுப்பிட்டி அமெரிக்கன் மிஷன் கல்லூரி. (யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி மைதானம்)(ம-86)

★ ★ ★

யாழ்ப்பாணம்,ஜூலை20

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக்கழகத்தின் ஏற்பாட்டில் வடமராட்சி பிரதேச விளையாட்டுக் கழகங்களுக்கிடையில் நிக்கமுனை மைதானத்தில் நடத்தப்பட்டுவரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் இன்று இடம்பெறும் கால்இறுதி ஆட்டங்களில் பங்குபற்றும் அணிகளின் விவரம் வருமாறு:-

☆ மாலை 4 மணி - பருத்தித்துறை ஐ.வி.க. 'பி' அணி எதிர் நியூட்டன் வி.க. அணி.

☆ மாலை 5 மணி - பொமேர்ஸ் வி.க. அணி எதிர் உதயதாரகை வி.க. அணி. (ம-3)

## யாழ்.மாணவன் புதிய சாதனை!

யாழ்ப்பாணம்,ஜூலை20

பாடசாலைகளுக்கிடையிலான மாகாண மட்டப் போட்டிகள் கடந்த 11 ஆம் திகதி முதல் 15 ஆம் திகதி வரை திருமலையில் இடம்பெற்றன.



இந்தப் போட்டிகளில் 400 மீற்றர் தடைதாண்டி ஓட்டம் நிகழ்வில் யாழ். மாவட்ட மாணவன் புதிய சாதனை நிலைநாட்டியுள்ளான். புனித பத்திரிசியார் கல்லூரி மாணவனான தேவதாஸ் [illegible]ளின் கிறிஸ்ரி என்பவரே இந்தச் [illegible]னையைப் புரிந்துள்ளார்.

இவர் இந்தப் போட்டியில் 400 மீற்றர் தூரத்தை 1:02:2 நிமிட நேரத்தில் ஓடிமுடித்து புதிய சாதனையை நிலைநாட்டினார். இதன் முன்னைய [illegible] நேரமாக 1:02:7 நிமிடமாக [illegible] (ம)

# கொழும்பில் ஆடிவேல் இம்முறை தேசியவிழாபோல் கொண்டாட்டம்

## வெள்ளி இரதத்தில் முருகன் பவனியும் உண்டு

கொழும்பு,ஜூலை20

கொழும்பு ஸ்ரீ கதிர்வேலாயுதசுவாமி கோவில் ஆடிவேல் விழா, தேசிய விழாவாக இம்முறை கொண்டாடப்படும். பல வருட இடைவெளிக்குப் பின்னர் வெள்ளிரதப்பவனி இம்முறை ஜனாதிபதி மாளிகைக்கும் செல்கிறது. பிரபல இந்திய நாதஸ்வர மேதை டாக்டர் பத்மஸ்ரீ ஷேக் சின்ன மௌலானாவின் பேரர்களான பாபு, காசீம் குழுவினரின் நாதஸ்வர கச்சேரிகளும் இடம்பெறும்.

- இவ்வாறு கொழும்பு புதிய கதிர்வேலாயுதசுவாமி ஆலய பிரதம தர்மகர்த்தா எஸ்.சுப்பிரமணியம் செட்டியார் தெரிவித்தார்.

ஆலய அலுவலக அரங்கில் இடம்பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்தார். தர்மகர்த்தா மேலும் தெரிவித்ததாவது:-

1983 ஆம் ஆண்டு நாட்டில் இடம்பெற்ற ஆடிக் கலவரத்தின் பின் ஆடிவேல் விழா கைவிடப்பட்ட நிலையில் கொழும்பு நகரமே சோபை இழந்துவிட்டது.

இடைக்கிடை விழாக்களும் பூஜைகளும் தேரோட்டமும் நடைபெற்றபோதும் பாதுகாப்புக் கெடுபிடிகள், வீதித் தடைகள் காரணமாக பூரணமாக ஆடிவேல் விழாவைக் கொண்டாட முடியவில்லை. சகல வீதிகளிலும் தேர்ப்பவனி வரவும் முடியாத நிலையும் ஏற்பட்டது.

எனினும் கொழும்பு புதிய கதிர்வேலாயுதசுவாமி கோயில் தர்மகர்த்தா சபையினர் மேற்கொண்ட முயற்சியால் இம்முறை ஆடிவேல் விழாவை தேசிய விழாவாகக் கொண்டாடும் வாய்ப்பு ஏற்பட்டுள்ளது.

ஜனாதிபதி, பிரதமர், முப்படைகளின் தளபதிகள் மற்றும் அமைச்சர்களும் இதற்கு தங்களது முழு ஆதரவையும் பங்களிப்பையும் வழங்க முன்வந்துள்ளனர்.

அதியுயர் பாதுகாப்புப் பிரதேசமாக பிரகடனப்படுத்தப்பட்டிருக்கும் ஜனாதிபதி மாளிகை வளவுக்கும் தேர்ப்பவனி வர ஜனாதிபதி அங்கீகாரம் அளித்துள்ளார். இதற்கேற்ப பாதைத் தடைகளும் நீக்கப்படும். இது முருகன் அருள் என்றே கூறவேண்டும்.

150 ஆண்டுகளின் முன்னர் வெள்ளையர் ஆட்சியின்போது ஆடிவேல் விழாவை முன்னிட்டு தேசிய விடுமுறை தினம் பிரகடனப்படுத்தப்பட்டிருந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது. இன்று அந்நிலை இல்லாவிட்டாலும் சகல இன மக்களும் கலந்துகொள்ளும் ஒரு தேசிய விழாவாகவே அது அமைகிறது.

ஆரம்பநாள் முதல் கதிர்காம உற்சவத்துடன் தொடர்புபடுத்தப்பட்டதாக ஆடிவேல் விழா இருந்தது. கதிர்காம உற்சவத்தின் கடைசி மூன்று நாள்களும் கொழும்பில் ஆடிவேல் விழாவாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. கதிர்காமம் செல்லமுடியாத பக்தர்கள் கொழும்பில் ஆடிவேல் விழாவில் கலந்துகொண்டு மன நிறைவு பெற்றனர்.

எனினும் நாட்டின் சீரற்றநிலை காரணமாக கடந்த ஏழு வருடங்களாக தேர்ப்பவனி இடைநிறுத்தப்பட்டிருந்தது.

இவ்வருடம் நாட்டில் அமைதியும் சமாதானமும் ஏற்பட்டுள்ளது. தடைகள் நீக்கப்பட்டுள்ளன; பாதைகள் திறக்கப்பட்டுள்ளன. மக்கள் மனதில் இருந்த அச்சமும் பீதியும் மறைந்துவிட்டன. இந்த அமைதிநிலை நீடிக்கவேண்டும்.

- இவ்வாறு கூறினார் ஆலய அறங்காவலர் எஸ்.சுப்பிரமணியம் செட்டியார்.

ஆடிவேல் விழா எதிர்வரும் 22 ஆம் திகதி ஆரம்பித்து 26 ஆம் திகதி தீர்த்தோற்சவத்துடன் நிறைவுபெறும். (ம)

## கதிர்காமத்தில் பெரும் கூட்டம்!

காரைதீவு,ஜூலை20

கதிர்காம ஆடிவேல் உற்சவத்தையொட்டி நாட்டின் நாலாபாகங்களிலிருந்தும் தினமும் ஆயிரக்கணக்கான மக்கள் கதிர்காமம் சென்று வருகின்றனர்.

முருகன் ஆலய நிர்வாகியும், பஸநாயக நிலமேயுமான பிரதீப் நிலந்த டி பண்டா ஆலயத்துக்கு விஜயம் செய்து திருவிழாவில் கலந்துகொண்டார்.

வேடுவர்களின் பாரம்பரிய நடனம் திருவிழாவில் பிரதிபலித்தது. யானைகளின் பவனியும் கண்கொள்ளாக்காட்சியாக இருந்தது.

பகல் பொழுதில் கதிர்காமப் பிரதேசத்தில் பேய்க்காற்று வீசுகிறது. கூடவே புழுதியையும் அள்ளி எறிகிறது.

இருப்பினும் பெரிய நீர்பவுஸர்களில் நீர் விசிறப்பட்டு வருகிறது. பிரதேசத்தில் 30 தண்ணீர்த் தாங்கிகள் அமைக்கப்பட்டுள்ளன.

மாணிக்க கங்கையில் நீர் வர ஆரம்பித்துள்ளது. வழமைபோல் சென். ஜோன் அம்புலன்ஸ் படையினரின் சேவையும் இடம்பெறுகிறது. (ம)

# கிளிநொச்சி, முல்லை. மாவட்ட வாகனங்களுக்கு வரி விலக்கு

## வேறு இடங்களுக்கு அது இல்லை

திருகோணமலை,ஜூலை20

வன்னியில் இராணுவக் கட்டுப்பாடற்ற பிரதேசத்தில் உள்ள வாகனங்களுக்கு சுமார் 12 வருடங்களுக்கு வரி விலக்களிப்பதென வடக்கு - கிழக்கு மாகாண சபை மோட்டார் போக்குவரத்துத் திணைக்களம் முடிவுசெய்துள்ளது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களில் 1990 ஆம் ஆண்டு முதல் சிவில் நிர்வாகம் இடம்பெறாததால் அக்காலப் பகுதிக்கு இந்த வரிவிலக்கு அளிக்கப்படவிருக்கின்றது என்றும் -

இந்த வருடம் முதல் அப்பகுதியில் உள்ள வாகன உரிமையாளர்கள் வாகன அனுமதிப்பத்திரம் பெற வேண்டும் என்றும் - அத்திணைக்கள அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

அந்தப் பிரதேசம் தவிர்ந்த வேறு எந்தப் பகுதிக்கும் இந்த விலக்கு அளிக்கப்படமாட்டாது என்றும் -

வன்னிப்பகுதிக்கு இந்த வரி விலக்கு அளிப்பதனால் 4கோடி ரூபா வருமான இழப்பைச் சந்திக்க வேண்டியுள்ளது என்றும் -

இந்த வரிவிலக்குத் தொடர்பான விவரம் விரைவில் அறிவிக்கப்படும் என்றும் -

அவர் மேலும் தெரிவித்தார்.(ம-3)

## புற்றுநோய் பரிசோதனை யாழ்.ஆஸ்பத்திரியில் நாளை

யாழ்ப்பாணம்,ஜூலை20

யாழ்.போதனா வைத்தியசாலையில் புற்றுநோயாளர்களுக்கான மருத்துவப் பரிசோதனைகள் நாளையும் நாளைமறுநாள் திங்கட்கிழமையும் நடைபெறவுள்ளதாக வைத்தியசாலையின் பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

இதற்கெனத் தென்பகுதியில் இருந்து புற்றுநோய் வைத்திய நிபுணர்கள் அடங்கிய குழுவொன்று இங்கு வருகைதரவுள்ளது. வைத்தியசாலையின் வெளிநோயாளர் பகுதியில் உள்ள சத்திரசிகிச்சைப் பிரிவில இந்த மருத்துவப் பரிசோதனைகள் நடைபெறவுள்ளன.

ஆண்கள் மற்றும் சிறுபிள்ளைகளுக்கான பரிசோதனைகள் நாளையும், பெண்களுக்கான பரிசோதனைகள் நாளை மறுதினம் திங்கட்கிழமையும் இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-10-139)

## மனிதநேய அமைப்புகளுடன் சந்திப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை20

வேலணைத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டுவரும் சுயாதீன ஆணைக் குழுவின் பிரதிநிதிகள் குழு கடந்த புதனன்று யாழ்.ஆயர் இல்லத்திற்கு விஜயம் செய்தது.

அன்று மாலை 5 மணியளவில் அங்கு விஜயம் செய்த குழுவினர் யாழ் மாவட்ட மனிதநேய அமைப்புகளின் ஒன்றியம் மற்றும் யாழ் மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையம் ஆகியவற்றின் பிரதிநிதிகளுடன் கலந்துரையாடினார்கள்.

இதன்போது புரிந்துணர்வு உடன்படிக்கையில் உள்ள விடயங்களை அமுல் செய்தல் மற்றும் யாழ்.குடாநாட்டு மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் ஆகியன பற்றி ஆணைக் குழுவின் பிரதிநிதிகளிடம் மேற்படி அமைப்புகளின் பிரதிநிதிகளால் விரிவாக எடுத்துக்கூறப்பட்டது. (ம-10)

## ஐ. நா. உலக உணவுத் திட்டம் வடபகுதியில் மீண்டும் ஆரம்பம்!

கொழும்பு,ஜூலை20

வடபகுதியில் இடைநிறுத்திவைக்கப்பட்டிருந்த ஐ.நா. உலக உணவுத் திட்டப் பிரிவின் நடவடிக்கைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஐ.நா. உலக உணவு ஸ்தாபனம் இதனை அறிவித்துள்ளது.

யுத்தம் காரணமாக வீடுகளை இழந்து முகாம்களில் வாழும் மக்களுக்கு மீண்டும் ஓகஸ்ட் மாதத்திலிருந்து இலவசமாக உலருணவு விநியோகம் செய்யப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த டிசெம்பர் மாதத்துடன் இலவச உலர்உணவு விநியோகத்தை இந்த நிறுவனம் நிறுத்தியிருந்தது குறிப்பிடத்தக்கது. (ம)

## வைகோவை விடுவிக்கக் கோரி கூட்டமைப்பு எம்.பிக்கள் வவுனியாவில் உண்ணாவிரதம்

வவுனியா,ஜூலை20

வைகோ கைதை ஆட்சேபித்தும் அவரை விடுதலை செய்யக்கோரியும் வவுனியாவில் எதிர்வரும் 23ஆம் திகதி உண்ணாவிரதம் மேற்கொள்ளப்படவிருக்கிறது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினால் ஏற்பாடுசெய்யப்பட்டிருக்கும் இந்த உண்ணாவிரதப் போராட்டத்தில் கூட்டமைப்பின் எம்.பிக்கள் அனைவரும் கலந்துகொள்வர் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

காலை 7 மணிக்கு ஆரம்பமாகும் உண்ணாவிரதம் மாலை 6 மணிவரை நடைபெறும். உண்ணாவிரதத்தின் இறுதியில் இந்திய அரசுக்கான மகஜர் அரச அதிபரிடம் கையளிக்கப்படும். விடுதலைப் புலிகளுக்கும் மகஜர் ஒன்று கையளிக்கப்படும் என்று ராஜா குகனேஸ்வரன் எம்.பி. தெரிவித்தார். (ம)

## நடிகர் சிவாஜி பெயரில் கட்சி

புதுச்சேரி,ஜுலை20

நடிகர் சிவாஜி பெயரில் புதிய கட்சி சென்னையில் இன்று தொடங்கப்படுகிறது.

இது குறித்து அக்கட்சியின் அமைப்பாளர் டி.சிவராஜ் கூறுகையில், புதிய அரசியல் கட்சியின் நோக்கம், பொதுச் சேவைதான். முன்னதாகக் காஞ்சிப் பெரியவரிடம் ஆசிவாங்குவோம் - என்றார். (ஒ)

## விமானத்தை கடத்த முயற்சி!

148 பேருடன் சென்ற கொலம்பிய பயணிகள் விமானத்தைக் கத்தியைக் காட்டி ஒருவர் கடத்த முயன்றார். இதனையடுத்து அந்த விமானம் அவசரமாக ஸ்பெயினின் விமானப்படை விமானத்தளத்தில் தரையிறக்கப்பட்டது.

கொலம்பியத் தலைநகர் பொகோடாவிலிருந்து நேற்று ஸ்பெயினின் தலைநகர் மாட்ரிட்டுக்குச் சென்றுகொண்டிருந்த விமானமே கடத்தல் முயற்சிக்கு இலக்கானது.

விமானத்தைக் கடத்த முயன்ற நபர் இறுதியில் கைதுசெய்யப்பட்டதாகக் கூறப்படுகிறது. (ஒ)

## மேற்குக்கரையில் வசிக்கும்
# பலஸ்தீனத் தீவிரவாதிகளின் உறவினர் காஸாப் பகுதிக்கு கட்டாயக் கடத்தல்!
## இஸ்ரேலிய இராணுவம் நடவடிக்கை

லண்டன்,ஜுலை20

இஸ்ரேலியத் தலைநகர் டெல் அவிவில் இடம்பெற்ற தற்கொலைத் தாக்குதல்களையடுத்து பலஸ்தீனத் தீவிரவாதிகளின் மேற்குக்கரையில் வாழும் உறவினர்களைப் பிடித்து காஸாப் பகுதிக்கு இஸ்ரேலிய இராணுவம் வலுகட்டாயமாக அனுப்பி வருகிறது.

இஸ்ரேலியர்கள் மீது நடத்தப்பட்ட தற்கொலைத் தாக்குதல்களில் தாக்குதலாளிகளாகச் செயற்பட்டவர்களின் உறவினர்களையே இஸ்ரேலியப் படையினர் தேடிப்பிடித்து காஸாவுக்கு அனுப்புவதாகக் கூறப்படுகிறது.

அத்துடன் தற்கொலைத் தாக்குதலாளிகளாக செயற்படும் நோக்கத்துடன் இஸ்ரேலுக்குள் ஊடுருவி உள்ளவர்கள் என்று இஸ்ரேலியப் புலனாய்வுத் துறையால் அடையாளம் காணப்பட்டவர்களது உறவினர்களையும் இஸ்ரேலிய இராணுவம் கைது செய்து காஸாவுக்கு கடத்தியுள்ளது. கடந்த இரு நாள்களில் இவ்வாறு 21 ஆண்கள் காஸாப் பகுதிக்கு மேற்குக் கரையிலிருந்து வலுக்கட்டாயமாக கொண்டு செல்லப்பட்டுள்ளனர். தற்கொலைத் தாக்குதலாளிகளின் தந்தை மற்றும் சகோதர உறவுமுறை கொண்டவர்களே இவர்கள்.

பலஸ்தீனருக்கும், இஸ்ரேலியர்களுக்கும் இடையே தற்போதைய மோதல்கள் உருவான பின்னர் தீவிரவாதிகளின் குடும்பத்தவர் மீது இஸ்ரேலிய இராணுவம் நேரடியாக நடவடிக்கை மேற்கொள்வது இதுவே முதற்றடவையாகும்.

இதற்கிடையில், இந்த ஆள்கடத்தல் நடவடிக்கையை நிறுத்தும்படியும் -

சட்ட பூர்வமாக இது பாரியதவறாகும் என்றும் -

இஸ்ரேலிய சட்டமா அதிபர் தமது அரசுக்கு அறிவுறுத்தியுள்ளதாகக் கூறப்படுகிறது.

தீவிரவாதிகளின் உறவினர்களை காஸாவுக்கு கடத்தும் விவகாரம் சட்டபூர்வமானதாக இருந்தால் அதற்குதான் ஆதரவளிப்பதாக இஸ்ரேலிய வெளிவிவகார அமைச்சர் சிமன் பெரஸ தெரிவித்துள்ளார்.

இதற்கிடையில், மேற்குக் கரையில் உள்ள பலஸ்தீன நகரான நப்லஸில் தீவிரவாதிகள் எனக்கருதப்படும் இருவரது வீடுகளை இஸ்ரேலிய இராணுவம் நேற்றுத் தகர்த்து தரைமட்டமாக்கியது.



பலஸ்தீன தீவிரவாதி ஒருவரின் தம்பியாரை வலுக்கட்டாயமாக காஸாப் பகுதிக்கு அனுப்ப இஸ்ரேலியப் படையினர் இழுத்துச் செல்லும் காட்சி

இத்தகைய சம்பவங்கள் இடம்பெறும் போதும் மனித உரிமை அமைப்புகளோ, ஐநாவோ அல்லது பிற நாடுகளோ உடனடியாக எவ்வித கருத்தும் கூறாதமை தமக்குப் பெரிதும் ஏமாற்றமளிப்பதாக பலஸ்தீன நிர்வாக சபையின் பேச்சாளர் ஒருவர் கூறியுள்ளார். (ஒ)

# வறுமை இல்லாத இந்தியா இதுவே எனது இலட்சியம்!
## இந்தியாவின் புதிய ஜனாதிபதி தெரிவிப்பு

புதுடில்லி,ஜுலை20

விரைவில் வறுமை இல்லாத இந்தியாவை உருவாக்குவதே எனது லட்சியம்.

"நாட்டின் 12ஆவது ஜனாதிபதியாக நான் தெரிவு செய்யப்பட்டுள்ளது மகிழ்ச்சியளிக்கின்றது. இத்தருணத்தில் நாட்டுக்கு நான் சொல்வது என்னவென்றால், நமக்குத் தேவை தொலைநோக்குப்பார்வை. அடுத்த 20 ஆண்டுகளில் இந்தியாவை வளர்ச்சியடைந்த நாடாக்க வேண்டும்.

"நான் 6 பிரதமர்களுடன் பணியாற்றியிருக்கின்றேன். அரசியலை எப்படிக் கையாள்வது என்று எனக்கு நன்றாகவே தெரியும். அரசியல் முடிவுகள் தான் எந்தத் திட்டமும் வெற்றியடையக் காரணம். 1982 முதல் நேரடியாகவோ மறைமுகமாகவோ எனக்குத் தொடர்பிருக்கின்றது. இன்று இந்திய செயற்கைக் கோள் வானில் நிற்பது கூட அரசியல் ரீதியாக எடுக்கப்பட்ட முடிவால்தான்.

"எனக்கு எதிரிகள் கிடையாது. எல்லோருமே எனது நண்பர்கள்தான். என்னை எதிர்த்து வேட்பாளரை நிறுத்திய இடதுசாரிக் கட்சியினரும் நாட்டின் வளர்ச்சியைத்தான் விரும்புகின்றனர்.

"நான் எழுதிய இரு புத்தகங்களில் குறிப்பிட்டுள்ளபடி நான் தொடர்ந்தும் நாட்டின் அபிவிருத்திப் பணியில் ஈடுபடுவேன். வறுமை, பசி, பட்டினி ஆகியன இல்லாத ஒரு சுபீட்சமான இந்தியாவை உருவாக்குவதே எனது லட்சியம்" - என்று அவர் கூறினார். (ம)



- இவ்வாறு இந்தியாவின் புதிய ஜனாதிபதியாகத் தெரிவாகியிருக்கும் அப்துல் கலாம் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதித் தேர்தலில் 90 சதவீத வாக்குகளைப் பெற்று பெருவெற்றியீட்டிய பின்னர் செய்தியாளர்களிடம் பேசுகையில் அவர் இதனைத் தெரிவித்தார்.

## பலஸ்தீனருக்கு ஆயுதம் விற்ற இஸ்ரேலியப் படையினர் கைது!

பலஸ்தீனத் தீவிரவாதிகளுக்கு வெடிபொருள்கள் மற்றும் ஆயுதங்களை விற்றதாகக் கூறப்படும் 4 இஸ்ரேலியப் படைவீரர்கள் இஸ்ரேலிய இராணுவப் பொலீஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மேற்குக்கரையில் உள்ள யூதக் குடியிருப்பு ஒன்றில் இந்த 4 இஸ்ரேலியப் படைவீரர்களும் வசித்ததாகவும் -

இஸ்ரேலில் இருந்து மேற்குக் கரைப் பகுதிக்குள் ஆயுதங்கள் மற்றும் வெடிபொருள்களைக் கடத்தி வந்த அவர்கள், அவற்றைப் பலஸ்தீனத் தீவிரவாதிகளுக்கு விற்றதாகவும் -

தெரிவிக்கப்பட்டது.

இந்தப் படை வீரர்கள் இஸ்ரேலின இராணுவ முகாம்களில் இருந்தே ஆயுதங்களையும், வெடிபொருள்களையும் திருடியுள்ளனர்.

கடந்த ஆண்டே இவர்கள் மீது சந்தேகம் எழுந்ததாகவும் - பாரிய அளவில் ஆயுதக் கடத்தல்கள் நிகழ்வதாக இரகசியத் தகவல்கள் ஏற்கனவே கிடைத்ததாகவும் -

இதனைத் தொடர்ந்தே அவர்கள் கைதுசெய்யப்பட்டதாகவும் -

இஸ்ரேலிய வானொலி தெரிவித்தது.

இதற்கிடையில், பலஸ்தீனர்களுக்குச் சொந்தமான லொறிகளை மேற்குக்கரையில் இருந்து இஸ்ரேலிய இராணுவச் சோதனைச் சாவடி ஊடாக சோதனைகள் இன்றி இஸ்ரேலுக்குள நுழைய உதவிய குற்றச்சாட்டின் பேரில் இரு இஸ்ரேலியப் படைவீரர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பலஸ்தீனர்கள் மீதான தனது இராணுவ நடவடிக்கைகளை இஸ்ரேல் தீவிரப்படுத்தியுள்ள சமயத்தில் வெளியாகியுள்ள இத்தகைய தகவல்கள் இஸ்ரேலியர்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளதாகக் கூறப்படுகிறது. (ஒ)

## கலாமின் பதவியேற்பு நிகழ்வில் சென்னை மாணவர் பங்கேற்பு
### அவரது விருப்பத்தின் பேரில்

புதுடில்லி,ஜுலை20

தனது பதவியேற்பு விழாவில் சென்னை பாடசாலை மாணவர்கள் 100பேர் பங்கேற்கும் கலைநிகழ்வு ஒன்று இடம்பெறவேண்டும் என்று அப்துல்கலாம் விருப்பம் தெரிவித்துள்ளார். அவரது விருப்பத்தை இந்திய மத்திய அரசு ஏற்றுக்கொண்டுள்ளது.

புதிய ஜனாதிபதியாக அப்துல் கலாம் எதிர்வரும் 25ஆம் திகதி பதவியேற்கிறார். அவரது விருப்பப்படி அவர் பதவியேற்கும் நிகழ்வில் சென்னை பாடசாலைகளைச் சேர்ந்த 100 மாணவர்கள் கலந்துகொள்ளும் இசை நிகழ்ச்சி நடைபெறும் என்று தகவல் ஒளிபரப்புத்துறை அமைச்சர் சுஷ்மா சுவராஜ் தெரிவித்தார்.

இதற்காக சென்னைப் பாடசாலை மாணவர்கள் 100பேர் எதிர்வரும் 24 ஆம் திகதி புதுடில்லி வரவிருக்கின்றனர். (ம)

## பாக்.அதிபர் வாழ்த்து!

இஸ்லாமாபாத்,ஜுலை20

இந்தியாவின் புதிய ஜனாதிபதியாகத் தெரிவாகியுள்ள அணு விஞ்ஞானி டாக்டர் அப்துல் கலாமுக்கு பாகிஸ்தான் அதிபர் பர்வேஷ் முஷராப் வாழ்த்துத் தெரிவித்துள்ளார்.

தனது வாழ்த்துச் செய்தியை அவர் அப்துல் கலாமுக்கு அனுப்பி வைத்துள்ளார். அந்தக் கடிதத்தில் -

இந்தியா, பாகிஸ்தான் இடையே நிலவும் பதற்றத்தைக் குறைத்து நல்லுறவுகளை ஏற்படுத்தவும் இரு நாடுகளுக்கும் இடையிலான பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவும் அப்துல் கலாமுடன் சேர்ந்து பாடுபட முடியும் என்று தான் நம்புவதாக அவர் தெரிவித்துள்ளார். (ம)

## கலாம் எழுதிய புத்தகம்

சென்னை,ஜுலை20

இந்திய ஜனாதிபதியாகத் தெரிவுசெய்யப்பட்டுள்ள அப்துல் கலாம் எழுதிய 'இந்தியா - 2020' என்ற புத்தகத்தின் தமிழாக்க நூல் கடந்த 45 நாள்களில் 10 ஆயிரம் பிரதிகள் விற்றுள்ளதாக அதை வெளியிட்ட நியூ செஞ்சுரி புத்தக நிலையம் தெரிவித்துள்ளது.

கடந்த முதலாம் திகதி இப்புத்தகம் விற்பனைக்கு வந்தது. (ஒ)

# பெற்றோல் பவுஸர்-பஸ் மோதல்; 70 பேர் உடல் கருகி மரணம்!
## உகண்டாவில் பரிதாபம்

கம்பாலா,ஜுலை20

உகண்டாவில் பெற்றோல் 'பவுசர்' ஒன்றுடன் பயணிகள் பஸ் மோதிக்கொண்டதில் பஸ் தீப்பற்றி எரிந்தது. இதில் பஸ்ஸிலிருந்த 70 பேரும் உடல் கருகி இறந்தனர். நேற்றுமுன்தினம் இரவு இவ்விபத்து நடந்தது.

பெற்றோல் பவுஸரின் 'பிரேக்' சீராக வேலைசெய்யாததே இந்த விபத்துக்குக் காரணம் என்று கூறப்படுகின்றது.

உகண்டாவின் மலைப் பகுதிப் பிரதேசமான மவுண்டோவில் இடம்பெற்ற இந்த விபத்தில் இறந்தவர்களில் 10 வெளிநாட்டுச் சுற்றுலாப் பயணிகளும் அடங்குவர். மலைப்பாதையில் சென்றுகொண்டிருந்த பெற்றோல் 'பவுஸர்' 'பிரேக்' பிடிக்காததால் பாதையை விட்டு விலகி மலைச் சரிவில் விழுந்து உருண்டு கீழேயிருந்த பாதையில் சென்றுகொண்டிருந்த பஸ்மீது விழுந்தது. இதில் பவுஸரில் இருந்த பெற்றோல் அப்படியே பஸ் மீது பாய்ந்தது. இந்தச் சமயத்தில் நெருப்பும் பற்றிக்கொண்டது. இதனால் உயிர்தப்ப வாய்ப்பேதும் இன்றி பஸ்ஸில் இருந்த அனைவரும் பெரும் தீப்பிழம்புக்குள் சிக்கி உடல்கருகினர்.

அண்டை நாடான கொங்கோ குடியரசுக்குப் பெற்றோல் எடுத்துச் சென்ற பவுஸரே விபத்துக்குள்ளானதாகவும் -

கொங்கோவின் ஐ.நா. பணியாளர்களே உயிரிழந்த வெளிநாட்டவர் என்றும் - உகண்டா பொலீஸார் தெரிவித்தனர்.

அவர்களில் இரு இந்தியர், கென்ய நாட்டவர் ஒருவர், ஏழு ஐரோப்பியர்கள் அடங்குவர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஒ)



உகண்டாவில் நடந்த விபத்தில் பயணிகள் பஸ் தீயில் கருகி உருக்குலைந்து கிடக்கும் காட்சி.

### சுவிஸ் விண்ணப்பம்

ஐநாவின் உறுப்பு நாடாக இணைவதற்கு சுவிற்சர்லாந்து தற்போது விண்ணப்பித்துள்ளது.

கடந்த 200 ஆண்டுகளாக சுவிஸ் எந்தவோர் அணியிலும் சேராமல் தனித்து - நடுநிலைமை - வகித்து வந்தது. ஆனால், ஐ.நா. சபையில் அந்த நாடு சேர்வதற்கான அனுமதியை அந்த நாட்டின் நாடாளுமன்றம் கடந்த ஆண்டு வழங்கியிருந்தது. எனினும் தற்போதுதான் ஐ.நாவில் இணைவதற்கான விண்ணப்பத்தை அந்த நாடு சமர்ப்பித்துள்ளது. (ஒ)

## எம். டி. குணசேனவின் புத்தகக் கண்காட்சியும் விற்பனையும்

இடம்: இணுவில் பொது நூலகம்
சனசமூக நிலைய கருத்தரங்கு மண்டபம்
காலம்: இன்று (20.07.2002) சனிக்கிழமை தொடக்கம்
(21.07.2002) ஞாயிற்றுக்கிழமை வரை.
நேரம்: காலை 9.00 - மாலை 6.00 மணிவரை
கலவியாளர், மாணவர், படைப்பாளிகளுக்கு பயன்தரும் நிகழ்வு.
எல்லா நூல்களுக்கும் 10% விலைக்கழிவு.
அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இணுவில் பொது நூலகம்,
சனசமூக நிலையம்.

(6190)

## வேலம்பராய் கண்ணகி அம்மன் கோயில் பரிபாலன சபை அறிவித்தல்

வேலம்பராய் அம்மன் கோயில் பரிபாலனசபை நிர்வாகம் 18.03.2002 ஆம் திகதிய பொதுக்கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத் திற்கிணங்க இந்து கலாசார திணைக்களத்திற்கு பதிவுக்கு அனுப் பப்பட்டு HA/5/JA/914 இலக்கத்தில் 04.06.2002ஆம் திகதி பதிவு செய்யப்பட்டுள்ளது. திருப்பணி வேலைகள் ஆரம்பிக்கப்படவிருப் பதால் உதவிகள், ஆலோசனைகள் வழங்கவிரும்பும் அடியார்கள் பரிபாலன சபைத் தலைவர், கைதடி மத்தி, கைதடி என்ற விலாசத் தில் தொடர்புகொள்ளலாம்.

இராமலிங்கம் பரராஜசேகரம்
பரிபாலனசபைத் தலைவர்.

*வேலம்பராய் கண்ணகி அம்மன் கோயில், கைதடி.*

(6177)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில் 1944 - 05 - 29



விண்ணில் 2001 - 07 - 20

### அமரர் ஜோ.ச.சத்தியநாதன்

*(ஓய்வுபெற்ற கணக்குப் பதிவாளர், பனை அபிவிருத்திச் சபை)*

எங்களின் வழிகாட்டியான
உங்களைப் பிரிந்து ஓராண்டாக
புயற்காற்றில் அகப்பட்ட சிறுதுரும்பாக
நின்று தத்தளிக்கின்றோம்
வந்தொருமுறை வழிகாட்டமாட்டாயா?
ஆவலோடு காத்திருக்கின்றோம் அப்பாவே!

(6169)

*"மடத்துக்கடவை", அல்வாய் மேற்கு, அல்வாய்.*

மனைவி - ச.அன்னலட்சுமி,
மகன் - ச.சத்தியராஜன்.

## 45ஆம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்

மலர்வு 14 - 06 - 1966



உதிர்வு 06 - 06 - 2002

### அமரர் அமரசிங்கம் அன்பழகன்

பிரான்ஸில் சிவபதமடைந்த அன்னாரின் 45ஆம் நாள் அந்தியேட்டிக் கிரியைகள் கடந்த 18ஆம் திகதி வியாழக்கிழமை 465/3, காங்கேசன்துறை வீதி, சிவலிங்கப்புளியடியில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் நடை பெற்றன. பிரான்ஸில் அன்னாரின் இறுதிக்கிரியைகளில் கலந்து கொண்டு அனுதாபம் தெரிவித்தவர்களுக்கும், உதவிகள் புரிந்தவர்களுக்கும், நடை பெற்ற 45ஆம் நாள் நினைவஞ்சலி நிகழ்வில் கலந்துகொண்டு அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்தித்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

*பிரிவால் துயருறும்:*
அம்மா, மாமன்மார், மாமிமார்,
மச்சாள்மார், மச்சான்மார், பெரியப்பாமார்,
சித்தப்பாமார், பெரியம்மாமார், சித்திமார்,
தம்பிமார், தங்கைமார்,
அண்ணாமார், அக்காமார்.

(6175)

## FREE




அனைத்து ப்ரஸியா 50g கிறீமுடன்,
ரூ. 20.00 பெறுமதியான
சினால் சோப் இலவசம்

மரமஞ்சல் - சருமத்தை பொலிவாக்குவதுடன் மென்மையாகவும், அழகாகவும் செய்கிறது.
முருகல் மரம் வெண்ணெய் - சருமத்தில் ஏற்படும் காயங்கள், வெடிப்புகள் என்பவற்றை குணமாக்குவதுடன், சருமத்தை மிருதுவாக்குகிறது.
வெண் சந்தணம் - மேனியை குளிர்ச்சியாக்கி, சரும நோய்களிலிருந்தும் பாதுகாக்கிறது.

PHARMCO MARKETING SERVICES (PVT) LTD.

(C/22999)

## தேவை - சந்தைப்படுத்தல் பிரதிநிதிகள்

இலங்கையில் சின்க் அலுமினிய பலவர்ண கூரைப் பொருள்களை உற்பத்தி செய்து சந்தைப்படுத்தும் மெட்ரூப் (பிறைவேட்) லிமிட்டெட்டிக்கு யாழ்.நகரில் தொழில் செய்வதற்கு சந்தைப்படுத்தல் பிரதிநிதிகள் தேவை.

தகைமைகள்:

1. க.பொ.த. உயர்தரம் சித்தியடைந்தவராக இருத்தல் வேண்டும்.
2. கணிதம் மற்றும் ஆங்கில மொழியில் தேர்ச்சி உடையவராக இருத்தல் வேண்டும்.

முன்னனுபவம் உள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்

விருப்பமுள்ளவர்கள், உங்கள் விண்ணப்பங்களை 26 ஜூலை 2002 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு கீழ்வரும் முகவரிக்கு அனுப்பி வைக்கவும்.

விள.இல.1576,
மே/பா உதயன்,
யாழ்ப்பாணம்.

(சி23002)

METROOF

## இந்த அரிய சந்தர்ப்பத்தை நழுவ விட்டுவிடாதீர்கள்!!!

- வியாபார பங்காளிகளை சந்திக்க
- உங்கள் பொருட்களையும் சேவைகளையும் விற்க
- உங்கள் பொருட்களை காட்சிக்கு வைக்க

வாருங்கள்

## யாழ் வியாபாரக் கண்காட்சி

ஓகஸ்ட்
3ஆம், 4ஆம், 5ஆம்
திகதிகளில்

### யாழ் மத்திய கல்லூரியில்

அனுசரணை
புனர்வாழ்வு, மீழ் குடியமர்வு மற்றும் அகதிகள் அமைச்சு

உடன் கூட்டாக
வடபகுதி புனர்வாழ்வு, மற்றும் மீள் குடியமர்வு அதிகாரசபை

சிடிசி கன்வேன்சன்ஸ் (பிரை) லிமிடட்
38, டட்லி சேனாநாயக்க மாவத்தை,
கொழும்பு-08, இலங்கை
தொலைபேசி: 674950-51,
தொலைநகல்: 674953, 075-332604

மின் அஞ்சல்: jtf@cdcconv.com இணையத்தளம்: www.cdconv.com

(C/23004)

அழையுங்கள் 072 233275

உதயன்

## புலம்பெயர்ந்த ஈழத் தமிழர் விரைந்து செய்யவேண்டியது

லண்டனில் ஈழத் தமிழர்கள் அதிகம் வசிக்கும் ஈஸ்ட்ஹாம் பகுதியில் கடந்த புதன் மாலை தமிழ் இளைஞர் குழுக்கள் இரண்டுக்கிடையே நடந்த அடிதடி, வாள்வெட்டு மோதலில் ஒருவர் பெரும் வெட்டுக்காயங்களுக்கு இலக்கானார்; மற்றொருவரின் பற்கள் நொறுங்கின. வேறு சிலர் காயமடைந்தனர் - என்று தகவல்கள் வெளியாகி இருக்கின்றன.

புலம்பெயர்ந்த ஈழத் தமிழர்கள் வசிக்கின்ற இடங்களில் எல்லாம் வெட்டுக்குத்து, சூடு, அடிதடி என்ற தகவல்கள் பரவலாக வெளியாகிக் கொண்டிருக்கின்றன.

"ஈழத் தமிழரிடையே அடிதடியா? மோதலா? அது வழமையான ஒன்றுதான்" - என்று லண்டன் பொலீஸார் குறிப்பிட்டுக் கூறுமளவுக்கு நமது மக்களின் 'கீர்த்தி' கொடிகட்டிப் பறக்கிறது.

ஈழத்தமிழர்கள் என்றால் ஒரு 'கிரிமினல் சமுதாயம்' என்ற பெயர் வந்துவிடுமோ எனக் கூறும் அளவுக்கு வெளிநாடுகளில் வெளியாகும் செய்திகள் எம்மை அஞ்சவைக்கின்றன.

புலம்பெயர்ந்த நமது மக்கள் - அவர்களது வழித் தோன்றல்கள் - நமது மண்ணின் மாண்பை, கலாசாரத்தை, பண்பாட்டைத் துறந்து, தாம் புகுந்த நாட்டின் கலாசாரத்துக்குள் ஒன்றி, நமக்கு அந்நியமானவர்களாகி விடுவார்களோ என்ற அச்சம் நமது மனதில் ஒருபுறம் நெருடிக் கொண்டிருக்க, மறுபுறத்தில் புகுந்த நாட்டில் அவர்கள் கொள்ளும் சந்நதம் - வீராவேசம் - பொதுவாகவே நமது சமூகத்துக்குக் கெட்ட பெயரை வாங்கித் தருவதாக அமைந்து விடுகின்றது.

"அடைக்கலம் புகுந்த எங்கள் நாட்டிலேயே இவ்வளவு 'அழிச்சாட்டியம்' பண்ணுகின்றவர்கள், தங்கள் தாய் நாட்டில் எவ்வளவு அட்டகாசம் பண்ணுவார்கள்?" - என்று குறிப்பிட்டு நமது மண்ணுக்கும் புனிதமான நமது மண்ணின் விடுதலைப் போராட்டத்துக்கும் இவர்கள் மறைமுகமாகத் தேடிக்கொடுக்கும் அபகீர்த்தி நமது மக்களின் மனதை நோகடிக்க வைப்பதாகும்.

புலம்பெயர்ந்த பின்னரும் மனதாலும், செயலாலும், தொழிலாலும் தன் மக்களைப் பற்றியே சிந்தித்துக் கொண்டும், செயற்பட்டுக் கொண்டும் தங்களையே ஆகுதியாக்கி, விடுதலை வேள்விக்காகப் பெரும் தொண்டாற்றிவரும் உத்தம ஈழத் தமிழ் மக்களுக்கு மத்தியில்தான் இப்படி ஓர் உதவாக்கரைச் சமூகமும் வேர்விட்டுப் பரந்து நிற்கின்றது.

எங்கெல்லாம் ஜனநாயகத்தின் பெயரால் அளவுக்கு அதிகமாகச் சுதந்திரம் வழங்கப்பட்டுள்ளதோ, எங்கெங்கெல்லாம் நமது மண்ணின் விடுதலைச் சக்தியான புலிகள் அமைப்பு இயக்க ரீதியாகச் செயற்படுவதற்குத் தடைசெய்யப்பட்டிருக்கின்றதோ அந்தந்த நாடுகளில் எல்லாம் நமது ஈழத்தமிழ்ச் சமூகம் முக்கிய இரண்டு பிரச்சினைகளை எதிர்கொள்ள வேண்டியதாக இருக்கின்றது.

ஒன்று - இலகுவாகப் பற்றிப் பிடித்துக்கொள்ளும் வன்முறைக் கலாசாரத்தின் தீயவிளைவுகள.

இரண்டு - புலம்பெயர்ந்த நமது மக்களின் சந்ததிக்கு நமது தாய்மொழியிலும், பண்பாட்டிலும், ஈழத்தமிழ்ச் சமூக விழுமியங்களிலும் ஈடுபாடு காட்டாத அந்நியத் தன்மை இலகுவாகத் தொற்றிக்கொள்ளுதல்.

இந்த இரண்டு சிக்கல்களில் இருந்தும் புலம்பெயர்ந்த நமது ஈழத் தமிழ் சமூகத்தை விடுவிப்பதற்கு வரையறை கொண்ட - அமைப்பு ரீதியான - ஸ்தாபனங்கள் அவசியமாகின்றன.

புலம்பெயர்ந்த நமது ஈழத் தமிழர்களின் வழித் தோன்றல்களுக்கு நமது தாயகத்தின் இருப்பை - மாண்பை - கலாசாரத்தை - மொழியை - பற்றியெல்லாம் எடுத்துக்கூறி, உணர்த்தி, அவற்றில் நம்மவர்களை முழு ஈடுபாடு கொள்ளவைக்கும் அதே சமயம், அவர்கள் வழி தவறியும் வன்முறைக் கலாசாரத்துக்குள் சிக்காமல் தடுத்துப் பேணி வழிகாட்டவும் வேண்டும்.

புலம்பெயர்ந்த மக்கள் விரைந்து - ஒன்றிரண்டு - சர்வதேச ரீதியில் இணைந்து - ஆராய்ந்து - திட்டம் வகுத்து - செயற்படவேண்டிய அவசர, அவசிய விவகாரம் இது.

# தமிழ் இளைஞர் குழுக்களிடையே லண்டனில் அடிதடி! வாள்வெட்டு!!

கொழும்பு,ஜூலை20

லண்டன் ஈஸ்ட்ஹாமில் கடந்த புதன்கிழமை மாலை 5 மணியளவில் இரு தமிழ் இளைஞர் குழுக்களிடையே நடந்த அடிதடி, வாள் வெட்டு மோதலில் ஒருவர் வெட்டுக்காயங்களுக்கு இலக்கானார். மற்றொருவரின் பற்கள் நொறுங்கின. வேறு சிலர் காயமடைந்தனர்.

திடீரெனக் கூட்டமாக வந்த தமிழ் இளைஞர் குழு ஒன்று வீதிப் போக்குவரத்தைத் தடை செய்துவிட்டு, அங்கிருந்த தமிழர் ஒருவரின் கடைக்குள் கத்தி, பொல்லுகளுடன் புகுந்து அடித்து நொறுக்கித் தாக்குதல் நடத்தியதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.

தகவல் அறிந்து சம்பவ இடத்துக்கு விரைந்து வந்த லண்டன் பொலீஸார், சில தமிழ் இளைஞர்களை விரட்டிப் பிடித்ததாகக் கூறப்படுகின்றது. எத்தனை இளைஞர்கள் கைது செய்யப்பட்டார்கள் என்ற விவரம் தெரியவரவில்லை.

இந்தச் சம்பவம் குறித்து லண்டன் பொலீஸாரிடம் கேட்டபோது "இது வழமையான மோதல்!" என்று அவர்கள் பதிலளித்தனர்.

அண்மைக்காலமாகவே வெளி நாடுகளில் - குறிப்பாக பிரிட்டனில் வாழும் - புலம் பெயர்ந்த ஈழத்தமிழ் இளைஞர்கள் இடையே மோதல் சம்பவங்கள் அதிகளவில் இடம்பெற்று வருவதாகவும், இத்தகைய மோதல்கள் அங்கு வாழும் ஈழத் தமிழர்கள் அனைவருக்கும் பாதிப்பை ஏற்படுத்துவதாகவும் - கூறப்படுகிறது.

### கொழும்புத்துறைப் பகுதியில்

## ஆனந்தன் வடலி மக்களுக்கு இரவில் விஷமிகளால் தொல்லை

கொழும்புத்துறை ஆனந்தன் வடலி இராணுவ முகாமை அண்டியுள்ள குடியிருப்புப் பகுதியில் இரவு வேளைகளில் நடமாடும் இனந்தெரியாதோர் சிலரின் சேஷ்டைகளால் அப்பகுதி மக்கள் பீதியும் அச்சமும் அடைந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

கடந்த சனிக்கிழமை நள்ளிரவில் இப்பகுதியில் உள்ள மூன்று குடியிருப்பு வளவுகளுக்குள் நடமாடிய சிலர், வீடுகளின் ஜன்னல்கள் ஊடாக உள்ளே எட்டிப்பார்ப்பதை அந்த வீடுகளில் உள்ளோர் அவதானித்ததாகவும் -

காலையில் வீடுகளைச் சுற்றி சப்பாத்து தடங்களைக் காண முடிந்ததாகவும் -

இது சம்பந்தமாக அருகில் உள்ள இராணுவ முகாம் பொறுப்பாளரிடம் மக்கள் சென்று முறையிட்டதாகவும் - கூறப்படுகிறது. இச்சம்பவம் நடந்து இரண்டு நாள்களின் பின்னர் வேறு சில வீடுகளுக்குள் திடீரெனச் சிலர் நுழைந்ததாகவும் -

அப்போது அந்த வீடுகளில் உள்ளவர்கள் அலறிச் சத்தமிட்டதால் அந்த விஷமிகள் ஓடி மறைந்துவிட்டதாகவும் - மேலும் தெரிவிக்கப்பட்டது.

யுத்தத்தினால் சேதமடைந்த தமது வீடுகளில் பாதுகாப்பான கதவுகள், ஜன்னல்கள் இன்றி வாழ்ந்துவரும் மக்கள் இவ்வாறான அச்சுறுத்தல்களால் அச்சத்துடனும் மிகுந்த மனக் கிலேசத்துடனும் இரவுப் பொழுதுகளை கழித்து வருவதாகக் கூறப்படுகிறது.

## வைகோ கைதைக் கண்டித்து திருமலையில் உண்ணாவிரதம்

### நாளைமறுதினம் நடக்கிறது

திருகோணமலை,ஜூலை20

ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ கைது செய்யப்பட்டதைக் கண்டித்தும் அவரை விடுதலை செய்யுமாறு கோரியும் திருகோணமலையில் நாளைமறுதினம் திங்கட்கிழமை உண்ணாவிரதமும் கண்டனக் கூட்டமும் இடம்பெறவுள்ளன.

அன்றையதினம் காலை 8 மணி தொடக்கம் பிற்பகல் 4 மணிவரை திருகோணமலை விசுவநாத சிவன் ஆலய முன்றலில் உண்ணாவிரதமும் அதன் முடிவில் கண்டனப் பொதுக்கூட்டமும் இடம்பெறவுள்ளன.

திருகோணமலை மாவட்ட தமிழ் பேசும் மக்களின் அமைப்புகள் இணைந்து நடத்தும் இந்த உண்ணா விரதம் மற்றும் கண்டனக் கூட்டத்தில் பாடசாலைகள், திணைக்களங்கள், தனியார் நிறுவனங்கள், கூட்டுத்தாபனங்கள், கடைகள், வெகுஜன அமைப்புக்கள் அனைத்திலும் ஆதரவு திரட்டப்பட்டுள்ளதாகக் கூறப்படுகிறது. (ஒ-290)

## தென்மராட்சி அதிபர்களுக்கான கூட்டம்

2003ஆம் ஆண்டுக்கான இலவச பாடநூல்கள் மற்றும் இலவச சீருடைத் துணிகள் விநியோகம் தொடர்பான தென்மராட்சிக் கல்விவலய அதிபர்களுக்கான கூட்டம் ஒன்று நாளை மறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

இக்கூட்டத்தில் சகல பாடசாலை களின் அதிபர்களையும் கலந்துகொள்ளுமாறு தென்மராட்சி வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா அறிவித்துள்ளார். (ஒ-10)

# பகிரங்க விவாதத்துக்குத் தயாரா? டக்ளஸுக்கு மகேஸ்வரன் சவால்!

கொழும்பு,ஜூலை20

தொலைக்காட்சியில் பகிரங்க விவாதத்துக்கு வரத் தயாரா? - இப்படி ஈ.பி.டி.பி. செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவிற்கு சவால் விடுத்திருக்கின்றார் அமைச்சர் மகேஸ்வரன்.

"டக்ளஸ் தேவானந்தா தான் சார்ந்த ஊடகம் ஒன்றில் எனக்கு எதிராகப் பொய்த் தகவல்களை வெளியிட்டு விமர்சிப்பதை விடுத்து துணிவிருந்தால் பகிரங்க விவாதத்திற்கு வரட்டும்" என்று அமைச்சர் மகேஸ்வரன் கூறியிருக்கின்றார்.

"அப்படி வந்தால் டக்ளஸின் அரசியலில் மலிந்து கிடக்கும் லஞ்சம், ஊழல், கொலை, கொள்ளை தொடர்பான சகல விவரங்களையும் நான் ஆதாரத்தோடு வெளியிடுவேன்.

"அரசியலுக்கு வரமுன்பே நான் செல்வந்தன். ஆனால், டக்ளஸ் அரசியலுக்கு வந்த பின்புதான் பணத்தைச் சுருட்டிக் கொண்டார். அமைச்சர் பதவியில் இருந்தபோது டக்ளஸ் சம்பாதித்த பணத்தின் விவரங்களை அம்பலப்படுத்த நான் தயாராக இருக்கிறேன்.

"நான் எனது மக்கள் முன்னிலையில் நேரில் சென்றுதான் அரசியலில் ஈடுபடுகிறேன். வன்னி சென்று புலிகளைச் சந்தித்து வருகிறேன். ஆனால், டக்ளஸ் தேவானந்தாவினால் அவ்வாறு அரசியலில் ஈடுபட முடியாது. பம்பலப்பிட்டி லொயட்ஸ் வீதியில் மண்மூடைகளுக்கு மத்தியில் பதுங்கியிருந்துதான் அவர் அரசியல் நடத்துகிறார். என்மீது அரசியல் ஊழல்கள் இருப்பதாக டக்ளஸ் நிரூபிப்பாரானால் நான் உடனடியாகவே அமைச்சர் பதவியிலிருந்தும் அரசியலில் இருந்தும் ஒதுங்கிக் கொள்வேன். எவ்வாறாயினும் டக்ளஸின் அரசியல் ஊழல்களையும் கொள்ளைகளையும் மக்களுக்கு பகிரங்கப்படுத்துவதே எனது நோக்கம்".

இப்படி செய்தி ஊடகங்களுக்கு அமைச்சர் மகேஸ்வரன் தெரிவித்திருக்கிறார். (ஒ)

## சுயாதீன ஆணைக்குழுவுடன் ஆசிரியர் சங்கம் சந்திப்பு

யாழ்ப்பாணம்,ஜூலை20

வேலணைத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை நடத்திவரும் சுயாதீன ஆணைக்குழுவின் பிரதிநிதிகளை இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கத்தின் தூதுக்குழு நேற்று யாழ்.செயலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளது.

இக்கலந்துரையாடலின்போது சுயாதீன ஆணைக்குழுவின் பிரதிநிதிகளின் கவனத்துக்கு சில விடயங்கள் தமிழர் ஆசிரியர் சங்கத்தினால முன்வைக்கப்பட்டதாக இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கத்தின் சிரேஷ்ட துணைப் பொதுச்செயலாளர் த.பஞ்சலிங்கம் தெரிவித்தார்.

புரிந்துணர்வு உடன்படிக்கையின் பிரகாரம் 160 நாள்களுக்குள் சகல் பாடசாலைகளிலும் உள்ள படையினர் வெளியேற வேண்டும் -

இதுவரைகாலமும் படையினர் வெளியேறிய பாடசாலைகளை மீளவும் ஆரம்பிப்பதற்கு வசதியாக பாடசாலைச் சுற்றாடலில் உள்ள வீடுகளில் தங்கியிருக்கும் படையினரும் அகல வேண்டும் -

பாடசாலைகளுக்கு அருகில் அமைந்துள்ள படையினரின் சோதனைச் சாவடிகளும் அகற்றப்படவேண்டும் - என்பன உள்ளிட்ட சில விடயங்களை தாம் சுயாதீன ஆணைக்குழுவினரிடம் சுட்டிக் காட்டியதாக அவர் மேலும் தெரிவித்தார்.

இந்தச் சந்திப்பில் இலங்கைத் தமிழா ஆசிரியர் சங்கத்தின் சிரேஷ்ட துணைப் பொதுச செயலாளர் த.பஞ்சலிங்கத்துடன் சங்கத்தின் யாழ். மாவட்டச் செயலாளர் க.குமாரசாமியும் கலந்துகொண்டார்.(ஒ-10)

### நாளை

ஆடி 05
ஞாயிற்றுக்கிழமை
(21.07.2002)
திதி : துவாதசி
பிற்பகல் 4.30 வரை.
நட்சத்திரம்: கேட்டை
முன் இரவு 7.24 வரை
பிரதோஷ விரதம்
சுபநேரம் : 9.01 - 10.31
ராகுகாலம் : 4.31 - 6.01
(பழைய நேரப்படி)

### உதயவாக்கு

தேடுதல் இருக்கும் வரை வாழ்க்கை இனிக்கும்.

## ஐ.நா.உலக உணவுத்திட்டம் வடக்கில் மீண்டும் ஆரம்பம்

கொழும்பு,ஜூலை20

வடபகுதியில் இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்த ஐ.நா.உலக உணவுத் திட்டப் பிரிவின் நடவடிக்கைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. ஐ.நா.உலக உணவு ஸ்தாபனம் இதனை அறிவித்துள்ளது.

யுத்தம் காரணமாக வீடுகளை இழந்து அகதி முகாம்களில் வாழும் மக்களுக்கு மீண்டும் எதிர்வரும் ஓகஸ்ட் மாதத்திலிருந்து இத்திட்டத்தின் கீழ் இலவசமாக உலர் உணவு விநியோகம் செய்யப்படும் எனத் தெரிவிக்கப்பட்டது.

கடந்த டிசெம்பர் மாதத்துடன் இலவச உலர் உணவு விநியோகத்தை இந்த நிறுவனம் நிறுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஒ)

## தாபன விதிக்கோவை தமிழ்மொழியில் இல்லை

கொழும்பு, ஜூலை20

தாபன விதிக் கோவையின் முதலாம் தொகுதி தமிழ் மொழியில் இல்லாமையினால் பல்வேறு பரீட்சைகளுக்குத் தோற்றும் தமிழ்மொழி மூல அரச ஊழியர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்க வேண்டியுள்ளது. தாபன விதிக் கோவையின் முதலாம் தொகுதி மட்டும் மிக நீண்ட காலமாக மீள் பதிப்புச் செய்யப்படாமையினால் அரச ஊழியர்களுக்கு இதனைப் பெற்றுக்கொள்ள முடியாதுள்ளது.

இதேவேளை, தாபன விதிக் கோவையின் முதலாம் தொகுதி, அரசாங்க வெளியீட்டுப் பணியகத்தில் சிங்கள, ஆங்கில மொழிகளில் தாராளமாகக் கிடைக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

அரசாங்க அச்சகத் திணைக்களம், தாபன விதிக் கோவையின் முதலாம் தொகுதியை தமிழ் மொழியில் மாத்திரம் மிக நீண்ட காலமாக மறுபதிப்புச் செய்யவில்லை.

இது தமிழ்மொழி மூல அரச ஊழியர்களைப் புறக்கணிப்புச் செய்யும் செயலாகும் என இந்த ஊழியர்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (ஒ)

## FLASH VACANCY
## COMMUNITY FACILITATORS
## VACANCY

The Durable Solution Assessment Team as a part of UNHCR Project Implementation is looking for: Community Facilitators.

Candidates are expected to meet the following requirements:

- Secondary Education with at least 3 years experience in Social Services Activities.
- Ability in originating project proposals in the field of Human Rights with extended report writing skills.
- Field work experience.
- Good Computer skills.
- Languages: Fluency in: Tamil, English (spoken and written), knowledge of Sinhala language would be an asset.
- Good inter-personal skills, team work and flexibility.

***Applications and C.V. should be forwarded to the address below, on or before: 24th July 2002.***

**UNHCR**
***223, Temple Road, Jaffna.***

(6133)


## ஓராண்டு நினைவஞ்சலி

மலர்வு 18 - 03 - 1923



உதிர்வு 01 - 07 - 2001

### அமரர் மார்க்கண்டு யோகம்மா

திதி: ஏகாதசி

அன்போடும் பண்போடும் வாழ்ந்தீர்கள்
ஆதரவாய் அரவணைத்து மகிழ்ந்தீர்கள்
இன்று ஓராண்டு மறைந்து போனாலும்
இதயத்தில் உங்கள் நினைவு இணைந்தே இருக்கும்.

*உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

பிரிவால் துயருறும்:
பிள்ளைகள், மருமக்கள்,
சகோதரிமார், பேரப்பிள்ளைகள்.

*463, நாவலர் றோட்,*
*அரியாலை, யாழ்ப்பாணம்.*

(6143)

## அந்தியேட்டி, ஆத்மசாந்தி
## பிரார்த்தனை அழைப்பு

பிறப்பு 28 - 08 - 1912



இறப்பு 23 - 06 - 2002

### அமரர்
### கந்தையா வயித்திலிங்கம்

(கல்லடி)

அவர்களின் அந்தியேட்டி, ஆத்மசாந்திப் பிரார்த்தனை அன்னாரது இல்லத்தில் 23.07.2002 செவ்வாய்க்கிழமை அதிகாலை நடைபெறும். இந்நிகழ்வுகளிலும் அதனைத் தொடர்ந்து மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் வேண்டுகின்றோம்.

மனைவி -அழகம்மா,
மக்கள் -வ.பூபாலசுந்தரம் (ஓய்வுபெற்ற அதிபர், J.P.),
இராசசுந்தரம் (திருமலை),
அழகலிங்கம் (ஜேர்மனி),
தியாகலிங்கம் (கனடா),
ரவீந்திரராசா (கனடா),
திருமதி த.ஈஸ்வரி,
திருமதி சி.இராசேஸ்வரி,
திருமதி ச.பரமேஸ்வரி,
மருமக்கள், பெறாமக்கள்.

*தட்டான் கடவை,*
*பாரதி வீதி,*
*கம்பர்மலை,*
*உடுப்பிட்டி வடக்கு,*
*வல்வெட்டித்துறை.*

(6032)

## நோர்வே தூதருடன் அமைச்சர் பீரிஸ் சந்திப்பு!

கொழும்பு,ஜூலை20

சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிப்பது குறித்து அமைச்சர் ஜி.எல். பீரிஸ், இலங்கைக்கான நோர்வே தூதர் ஜோன் வெஸ்ட்பேர்கைச் சந்தித்து கடந்த செவ்வாய்க்கிழமை கலந்துரையாடியுள்ளார்.

சமாதானப் பேச்சுக்களை விரைவாக ஆரம்பிப்பது குறித்து இந்தச் சந்திப்பில் இருவரும் விரிவாக ஆராய்ந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. (ம-9)

## மெய்வன்மைப் போட்டி

யாழ்ப்பாணம்,ஜூலை20

தேசியக் கல்வியியற் கல்லூரியின வருடாந்த இல்ல மெய்வன்மைப் போட்டி எதிர்வரும் 27ஆம் திகதி சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு தேசிய கல்வியியற் கல்லூரி மைதானத தில் கல்லூரியின் பீடாதிபதி சி.கமல நாதன் தலைமையில் நடைபெறும்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக கோப்பாய் பிரதேச செயலர் கே.கேதீஸ்வரன் கலந்துகொள்வார். (ஒ-180)

## அமெரிக்கப் பிரஜை கொழும்பில் மர்ம மரணம்!

கொழும்பு,ஜூலை20

கொழும்பு கோட்டை விடுதியொன்றில் தங்கியிருந்த அமெரிக்கப் பிரஜையொருவர் மர்மமான முறையில் உயிரிழந்துள்ளார்.

கோட்டை பிரிஸ்டல் வீதியில் உள்ள விடுதி ஒன்றில் தங்கியிருந்த கான்ஸ் (வயது 35) என்ற அமெரிக்கப் பிரஜையொருவரே சடலமாக மீட்கப்பட்டார் என்று பொலீஸார் தெரிவித்தனர்.

அளவுக்கு அதிகமான மதுபானம் அருந்திய நிலையில் அவர் இறந்து கிடந்ததாகத் தெரிவித்த பொலீஸார் சடலத்தை கொழும்பு தேசிய வைத்தியசாலையில் சேர்த்தனர்.

மரணத்திற்கான காரணம் குறித்து மேலதிக விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. (ம)

## கிறிஸ்தவ ஆசிரியருக்கு

யாழ்ப்பாணம்,ஜூலை20

யாழ். மாவட்டப் பாடசாலைகளில் 4,5,10,11 ஆகிய தரங்களுக்கு றோமன் கத்தோலிக்கம் அல்லாத கிறிஸ்தவ பாடம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான கருத்தரங்கு ஒன்று எதிர்வரும் 22ஆம் திகதி திங்கட்கிழமை யாழ். மத்திய கல்லூரியில் உள்ள கேட்போர் கூடத்தில் நடைபெறவுள்ளது.

காலை 8.30 மணிமுதல் மாலை 5மணிவரை நடைபெறவுள்ள இந்தக் கருத்தரங்கில் கலந்துகொள்வதற்கென தேசிய கல்வி நிறுவன அதிகாரிகள் வருகைதரவுள்ளனர்.

எனவே, சம்பந்தப்பட்ட ஆசிரியர்களை இதில் கலந்துகொள்ளுமாறு யாழ். மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் சி.சிவராஜா அறிவித்துள்ளார். (ஒ-8)

## திரைப்பட தொழில்நுட்ப இலவச வகுப்புகள்

யாழ்ப்பாணம்,ஜூலை20

'சலன சித்திரம் - யாழ்ப்பாணம்' திரைக்கலைச் சங்கத்தினரால் தென்மராட்சியில் இலவசத் திரைப்படத் தொழில்நுட்ப வகுப்புகள் இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிற்றுக்கிழமையும் பிற்பகல் 3 மணிக்கு மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலயத்தில் நடைபெறவுள்ளன.

சினிமா வரலாறு, திரைக்கதையாக்கம், இயக்கம், ஒளிப்பதிவு, நடிப்பு, திரையிசை ஆகிய தலைப்புக்களில் இவ்வகுப்புகள் நடைபெறவுள்ளன. இவ்வகுப்புகளின் இறுதியில் பயிற்சியுடன் சான்றிதழும் வழங்கப்படும். ஆர்வமுள்ள இருபாலாரும் கலந்து கொள்ளலாமென சலன சித்திரம் தென்மராட்சிக் கிளைப் பொதுச் செயலாளர் ச.சுவர்ணா தெரிவித்துள்ளார். (ஒ)


**ரூபா 5,00,000**

மாதச்சம்பளமாக பிறதேசத்தில் உழைக்கும் திறமையும் தகுதியும் பெற A/L படித்தவர்களாயிருக்க வேண்டும். மூன்று வருடப் பயிற்சி, 24 சோதனைகள், செலவு 4 1/2 லட்சம்.

தொடர்பு:
**திருஞானாஸ் கட்டடம்**
மத்திய பேருந்து நிலைய முன்பாக
141, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.


## முதலாவது பிறந்தநாள் வாழ்த்து




### செல்வன் ரங்கநாதன் விஷ்ணுசாந்
### (VISHNUZANTH)

லண்டனில் வசிக்கும் திரு-திருமதி ரங்கநாதன் - பகீரதி தம்பதிகளின்

### செல்வப் புதல்வன் விஷ்ணுசாந்

தனது முதலாவது பிறந்ததினத்தை இன்று (20.07.2002) சனிக்கிழமை லண்டனிலுள்ள தனது இல்லத்தில் வெகுவிமரிசையாகக் கொண்டாடுகிறார். இவரை அன்பு அப்பா, அம்மா, தாத்தா, அம்மம்மா, அப்பப்பா, அப்பம்மா, பெரியப்பா, பெரியம்மா, சித்தப்பாமார், சித்திமார், மாமாமார், மாமிமார், மச்சான், மச்சாள் மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் பல்கலையும் கற்று பல்லாண்டுகாலம் நலமுடன் வாழ வாழ்த்துகின்றார்கள்.

*தகவல்:*
**சி.சுப்பிரமணியம்**
*(தாத்தா).*

*ஆறுமுகம் வீதி,*
*நுணாவில் மேற்கு,*
*சாவகச்சேரி.*

(6104)

## தொண்டமானாறு
## செல்வச்சந்நிதி ஆலயம்
## வியாபாரிகளுக்கான அறிவித்தல்

எதிர்வரும் (08.08.2002) வியாழக்கிழமை பின்னிரவு 3.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும் செல்வச்சந்நிதி முருகன் ஆலய வருடாந்த உற்சவ காலங்களில் ஆலய வீதிகளில் வியாபாரம் செய்வது முற்றாகத் தடைசெய்யப்பட்டுள்ளது. வியாபாரிகள் சிரமங்களைத் தவிர்க்க முன்கூட்டியே தங்களுக்குரிய இடங்களைத் தனியாரிடம் பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

திருவிழா நிர்வாகம்,
அரியரத்தின ஐயர் லோகேஸ்வர ஐயர்.

செல்வச்சந்நிதி,
தொண்டமானாறு. (5781)

## அறிவித்தல்

- ★ **17.07.2002 புதன்கிழமை நாள்களில் வழமைபோல் கடை திறக்கலாம்.**
- ★ **21.07.2002இல் இருந்து ஞாயிற்றுக்கிழமை லீவுநாள்.**
- ★ **நிலையம் காலை 7.30 மணிக்குத் திறந்து இரவு 8.00 மணிக்கு பூட்டவேண்டும் (புதியநேரம்).**
- ★ **கிராமிய தொழில் செய்பவர்களுக்கும் ஞாயிறு லீவுநாள்.**
- ★ **மேற்குறிப்பிட்ட விதிமுறைகளை மீறுவோருக்கு 1000/= அபராதம் விதிக்கப்படுவதுடன், மீறுவோரின் பெயர் விவரம் பத்திரிகையிலும் பிரசுரிக்கப்படும்.**

**யாழ்.மாவட்ட**
**சிகை ஒப்பனையாளர் சங்கம்,**
**யாழ்ப்பாணம்.**

அல்பேட்
செயலாளர்.

(5982)

## 31 ஆம் நாள் நினைவஞ்சலியும்
## அந்தியேட்டி அழைப்பும்

தோற்றம் 03 - 12 - 1937



மறைவு 20 - 06 - 2002

### திருமதி கமலேஸ்வரி கதிர்காமநாதன்

இன்று (20.07.2002) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறும அந்தியேட்டிக்கிரியைகளிலும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும், மதியபோசனத்திலும் கலந்துகொள்ளுமாறு உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.*

பிரிவால் துயருறும்:
கணவர், பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

*பாடசாலை வீதி,*
*தாவடி தெற்கு.*

(6066)

## ஈழத்தமிழர்கள் மீது
# வன்முறை திணிக்கப்பட்டதாலேயே எதிர்ப்பு வன்முறை தலைதூக்கியது
## திருமலைப் பொறுப்பாளர் ரூபன் உரை

திருகோணமலை,ஜூலை20

சிங்களப் பேரினவாதிகள் தொடர்ச்சியாக வன்முறைகளைத் தமிழர் மீது கட்டவிழ்த்து விட்டதாலேயே - அஹிம்சை என்பதற்கு இடமில்லாத நிலையில் - நாம் எதிர் வன்முறையைக் கையாளவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது.

கடந்த 15ஆம் திகதி திருகோணமலை ஸ்ரீ கோணேஸ்வரா இந்துக் கல்லூரியில் நடைபெற்ற லெப்டினன்ட் சீலனின் 19ஆவது நினைவு நாள் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையில் திருகோணமலை மாவட்ட விடுதலைப் புலிகளின் அரசியற்றுறைப் பொறுப்பாளர் ரூபன் கூறினார்.

ரூபன் தொடர்ந்து பேசுகையில்:-

லெப்டினன்ட் சீலனின் 19ஆவது தின நிகழ்வு திருகோணமலையில் முதன்முதலாக நடைபெறுகிறது.

புரிந்துணர்வு உடன்படிக்கையை புலிகள் மீறிவிடுவார்களோ என்று சில தமிழ்மக்கள் உட்பட பலரது மனதிலும் ஐயம் உள்ளது. குழப்பத்தை ஏற்படுத்துவதற்காகக் கையொப்பம் இடப்படவில்லை. முதன் முதலில் போர் நிறுத்தப்படவேண்டும் என்று கூறியதோடு மட்டுமல்லாது, ஒரு தலைப்பட்சமான யுத்தநிறுத்தத்தில் ஈடுபட்டு பேச்சுவார்த்தை இடம்பெறவேண்டும் என்று காட்டியவரும், முதன் முதலில் ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டதும், மூன்றாவது மத்தியஸ்தம் வேண்டும் என்று கூறியவரும் தலைவர் பிரபாகரனே.

இந்நிலையில், நாம் உடன்படிக்கையை மீறி மீண்டும் யுத்தத்தைத் தொடங்கமாட்டோம். எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் 2ஆம் திகதியுடன் உடன்படிக்கை கைச்சாத்திட்டு 160 நாள்கள் பூர்த்தியாகின்றன. ஆயினும் சில இடங்களில் இருந்து படைகள் வாபஸ் பெறுவதற்கு மறுக்கின்றன. அவர்களை அனுப்புவதற்கு அரசாங்கத்தாலும் முடியவில்லை. இப்படிப்பட்டவர்கள் அஹிம்சை ரீதியாகப் போராடுபவர்களுக்கு சமாதானம் கொடுப்பார்களா?

நாம் கொழும்பில் இருக்கும் படைகளை விலகச் சொல்லவில்லை. எமது தாயக பூமியில் தலைவலி தருபவர்களையே விலகச் சொல்கின்றோம். பாடசாலைகள், வணக்கஸ்தலங்கள் ஆகியவை இராணுவ முகாம்கள் அல்ல.

தமிழீழ விடுதலைப் புலிகளால் புரிந்துணர்வு உடன்படிக்கை சிதைந்தது என்ற அவப் பெயரைப் பெற்றுத்தர மாட்டோம். தமிழர்களுக்கு விரோதமான நடவடிக்கைகளிலும் ஈடுபடமாட்டோம். அதற்காகத்தான் மலையகத் தலைவர்களோடும், முஸ்லிம் தலைவர்களோடும் பேச்சுக்கள் இடம்பெற்றன. பல்வேறு துரதிர்ஷ்டவசமான சம்பவங்கள் நடந்தும் நாம் பொறுமை காத்தது எமது பலவீனம் அல்ல. எப்படியாவது எம்மைச் சண்டைக்கு இழுத்து, உடன்படிக்கையைக் குழப்பவைத்து, சர்வதேச சமூகத்தைத் தம்பக்கம் திரும்பப் பலர் கங்கணம் கட்டிக்கொண்டு நிற்கின்றனர். இம்முறை அது பலிக்காது - என்றார். (ஒ-290)

## விவசாய சம்மேளனம் பொதுக்கூட்டம்

யாழ்ப்பாணம்,ஜூலை20

அரியாலை விவசாய சம்மேளத்தின் வருடாந்த பொதுக்கூட்டம் இன்று சனிக்கிழமை காலை 10 மணிக்கு அரியாலை நீர்நொச்சி தாழ்வு விநாயகர் ஆலயத்தில் தலைவர் சு.மோகனதாஸ் தலைமையில் நடைபெறும். (ம-180)

## தமிழர் பேரவை மாநாடு

யாழ்ப்பாணம்,ஜூலை20

சென்னையில் இன்றும் நாளையும் இடம்பெறவுள்ள தமிழர் பேரவை மாநாட்டில் தோட்ட கட்டமைப்பு அமைச்சர் பெ.சந்திரசேகரனும், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தலைவர் அ.விநாயகமூர்த்தியும் இ.தொ.க. செயலாளர் எம்.எஸ். செல்லச்சாமியும் பங்குபற்றவிருக்கின்றனர்.

பழ.நெடுமாறன் தலைமையில் இடம்பெறும் இந்த மாநாட்டில் 52 நாடுகளில் இருந்து பிரதிநிதிகள் பங்கேற்கவிருக்கின்றனர். (ம-3-9)

# ரெலோ உறுப்பினர்கள் இருவருக்கு எதிராக மேல்நீதிமன்றம் பிடியாணை

கொழும்பு,ஜூலை20

தமிழீழ விடுதலை இயக்க (ரெலோ) உறுப்பினர்கள் இருவருக்கு எதிராகப் பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. கொழும்பு மேல் நீதிமன்றம் இந்தப் பிடியாணையைப் பிறப்பித்தது.

கொள்ளுப்பிட்டியிலுள்ள இயக்கத் தலைமையகத்தில் ஒருவரைப் பலவந்தமாகத் தடுத்து வைத்ததாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பாகவே அவர்கள் கைதுசெய்யப்படவிருக்கின்றனர்.

சி.விநோதலிங்கம், தேவநாயகம் ஆகிய இருவருமே இவர்களாவர். நாகலிங்கம் வாகீசன் என்பவரைத் தடுத்து வைத்திருந்தனர் என்று இவர்கள் மீது குற்றஞ்சாட்டப்பட்டிருக்கிறது. (ம)

# வைகோ கைதைக் கண்டித்து மட்டு., மன்னாரில் போராட்டங்கள்

மட்டக்களப்பு,ஜூலை20

மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் வைகோ கைது செய்யப்பட்டதைக் கண்டித்தும் -

அவரை உடன் விடுதலை செய்ய வேண்டும் என்று வற்புறுத்தியும் -

மட்டக்களப்பு, மன்னார் மாவட்டங்களில் நேற்றுமுன்தினம் எதிர்ப்புப் போராட்டங்கள் நடத்தப்பட்டன.

மட்டக்களப்பு மாமாங்கேஸ்வரர் ஆலயத்தில் அன்று காலை 9மணிக்கு ஆரம்பமான அடையாள உண்ணாவிரதம் நண்பகல் 12மணிவரை இடம்பெற்றது.

அதன்பின்னர் அங்கிருந்து புறப்பட்ட கண்டனப் பேரணி காந்தி சதுக்கத்தில் முடிவடைந்தது. மட்டக்களப்பு அரச அதிபரிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது.

தேசிய தமிழ் கூட்டமைப்பு மற்றும் பொது அமைப்புகள் கூட்டாக ஏற்பாடு செய்த இந்த எதிர்ப்புப் போராட்டங்களில் தமிழ்க் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜோசப் பரராஜசிங்கம், ஞா.கிருஷ்ணபிள்ளை, தங்கவடிவேல் ஆகியோரும் பங்குபற்றினர்.

ஆசிரியர்கள், அரச ஊழியர்கள், பொதுமக்கள் என சுமார் 5ஆயிரம் பேர் இந்தப் போராட்டங்களில் பங்கேற்றனர்.

மன்னாரில் செபஸ்தியார் ஆலய முன்றிலில் ஆரம்பமான பேரணி, நகர வீதிகள் ஊடாக செயலகம்வரை சென்று நிறைவடைந்தது.

பொதுமக்கள், மதத்தலைவர்கள், பாடசாலை மாணவர்கள் என 2 ஆயிரம் பேர் இதில் கலந்துகொண்டனர்.

மன்னார் ஆயர் அதிவண. ராயப்பு யோசப் மகஜரை அரச அதிபரிடம் கையளித்தார்.

மகஜரின் பிரதிகள் இந்தியப் பிரதமர் வாஜ்பாய், தமிழக முதல்வர் செல்வி ஜெயலலிதா, ஐ.நா. செயலாளர் நாயகம் கோபி அனான் ஆகியோருக்கும் அனுப்பப்பட்டுள்ளன. (ம-3-9)

# 'வற்'வரி சட்டமூல விவாதம் 24ஆம் திகதி நாடாளுமன்றில்!

கொழும்பு,ஜூலை20

பல்வேறு விதமான சர்ச்சைகளுக்கும், விமர்சனங்களுக்கும் உள்ளாகியிருக்கும் பெறுமதிசேர் 'வற்' வரி தொடர்பான சட்டமூலம் எதிர்வரும் 24ஆம் திகதி நாடாளுமன்றத்தில் விவாதிக்கப்படும்.

அன்றையதினம் காலை 10 மணி முதல் மாலை 5மணிவரை அமர்வுகள் இடம்பெறும்.

கட்சித் தலைவர்களுடன் இது தொடர்பாகப் பேசி முடிவு எடுக்கப்பட்டதாக அமைச்சர் ஜீ.எல். பீரிஸ் கூறினார்.

நாட்டின் பொருளாதாரம், அபிவிருத்தி, உள்ளூர் உற்பத்தி ஆகியவை தொடர்பாகப் பாரிய மாற்றங்கள் செய்ய வேண்டியுள்ளன. இதற்கு ஏற்ப 38 திருத்தச் சட்டங்கள் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளன.

எதிர்வரும் ஓகஸ்ட், செப்ரெம்பர் மாதங்கள் இத்திருத்தச் சட்ட வரைவுகள் தொடர்பாக விவாதம் தொடர்ச்சியாக வார நாள்களில் இடம்பெறும்.

இதேவேளை -

சுதந்திர தேர்தல் ஆணைக்குழு மற்றும் சுதந்திர பொலீஸ் ஆணைக்குழு தொடர்பான சட்ட வரைவுகளும் விரைவில் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

அரசமைப்புக் கவுன்சில் மூலம் இந்த இரு ஆணைக்குழுக்களிலும் இடம்பெறுவோரின் பெயர்கள் சிபார்சு செய்யப்பட்டு அங்கீகரிக்கப்படும். இவர்களுக்கான பாதுகாப்பு, அதிகாரங்கள் ஆகியவை தொடர்பாக அங்கீகாரம் சட்டரீதியாக வழங்கப்படவேண்டும். இதனால், இது தொடர்பாக நாடாளுமன்றத்தில் ஆராயப்பட்டு சில சட்டத் திருத்தங்களும் மேற்கொள்ளப்படும்.

- இப்படி அமைச்சர் மேலும் கூறினார். (ம)

## 14 வருடங்களின் பின்னர்
# பாழடைந்த கட்டடத்திலிருந்து சரஸ்வதி விக்கிரகம் மீட்பு
## தோப்புக்காட்டில் சம்பவம்

காரைநகர்,ஜூலை20

காரைநகர், தோப்புக்காடு பாலசரஸ்வதி கோயில் எழுந்தருளி விக்கிரகம் நேற்றுமுன்தினம் கண்டெடுக்கப்பட்டுள்ளது.

கடந்த 14 ஆண்டுகளுக்கு முன்னர் இடம்பெற்ற இராணுவ நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்படி பகுதி மக்கள் இடம்பெயர்ந்த பின்னர், இவ்வாலயத்திலும் பூசைகள் நடைபெறாது, பராமரிப்பு இன்றி இருந்ததுடன், ஆலய விக்கிரகங்களும் ஆலயத்திலிருந்து காணாமற்போயிருந்தன.

தோப்புக்காடு பகுதியில் கடந்த வாரம் மீளக்குடியமர்ந்த மக்களின் தேவைகள் தொடர்பாக ஆராய்வதற்காக நேற்றுமுன்தினம் அங்கு விஜயம் செய்த ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் ஜே.எக்ஸ்.செல்வநாயகம் தலைமையிலான குழுவினர் அப்பகுதிகளைச் சுற்றிப் பார்வையிட்டபோதே மேற்படி விக்கிரகம் பாழடைந்த கட்டடம் ஒன்றில் இருந்து மீட்கப்பட்டது.

ஐம்பொன்னாலான இந்த சரஸ்வதி விக்கிரகம் தற்போது ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபரினால் ஸ்ரீ பாலசரஸ்வதி ஆலய பரிபாலகரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (எ-73)

# யாழ்.,வன்னி மாவட்டங்களில் சமூக சேவைத் திட்டங்கள்
## அமைச்சர் ஜயலத் ஆரம்பித்து வைப்பார்

கொழும்பு,ஜூலை20

புனர்வாழ்வு, மீள் குடியமர்வு மற்றும் அகதிகள் விவகாரங்கள அமைச்சர் டாக்டர் ஜயலத் ஜயவர்தன யாழ்ப்பாணம், வன்னி மாவட்டங்களுக்கு விஜயம் செய்து பல சமூக சேவைத் திட்டங்களை ஆரம்பித்து வைக்கவுள்ளார்.

சுமார் 20 வருடங்களின் பின்னர் இவ்வாறான சமூக சேவைத் திட்டங்கள் ஆரம்பிக்கப்படுவது இப்பகுதிகளில் இதுவே முதல்முறையாகும்.

கடந்த 15 ஆம், 16ஆம் திகதிகளில் வவுனியாவில் 'நடமாடும் செயலக சேவையை' அமைச்சர் ஜயலத் நடத்தி வைத்தார். அடுத்துவரும் நாள்களில் நடமாடும் மருத்துவ முகாம் சேவையும் அமைச்சரினால் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளது.

கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, ஒட்டுசுட்டான் பகுதிகளில் கண் சிகிச்சை முகாம்களை அமைச்சர் ஆரம்பித்து வைப்பார். பின்னர் யாழ்ப்பாணம் நூல நிலையக் கட்டடம் மற்றும் சாவகச்சேரி சந்தைக் கட்டடம் ஆகியவற்றின் கட்டட நிர்மாண வேலைகளையும் அமைச்சர் பார்வையிடுவார். (ம)

# பளைப் பிரதேச செயலகத்தின் உப அலுவலகம் ஜூலை 31மூடப்படும்

தென்மராட்சி,ஜூலை20

யாழ்ப்பாணம் மானிப்பாய் வீதியில் இயங்கும் பளை பிரதேச செயலக உப அலுவலகம் எதிர்வரும் 31ஆம் திகதியுடன் மூடப்படும்.

வடமராட்சி புலோலியில் இயங்கிய உப அலுவலகம் பிரதி செவ்வாய்க்கிழமைகள் தோறும் இயங்குமெனத் தெரிவிக்கப்பட்டது.

பளைப் பிரதேச செயலகம் பளையில் மீள இயங்கத் தொடங்கிய பின்னர் புலோலியில் இயங்கிய உப அலுவலகம் திங்கள், செவ்வாய் ஆகிய நாள்களிலும், யாழ்ப்பாணத்தில் இயங்கிய உப அலுவலகம் வியாழன், வெள்ளி ஆகிய தினங்களிலும் திறந்திருந்தமையும் -

வாரத்தில் செவ்வாய்க்கிழமை புலோலி உப அலுவலகத்திற்கும் வெள்ளிக்கிழமை யாழ்ப்பாண உப அலுவலகத்திற்கும் பிரதேச செயலர் சென்று கடமையாற்றி வந்தமையும் -

குறிப்பிடத்தக்கவை. (ஓ-117)

## தீவகக் கல்வி வலயம்
# தமிழ்மொழித் தின போட்டி முடிவுகள்

யாழ்ப்பாணம்,ஜூலை20

தீவக வலயப் பாடசாலைகளுக்கிடையில் நடைபெற்ற வலய மட்ட தமிழ்மொழித் தினப்போட்டி முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

பல்வேறு போட்டிகளில் முதலாம் இடங்களைப் பெற்ற மாணவர்களின் பெயர் மற்றும் பாடசாலைகளின் விவரங்கள் வருமாறு:-

*வாசிப்பு - பிரிவு 1:* நா.யூட்சியானா (யா/கரம்பொன் சிறிய புஸ்பம் மகளிர் வித்தி.), *வாசிப்பு - பிரிவு 2:* மு.ஆரிபா (யா/நயினாதீவு ஸ்ரீ கணேசா கனிஷ்ட வித்தி.), *கதை கூறல் - பிரிவு 1:* ஜெ.ஜெசிந் (யா/வேலணை மேற்கு நடராசா வித்தி.), *எழுத்து - பிரிவு 1:* ச.திவாகர் (யா/அனலைதீவு தெற்கு அ.த.க. பாடசாலை), *கட்டுரை வரைதல் - பிரிவு 2:* ம.சாம்பவி (யா/யாழ்ற்ரன் கல்லூரி), *கட்டுரை வரைதல் - பிரிவு 3:* பெ.ரவிக்குமார் (யா/நயினாதீவு கணேஸ்வரா கனிஷ்ட வித்தி.), *கட்டுரை வரைதல், கவிதை நயத்தல்- பிரிவு 4:* அ.ரஜினா (யா/கரம்பொன் சிறிய புஸ்பம் மகளிர் வித்தி.), *இலக்கியச் சொற்பொழிவு - பிரிவு 5:* பா.வேணுகாராணி (யா/நயினாதீவு மகா வித்தி.), *குறுநாடக ஆக்கம் (திறந்த போட்டி):* மு.துஷ்யந்தி (யா/அனலைதீவு சதாசிவம் மகா வித்தி.), *கவிதை ஆக்கம் - பிரிவு 4:* சி.ராகவன் (யா/யாழ்ற்ரன் கல்லூரி), *சிறுகதை ஆக்கம் - பிரிவு 5:* கு.லலிதா தேவி (யா/நெடுந்தீவு சைவப்பிரகாச வித்தி.), *சிறுகதை ஆக்கம் - பிரிவு 4:* சோ.சுபஸ்திகா (யா/அல்லைப்பிட்டி பராசக்தி வித்தி.), *சிறுகதை ஆக்கம் - பிரிவு 5:* பு.ஜெயரூபன (யா/நயினாதீவு மகா வித்தி.), *பேச்சு - பிரிவு 1:* ப.சுஜிதா (யா/அனலைதீவு தெற்கு அ.த.க. பாடசாலை), *பேச்சு - பிரிவு 2:* சி.பத்மலோஜினி (யா/காரை. சுந்தரமூர்த்தி வித்தி.), *பேச்சு - பிரிவு 3:* க.கவிதா (யா/தம்பாட்டி அ.த.க.பாடசாலை), *பேச்சு - பிரிவு 4:* ஞா.அமலையான் (யா/நெடுந்தீவு மகா வித்தி.), *பேச்சு - பிரிவு 5:* அ.யோசப் அனுசன் (யா/நெடுந்தீவு மகா வித்தி.), *பா ஓதல் - பிரிவு 1:* றோ.கிரிஷாந்தி (யா/புனித மரியாள் பெண்கள் பாடசாலை), *பா ஓதல் - பிரிவு 2:* உ.சாளினி (யா/நாரந்தனை கணேசா வித்தி.), *பா ஓதல் - பிரிவு 3:* தே.சர்மிலன் (வேலணை சைவப்பிரகாச வித்தி.), *பா ஓதல் - பிரிவு 4:* ச.தவக்குமார் (யா/கலைநிதி அ.தியாகராசா ம.ம.வி.), *பா ஓதல் - பிரிவு 5:* ச.அனுசா (யா/கரம்பொன் சிறிய புஸ்பம் பெண் பாட.), *இசையும் அசைவும் - பிரிவு 1:* ப.பவுஸ்கினா (யா/எழுவைதீவு றோ.க.வித்தி.), *இசை தனி - பிரிவு 2:* ஆ.மேரிலோஜினி (யா/கரம்பொன் சிறிய புஸ்பம் மகளிர் வித்தி.), *இசை தனி - பிரிவு 3:* செ.வேணுகா (யா/யாழ்ற்ரன் கல்லூரி), *இசை தனி - பிரிவு 4:* கோ.சுகந்தினி (யா/யாழ்ற்ரன் கல்லூரி), *இசை தனி - பிரிவு 5:* சு.தவலோசனா (யா/கலைநிதி அ.தியாகராசா ம.ம.வி.), *இசை குழு - பிரிவு 1:* (யா/நெடுந்தீவு மகா வித்தி.), *இசை குழு - பிரிவு 2:* யா/வேலணை சேர்.வை.துரைசாமி ம.ம.வி.), *நடனம் தனி - பிரிவு 1:* ந.சயந்தா (யா/கரம்பொன் சண்முகநாத மகா வித்தி.), *நடனம் தனி - பிரிவு 2:* இ.தர்சினி (யா/கரம்பொன் சிறிய புஸ்பம் மகளிர் வித்தி.), *நடனம் தனி - பிரிவு 3:* இ.சோபியா (யா/புனித மரியாள் பெண்கள் பாடசாலை), *நடனம் தனி - பிரிவு 4:* தி.பவிதா (யா/கலைநிதி தியாகராசா ம.ம.வி.), *நடனம் தனி - பிரிவு 5:* சு.சுகுமார் (யா/வேலணை சேர்.வை. துரைசாமி ம.ம.வி.), *நடனம் குழு - பிரிவு 1:* யா/கரம்பொன் சிறிய புஸ்பம் மகளிர் வித்தி.), *நடனம் குழு - பிரிவு 2:* (யா/நெடுந்தீவு றோ.க. மகளிர் கல்லூரி), *நாடகம் திறந்த போட்டி:* (யா/புனித அந்தோனியார் கல்லூரி), *வில்லுப்பாட்டு:* (யா/நயினாதீவு மகா வித்தி.), *விவாதம்:* (யா/கலைநிதி தியாகராசா ம.ம.வி.),

*தமிழறிவு வினா-விடை திறந்த போட்டி:* கலைநிதி ஆ.தியாகராசா ம.ம.வி.), *முஸ்லிம் நிகழ்ச்சி:* - க.சித்திரபானு (யா/கலைநிதி ஆ.தியாகராசா ம.ம.வி.), *இசை நாடகம்:* (யா/நயினாதீவு மகா வித்தி.), *சிந்து நடைக் கூத்து:* (யா/வேலணை கிழக்கு மகா வித்தி.), *தென்மோடிக் கூத்து:* - (யா/எழுவைதீவு றோ.க.வித்தி.), *வடமோடிக் கூத்து:* (யா/நயினாதீவு ஸ்ரீ கணேசா கனிஷ்ட வித்தி.), *விசேட கூத்து:* (யா/நெடுந்தீவு மாவலித்துறை றோ.க.வித்தி.). (எ)

# எதிர்பாருங்கள் மீண்டும் யாழ்.மண்ணில்

## தந்தை S.J.பெர்க்மான்ஸ் அவர்கள்

# சமாதானத்தின் குரல்

## மாபெரும் இன்னிசை நற்செய்தி பெருவிழா

எங்கே? துரையப்பா விளையாட்டரங்கு
யாழ்ப்பாணம்.

அனுமதி இலவசம்

எப்போ?

எதிர்வரும் ஜூலை 30ஆம் திகதி செவ்வாய் முதல்

ஓகஸ்ட் 04ஆம் திகதி ஞாயிறு வரை

தினமும் மாலை 4 மணிக்கு



**விசுவாசிகளுக்கோர் அறிவிப்பு**

வீரசிங்கம் மண்டபத்தில் 30 ஆம் திகதி செவ்வாய்முதல் ஒகஸ்ட் 4ஆம் திகதிவரை காலை 10 மணிக்கு வேதப்படிப்பு நடைபெறும்.

**இயேசுக்கிறிஸ்துவினால் உங்களுக்கு சமாதானமும், சந்தோசமும், விடுதலையும் கொண்டுவரும் நிகழ்வுக்கு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்!**

**இன்றே ஆயத்தமாகுங்கள்!!**

கூட்ட முடிவில்
துரையப்பா விளையாட்டரங்கிலிருந்து
பஸ் வசதிகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

தொடர்பு:
மனதுருக்கம் இலங்கை
021-3286

(6064)

| | | | |
|---|---|---|---|
| | சனி. ரா. | | |
| | இராசிச் சக்கரம் | | சூ. சு. செவ். புத. |
| | | | வியா. வெ. |
| | கே. சந். | | |

*மாற்றம்:*

கேட்டை - சந்திரன் விருச்சிக இராசியில் நிற்கும்.

புதிய முயற்சி அரசியலில் ஏற்படும். கருத்து வேற்றுமை அதிகரிக்கும். தெற்கு அரசியல்வாதிகள் குழப்பநிலையை அடைவார்கள். சிலர் மாறுவர் - பலர் நியாயம் பேசுவர் - சிலர் மறந்து திரிவார்கள். இந்தியாவில் மத்திய மற்றும் தமிழக அரசுகளுக்குள் கருத்து வேற்றுமைகள் ஏற்படும். அரசியல் நீதியை பெறமுடியாத நிலை இருக்கும் எனக் கிரக நிலைகள் காட்டுகின்றன.

# இந்தவார இராசிபலன்

## 21.07.2002 ~ 27.07.2002

## மேடம்

வேகமும் - அவசரமும் - அசுரத்தனமும் கொண்ட மனிதர்களால் பல பிரச்சினைகள் அவர்களுக்கு உண்டாகின்றது. அவசரத்தில் இழப்பு, தொழில் நிலையத்தில் மேலதிகாரிகளின் உதவி கிடைக்கும். பிடிபாடுகள், பிரயாணத்தடை, வீடு மனை வருமானம், சிலருக்கு இடமாற்றங்கள், முயற்சிக்குத் தகுந்த வரவு இன்மையால் வேதனை என்பனவும் வாய்வுத்தொல்லை, கவலை, குளிர், சூட்டுத்தொல்லை, வயிற்றுவருத்தங்கள் என்பன கொடுக்கும். மருந்து, இரும்புத்துறை, புத்தகத்துறை, சீமெந்துத்துறை, கமிஷன் போன்ற துறையினர்கள் நன்மைகள் அடைவார்கள்.

*அதிர்ஷ்ட நாள்கள்: திங்கள், புதன், வியாழன்.*

## இடபம்

மக்கள் பிழையான ஒரு கொள்கையை நடைமுறைப்படுத்தி வந்தால் அது சரியென எல்லோராலும் ஏற்றுக கொள்ளமுடியாது. தொழில் ஸ்தானத்தில் நன்மை, தீமை கலந்து நடக்கும். இரக்கமற்ற செயல், பொருள் வரவு, அதிகாரிகள் உதவுதல், எதிர்ப்பாளருடன் கருத்து வேற்றுமை, சகோதரங்கள் குறைசொல்லல் என்பனவும், கடன் பயம் ஏற்படுதல், பிரயாணத்தடை ஏற்படல், நெஞ்சு எரிவு, வயிற்றுநோ, கைகால் உளைவு, உஷ்ண பீடைகள் என்பன வரும். கடற்றுறை, புடைவைத்துறை, பாதுகாப்புத்துறை, மருந்துத்துறை போன்ற துறைகளைச் சேர்ந்தவர்களுக்கு நன்மைகள் அதிகரிக்கும்.

*அதிர்ஷ்ட நாள்கள்: திங்கள், புதன், வியாழன்.*

## மிதுனம்

"வீட்டைக் கட்டிப்பார் - கலியாணத்தைச் செய்துபார்" என்பார்கள் இரண்டும் மனித வாழ்வில் பலத்த போராட்டம் செய்துதான் பெற வேண்டும். தொழில் ஸ்தானத்திலும் உங்களுக்குப் போராட்டம்தான். பிறருக்கு ஆலோசனை, நன்மைகள் செய்தல், அரசியல்வாதிகளின் உதவிகள் கிடைத்தல், முதுகு வலி, கைகால் உளைவு அல்லது அடிபடல், வக்கம், களைப்பு, பயம் என்பன வரும். செய்தித்துறை, குருத்துறை, கமிஷன்துறை, புத்தகத்துறை போன்ற துறைகளைச் சேர்ந்தவர்களுக்கு நற்பலன்கள் அதிகரித்தபடி இருக்கும்.

*அதிர்ஷ்ட நாள்கள்: திங்கள், புதன், வியாழன்.*

## கடகம்

உலகத்தில் புகழுடன் வாழ வேண்டுமாயின் தேடிவரும் பதவிகளை விடக்கூடாது. அதற்கும் ஒரு தைரியம் வேண்டும். தொழில் ஸ்தானத்தில் சில மாற்றங்களால் பதற்ற நிலை அடைவீர்கள். எதிர்ப்பாளருடன் வாக்குக்கலகம், வீட்டில் சலிப்பு, பணக்கஷ்டம், புதிய திட்டங்கள் தீட்டுதல், அரசால், அரசியல்வாதிகளால் இலாபங்கள் கிடைக்கும். சலவருத்தம், வயிற்றுவருத்தம், மனப் பதற்றம், பயம், சளி என்பன வரும். பத்திரிகை - புத்தகத்துறை, அரசியல் துறைகளைச் சேர்ந்தவர்கள் நன்மைகள் அடைவர்.

*அதிர்ஷ்ட நாள்கள்: திங்கள், புதன், வியாழன்.*

## சிங்கம்

உழைப்பு முக்கியமாகும். இடைவிடாத முயற்சி வெற்றிதரும். எந்த விதமாகத் தோல்விகள் வந்தாலும் சிங்கராசிக்காரர்கள் துவண்டுவிடமாட்டார்கள். தொழில் ஸ்தானத்தில் படிப்படியாக முன்னேறி வந்துகொண்டிருப்பார்கள். பல புதிய சந்தர்ப்பங்கள் கருவாகி உருவாகும். இனஜனத்தில் ஒருவருக்கு உடல்நிலை தாக்கம் கொடுக்கும். புதிய முயற்சி, பிறருக்கு ஆலோசனை, முற்கோபம், சமாளித்து நடத்தல் என்பனவும், வாத விறைப்பு, மனத்தளர்ச்சி, கை, கால் உளைவு என்பனவும் கொடுக்கும். குருத்துறை, பிரயாணத்துறை, வியாபாரத்துறை, சந்தைத்துறை போன்ற துறையினர்கள் நன்மை அடைவார்கள். பல புதிய திட்டங்களால் முன்னேற்றங்கள் ஏற்படும்.

*அதிர்ஷ்ட நாள்கள்: புதன், வியாழன்.*

## கன்னி

மக்களின் தீர்ப்பே மகேசனின் தீர்ப்பாகும். அதுவும் நேர்மையாக இருப்பது முக்கியமாகும். தொழில் ஸ்தானத்தில் வீண் குறைகள் வரும். நேர்மையாக நடந்துகொள்ளுங்கள். இடமாற்றங்கள், புதிய செய்திகள் வரும். எதிர்ப்பாளருடன் தர்க்கப்படுவீர்கள். பொருள் தவறுதல், சகோதரங்களுக்காக ஓடியாடித் திரிதல் போன்றன நடக்கும். நாரி நோ, வாத விறைப்பு, கிருமித்தாக்கம், மூலநோ என்பனவும், பிரயாணத்துறை, குருத்துறை, மருந்துத்துறை, புத்தகத்துறை, செய்தித்துறை போன்ற துறையினர்களுக்கு மாற்றங்கள், முன்னேற்றகரமாக நடக்கும் பலன்கள் காணப்படுகின்றன.

*அதிர்ஷ்ட நாள்கள்: புதன், வியாழன்.*

## துலாம்

நிர்வாகத்தை நடைமுறைப்படுத்தும் பொழுது பல சிக்கல்கள் ஏற்படும். அதையெல்லாம் சமாளித்து அந்த நிறுவனத்தை அதன் நடைமுறைகள் தளம்பாது சீர்செய்து நடத்திக்கொண்டிருப்பவர்களை நிச்சயம் பாராட்டத்தான் வேண்டும். தொழில் ஸ்தானத்தில் பல பாராட்டுக்கள் கிடைக்கும் புதிய திட்டங்கள், மாற்றங்கள் ஏற்படும். வயிற்றுநோ, கிருமித்தாக்கம், மனப்போராட்டம், உஷ்ண பீடைகள் என்பன கொடுக்கும் பிரயாணத்துறை, அரசியல்துறை, சட்டத்துறை போன்ற துறையினர்கள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்ட நாள்கள்: புதன், வியாழன்.*

## விருச்சிகம்

அனைவரும் ஒன்றுபட்டு நாட்டின தேசியத்தை கட்டி எழுப்பி நிலை நாட்டுவதையே மக்கள் விரும்புகின்றார்கள் தொழில் ஸ்தானத்தில் கருத்து வேற்றுமைகள் ஏற்படும். கூட்டு முயற்சிகள், அவ்வவர்கள் உதவுவார்கள், எதிரிகளை மடக்குவீர்கள். இன ஜன உதவிகள், பொருள் களவு போகலாம், கவனமாக இருந்தால் தப்பலாம். மூக்கு, தொண்டை நோ, அடிவயிறு நோ, கைகால் பிடிப்பு என்பன கொடுக்கும் பிரயாணத்துறை, வியாபாரத்துறை, உலோகத் துறை, குருத்துறை, அரசியல்துறை போன்ற துறையினர்களுக்கு நன்மையான முன்னேற்றம் ஏற்படும்.

*அதிர்ஷ்ட நாள்: புதன்.*

## தனுசு

நாம் எத்தனை பேருக்குப் பயப்பட வேண்டி இருக்கின்றது. 'மோட்டார்சைக்கிளுக்கு லைசென்ஸ் இல்லாத பயம் - ஒழுங்கைகளுக்குள்ளால் ஓட்டம், ஹெல்மெட் போட்டால் காற்றால், கழுத்து நோ எத்தனை நாளுக்குத்தான் இந்தத் துன்பம் என யோசிக்கிறீர்களா? நாட்டில் சட்டதிட்டங்களுக்கு நாம் கட்டுப்பட்டுத்தான் ஆகவேண்டும். அதே போன்று தொழில் ஸ்தானத்திலும் சட்டதிட்டத்தால் மனப்பயம் அடிக்கடி வரும். புதிய திட்டங்களால் மாற்றங்கள் ஏற்படலாம். கொடுக்கல் வாங்கல்களால் அவதி, பொருள் இழப்பு, வழக்கு வரலாம். மந்திர தந்திர வேலைகளுக்கு யோசனை என்பன, கால் வருத்தம், மூலச் சூடு, நாரிப் பிடிப்பு போன்ற பலன்கள், குருத்துறை, சட்டத்துறையினருக்கு மாற்றங்கள் ஏற்படும்.

*அதிர்ஷ்ட நாள்கள்: திங்கள், புதன்.*

## மகரம்

புதிதாகப் பதவி ஏற்கும் பொழுது பலர் பல வாக்குறுதிகளைக் கொடுப்பார்கள் பின்பு அவற்றை நடைமுறைப்படுத்த எவ்வளவு சிக்கல் உள்ளது எனச் சொல்லிவிட்டுவிடுகிறார்கள். இது இயற்கையே. புத்திரா அல்லது சகோதரர்களுக்கு இடமாற்றம் பரீட்சைப் பேறுச்சித்தி என்பன கொடுக்கும். புடைவை, நகைச் செலவுக்கு திட்டமிடல். முழங்கால் பிடிப்பு, நரம்பு நோ, மூட்டுவலி, தலைவலி என்பன வரும். வைத்தியம் செய்யவும். குருத தொழில், வியாபாரத்துறை, காணி, பூமி கமிசன் வேலை செய்பவர்களுக்கு நல்ல மாற்றங்கள் ஏற்படும்.

*அதிர்ஷ்ட நாள்கள்: திங்கள், வியாழன்.*

## கும்பம்

அரசியலில் துணிவுள்ளவர்கள் தான் புகழ் அடைகின்றார்கள். தொழில் ஸ்தானத்தில் துணிவுடன் செயற்படுங்கள் பல வெற்றிகள் கிடைக்கும். எதிர்ப்பாளருடன் ஏட்டிக்குப்போட்டி, பிறருக்கு ஆலோசனை, குடும்பத்தவர்களின் முன்னேற்ற[illegible]படுதல், புதிய செய்திகளால் [illegible] கிலேசப்படல், புதிய பொறுப்பு என்பனவும், பல் வருத்தம், கால் நோ, [illegible] பிடிப்பு, நாரிநோ, [illegible] தொல்லை என்பனவும், இசைத்துறை [illegible], குருத்துறை, கடற்றுறை, [illegible] துறை, செய்தித்துறை போன்ற துறையினர்கள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்ட நாள்கள்: திங்கள், வியாழன்.*

## மீனம்

வாடகை வீட்டில் இருந்துகொண்டு வாடகை கட்டாமல் எத்தனை சாக்குப்போக்குச் சொல்லி மறைகின்றார்கள். தொழில் ஸ்தானத்தில் இப்படிச் செய்ய நீங்கள் முயலாதீர்கள். செய்பவர்களுக்கும் ஆதரவழிக்காதீர்கள். புதிய திட்டங்களையும், பிரயாணங்களையும் [illegible] அதிகரிக்கும். இடமாற்றம் ஏற்படும். பொருள் களவு, இழப்பு ஏற்படலாம். குடும்பத்தில் வாக்குக்கலகம், சளித் தொல்லை, இடுப்பு வலி, [illegible], கிருமித்தாக்கம், மூட்டுநோ என்பன வரும். கடற்றுறை, போக்குவரத்துத் துறை, செய்தித்துறை, மருந்துத்துறை, குருத்துறை போன்றதுறையினர்கள் நன்மை அடைவார்கள்.

*அதிர்ஷ்ட நாள்கள்: திங்கள், வியாழன்.*

மகாதேவா ஜோதிடம்

## தமிழ்மொழித்தினப் போட்டி

# யாழ்.கல்வி வலயத்தில் இருந்து தெரிவானோர் விவரம்

யாழ்ப்பாணம்,ஜுலை20

யாழ்ப்பாணம் கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையில் அண்மையில் நடைபெற்ற தமிழ்மொழித் தினப் போட்டியில் கலந்துகொண்ட மாணவர்களில் மாவட்ட மட்டப் போட்டிக்குத் தகுதிபெற்றவர்களின் விவரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

அப்பட்டியலின் விவரம் வருமாறு:

எழுத்தாக்கம் தவிர்ந்த ஏனைய போட்டிகளுக்குத் தகுதிபெற்ற மாணவர்களின் பெயர், விவரங்கள் வருமாறு:-

### வாசிப்பு

அ.மீரா (பிரிவு I - யாழ்.இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை), இ.விஜோஜா (பிரிவு II - ஆவரங்கால் நடராஜ இராமலிங்க வித்தி.)

### ஆக்கத்திறன்

தி.அருள்வாகினி (பிரிவு I - யாழ். இந்து மகளிர் ஆரம்ப பாடசாலை).

### பேச்சு

தி.நிஷாந்தினி (பிரிவு I - நல்லூர் ஞானோதய வித்தி.), சி.சிவகஜன் (பிரிவு II - கொக்குவில் இந்துக் கல்லூரி), வே.பிரணவன் (பிரிவு III - யாழ்.பரியோவான் கல்லூரி), ப.வினுசியன் (பிரிவு IV - யாழ்.மத்திய கல்லூரி), ச.பல்லவகுமார் (பிரிவு V - அச்சுவேலி மத்திய கல்லூரி).

### பாவோதல்

பு.கஜலட்சுமி (பிரிவு I - இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை). ஸ்ரீ.காயத்திரி (பிரிவு II வேம்படி மகளிர் கல்லூரி), ம.திருமகள் (பிரிவு III - யாழ்.இந்து. மகளிர் கல்லூரி), தே.டஷிகா (பிரிவு IV) - சுண்டிக்குளி மகளிர் கல்லூரி), ஸ்ரீ.ஸ்ரீமகள் (பிரிவு V - வேம்படி மகளிர் கல்லூரி).

### இசையும் அசைவும்

செ.பிரவீணா (பிரிவு I - யாழ். இந்து ஆரம்ப பாடசாலை), எஸ்.சுரஷாத்தியன் (பிரிவு III - யாழ். பரியோவான் கல்லூரி), ச.விஜயதுக்ஷாயினி (பிரிவு III - சுண்டிக்குளி மகளிர் கல்லூரி), ஸ்ரீ.தாரணி (பிரிவு IV - யாழ்.இந்து மகளிர் கல்லூரி), தி.அனிதா (பிரிவு V - கோண்டாவில் இந்து ம.வி.)

### நடனம்

ப்.கீர்த்தனா (பிரிவு I - பெரியபுலம் ம.வி.), உ.பிரியங்கா (பிரிவு II - வேம்படி மகளிர் கல்லூரி), கு.மயூரி (பிரிவு III - வேம்படி மகளிர் கல்லூரி), கி.காயத்திரி (பிரிவு IV - கொக்குவில் இந்துக் கல்லூரி), சி.தேவந்தி (பிரிவு V - வேம்படி மகளிர் கல்லூரி).

### இசை

யாழ்.இந்து மகளிர் கல்லூரி (குழு I), கொக்குவில் இந்துக் கல்லூரி (குழு II).

### நடனம்

கொக்குவில் இந்துக் கல்லூரி (குழு I), யாழ்.இந்து மகளிர் கல்லூரி (குழு II).

### நாடகம்

யாழ்.திருக்குடும்பக் கன்னியர் மடம்.

### வில்லுப்பாட்டு

யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரி.

### விவாதம்

யாழ்.இந்துக் கல்லூரி

### தமிழறிவு

வேம்படி மகளிர் கல்லூரி

### நாட்டுக்கூத்து

வேம்படி மகளிர் கல்லூரி

### நாட்டுக்கூத்து (தென்மோடி)

யாழ்.சம்பத்தரிசியார் கல்லூரி.

### நாட்டுக்கூத்து (வடமோடி)

நாவாந்துறை றோ.க.வித்தி.

### நாட்டுக்கூத்து ([illegible])

யாழ்.வைத்தீஸ்வராக் கல்லூரி

### இசைநாடகம்

யாழ்.இந்துமகளிர் கல்லூரி(குழு 10)

# புலமைப் பரிசில் பரீட்சை வினாத்தாள் விடைகள்

நேற்று வெளியான ஐந்தாம் ஆண்டுப் புலமைப் பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள் இல.4 இல் பிரசுரமான வினாக்களுக்கான விடைகள் வருமாறு:-

### பகுதி I

1. விமானம் 2. (2)
3. உறைக்கும் 4. பசு
5. (2) 6. (1) 7. (4)
8. (2) 9. (2) 10. (2)
11. (1) 12. (1) 13. (4)
14. (4) 15. (2) 16. (2)
17. பிரயாணஞ்செய்வதற்காக
18. வெப்பத்திலிருந்து பாதுகாக்க
19. செய்திகளை அறிவதற்கு
20. பாடசாலை
21. நட்சத்திரம் 22. வேர்
23. 1 24. 3 25. 2
26. 2 27. 2 28. 3
29. 3 30. 3 31. 1
32. தோடம்பழம் 33. மாம்பழம்
34. அப்பிள்/விளாம்பழம்
35. 180 36. 5 37. 5
38. 3 39. 10 40. 47

### பகுதி II

1. பிள்ளை - தாயைப்
சிறுவன் - தாடைப்
2. பட்சணம்
3. பூப்பறித்தல், பூரதம் கட்டுதல்
4. சிறு வீடுகள் கட்டல்
5. நல்லவர்கள் 6. அம்மா
7. வீடுகள்
8. போறேன், செய்வோம்
9. நான் 10. பூந்தேர்
11. சிற்றுண்டி 12. வன்பு
13. பகைவர்
14. நாம்/நாங்கள்
15. அம்மாமார்
16. தந்து + நாங்கள்
17. போகிறேன்/போகின்றேன்
18. Hand 19. Houses
20. I 21. Tree
22. 36 பேர் 23. 7 24. 77
25. 269 ரூபா 50 சதம்
26. 2ரூபா, 1ரூபா, 50சதம், 50சதம்
27. மெழுகுதிரிச் சுவாலை சிறிதாகி அணையும்
28. வெப்பசக்தி, வெளிச்சசக்தி
29. செயற்கை ஒளி முதல்
30. ஒட்சிசன்
31. நீர்வெறுப்பு நோய்
32. வாந்திபேதி/வயிற்றுளைவு
33. பிளேக்
34. மலேரியா/யானைக்கால்/டெங்கு
35. Badminton
36. Cricket 37. Netball
38. Volleyball
39. Table tennis
40. தனியிழை 41. சடை
42. ஈரிழை 43. கல்[illegible]
44. கடதாசியைப் 45. [illegible]
46. மெழுகுவர்த்தியால்
47. நீர்வர்ணம்
48. காய்ந்த 49. [illegible]
50. IX 51. VII
52. XXIV 53. 1. தடி
2. [illegible]
3. தகரமூடி
4. வெற்றுப் பேனை
5. ஆணி
6. [illegible]
54. மகாவலிகங்கை
55. பம்பரகந்த 56. [illegible]
57. ஆசியாக்கண்டம்
58. நைல்நதி [illegible]
60. 500 மில்லிலீற்றர்
61. 750g 62. 15 [illegible]
63. செவ்வகம்
64. வாயுக்களின் [illegible]
65. வெப்பம் [illegible] இருக்க [illegible]
67. செங்கோணத்[illegible]
68. கழுகு [illegible]
70. கோழி
71-76 பொருத்தமான [illegible] வாக்கியங்கள்

# அமைச்சர்கள் விஜயத்தை ரத்துசெய்து அந்தச் செலவை மக்களுக்கு கொடுங்கள்

தென்மராட்சிப் பிரதேசம் யுத்த அனர்த்தங்களால் சேதமடைந்தமை உலகறிந்த விடயம். இத்தகைய ஒரு பிரதேசத்தைச் சேர்ந்த பாதிக்கப்பட்ட மக்களுக்கு அரச சார்பற்ற நிறுவனங்கள் உதவி வழங்கும் போது பங்கீட்டு அட்டைகளின் 'அ', 'உ' வித்தியாசத்தை காரணம் காட்டி ஒரு சிலருக்கே அந்த உதவிகளைப் பெற்றுக் கொடுப்பதில் மாவட்ட, பிரதேச அதிகாரிகள் முனைப்புடன் செயலாற்றுவதாக அப்பகுதி மக்கள் பலரும் வேதனை வெளியிட்டுள்ளனர்.

விமானக் குண்டுகளோ, 'ஷெல்' குண்டுகளோ, துப்பாக்கி ரவைகளோ இப்பிரதேச மக்களின் வீடுகளை, உடைமைகளை அழிப்பதில் 'அ', 'உ' பங்கீட்டு அட்டையாளர் என்ற வேறுபாடு காட்டவில்லை. ஆனால், சேதமடைந்த வீடுகளை மீளமைப்பதற்கும் இழந்த உடைமைகளுக்கு ஈடாக அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவிகளை வழங்குவதில் மட்டும் இங்கு வேறுபாடு காட்டப்படுகிறது. இது எந்த விதத்தில் நியாயமாகுமோ தெரியவில்லை என்றும் மக்கள் கூறுகின்றனர்.

பிரதேசத்தின் சங்கத்தானை, கோயில் குடியிருப்பு, சாவகச்சேரி நகரம், நுணாவில் கிழக்கு, நுணாவில்

## உதவிகள் வழங்குவதில் 'உ', 'அ' அட்டைவேறுபாடு ஏன்?


மத்தி, கல்வயல், நுணாவில் மேற்கு, மட்டுவில் மத்தி, தென் மட்டுவில், மட்டுவில் கிழக்கு, சரசாலை, மட்டுவில் வடக்கு, கைதடி, நுணாவில் ஆகிய பதின்மூன்று கிராம அலுவலர் பிரிவுகளில் உள்ள சுமார் 98 வீதமான வீடுகள் யுத்த அரக்கனின் அகோரப்பிடிக்குள் அகப்பட்டு, வீடுகளும் அவற்றில் இருந்த உடைமைகளும் அங்கு நின்ற பயன்தரு மரங்களும் நாசமாக்கப்பட்டன.

இந்தப் பகுதிகளில் உள்ள 'உ' பங்கீட்டு அட்டையாளர்கள், குடும்பத்தினருடன் வாழக் கூடிய வீடு இருந்ததால் அவர்களுக்கு கிடைக்கும் மாதாந்த வருமானத்துடன் பயன்தரு மரங்களின் வருமானத்தையும் கொண்டு காலத்தைக் கழித்து வந்தனர். இன்றைய விலைவாசிகளுடன் ஒப்பிடும் போது மாதாந்த வருமானம் பெறுபவர்களால் அவர்களது வருமானத்தை மட்டும் நம்பி சீவிக்க முடியுமா?

இந்த நிலையில் இழந்த வீடுகளையும் உடைமைகளையும் எப்போது திரும்பப் பெறுவது? ஏதோ அரசசார்பற்ற நிறுவனங்களால் வழங்கப்படும் உதவிகளாவது கிடைக்குமா? என எதிர்பார்க்கும் பலரின் எண்ணத்தில் 'உ' பங்கீட்டு அட்டை என்ற வேறுபாடு வெந்த புண்ணில் வேலாகப்பாய்கிறது.

யுத்த அரக்கனின் அகோரப் பிடிக்குள் அகப்பட்ட பிரதேசங்கள் மட்டுமன்றி ஏனைய பிரிவுகளில் உள்ள மக்களும் பாதிப்புக்கு உள்ளாகாமல இல்லை; யுத்தத்தின் பிடிக்குள் சிக்காத பல பகுதிகள் கூட திருடர்களின அநியாயச் செயலால் வீடுகள் வெறுமையாக்கப்பட்டு, உடைமைகள் கொள்ளையடிக்கப்பட்டு உள்ளன. உடைமைகள் கொள்ளையர்களால் திரும்ப வழங்கப்படுமா? இல்லையெனில் இழந்தவற்றை மீளப்பெற எவ்வளவு காலத்திற்கு ஓடாக உழைப்பது.

யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் கிராம அலுவலர்களின் வீடுகள், அலுவலகங்கள் கூட நாசமாகின. பாதிக்கப்பட்ட கிராம அலுவலர்கள் கூட தமது பிரிவில் உள்ள சகல மக்களும் பாதிப்புக்கு உள்ளானதை மறந்து ஒரு சிலரின் பெயர்களை மட்டுமே நிவாரணங்கள் பெற சிபார்சு செய்கிறார்கள். பிரதேச செயலகத்தில் பணியாற்றும் பல உத்தியோகத்




தர்களின் வீடுகள் அழிந்துள்ளதால் வலிகாமம், வடமராட்சிப் பகுதிகளில தங்கியிருந்து தென்மராட்சிக்கு கடமைக்கு வருகிறார்கள். இவர்கள் தமக்கு ஏற்பட்ட பாதிப்புகளை உரிய அதிகாரிகளுக்கு எடுத்துக் கூறி அனைவருக்கும் உதவிகளைப் பெற்றுக் கொடுக்க பின்னடிப்பது பாதிக்கப்பட்ட பலருக்கு வேதனை தரும் விடயமாகும்.

'உ' பங்கீட்டு அட்டையாளர்களில அரச உத்தியோகத்தர்கள், ஓய்வூதியர்கள் ஆகியோருடன் வர்த்தகர்களும் அங்கு பணிபுரிபவர்களும் அடங்குகினறனர். சாவகச்சேரி நகர்ப் பகுதியில் உள்ள சுமார் 300 வர்த்தக நிலையங்கள் மீள இயங்க முடியாமல் சேதமடைந்துள்ளதால், அவற்றைத் திருத்த நிதி இல்லாததால் வியாபாரத்தினை கைவிடும் நிலைக்கு பல வர்த்தகர்கள் தள்ளப்பட்டுள்ளனர். ஒரு சில வர்த்தகர்களுக்கு இடம் பெயர்வின் போது 'இ' பங்கீட்டு அட்டைகள் வழங்கப்பட்டன. இப்போது முன்னைய 'உ' அட்டையைக் காரணம் காட்டி அதிலும் வெட்டு விழப் போகிறதாம்.

பிரதேசத்தில் தற்போது மீளக் குடியமர்ந்துள்ள சுமார் 13 ஆயிரம் குடும்பங்களில் அரைவாசிக்கும் சற்று குறைந்த தொகையினர் 'உ' பங்கீட்டு அட்டையாளர்களாவர்.

அரச அலுவலகங்கள், பாடசாலைகள் ஆகியவை சொந்த இடங்களில் மீள இயங்கத் தொடங்கியதால் வந்தவர்களும், எஞ்சியுள்ள உடைமைகளைக் காப்பாற்றும் நோக்குடன் வந்தவர்களுமாக மீளக்குடியமர்ந்தோரின் தொகையை அதிகரிக்கச் செய்ய இவர்களின் வருகை கை கொடுத்துள்ளது.

அடுத்து மீளக்குடியமர்வுக் கொடுப்பனவு பற்றியது.

பிரதேசத்தில் கடந்த ஜூன் 30 ஆம் திகதி வரை 12 ஆயிரத்து 750 இற்கு மேற்பட்ட குடும்பங்கள் மீளக் குடியமர்ந்துள்ளதாக பிரதேச செயலக புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. இவர்களில் முன்னைய ஆட்சிக் காலத்தில் அதாவது கடந்த டிசெம்பர் மாதத்திற்கு முன்பு கைதடிப் பிரதேசத்தில் மீளக்குடியேறிய ஆயிரத்து 750 குடும்பங்கள் மீளக் குடியமர்வுக் கொடுப்பனவாக தலா 12 ஆயிரம் ரூபாவினை மீளக்குடியமர்ந்த காலத்திலேயே பெற்றுள்ளனர். இவர்களில் சிலர் கொடுப்பனவைப் பெற்றுக்கொண்டே மீளக் குடியமர்ந்துள்ளனர்.

கடந்த டிசெம்பர் மாதம் தொடக்கம் ஜூன் மாதம் வரையிலான ஏழு மாத காலத்தில் 11 ஆயிரம் குடும்பங்கள் தமது சொந்த இருப்பிடங்களில் மீளக் குடியமர்ந்துள்ளன.

தென்மராட்சி கிழக்குப் பகுதியில 90 வீதமான மக்கள் விடுதலைப் புலிகளால் யுத்தநிறுத்த அறிவிப்பு வெளியிட்ட மறுநாளே மீளக் குடியமர்ந்தனர்.

இப்பிரதேசத்தின் 15 கிராம அலுவலர் பிரிவுகள் தவிர்ந்த ஏனைய 45 கிராம அலுவலர் பிரிவுகளிலும் மக்கள் மீளக் குடியமர்ந்து வருகின்றனர்.

கையில் அகப்பட்ட உடைமைகளுடன் இடம்பெயர்ந்த மக்கள் அகதி வாழ்வுக்கு முடிவுகட்டி சொந்த இடத்திற்கு மீளக் குடியமர்ந்துள்ளனர். சொந்த இடங்களில் குடியிருக்க வீடில்லை. காணியில் கொட்டில் அமைக்க கையில் பணம் இல்லை. கொட்டில்கள் அமைக்க மரங்கள் வழங்காமல் தகரங்கள் வழங்கினால் தகரங்களை எங்கு போடுவது?

மீளக் குடியமரும் மக்களுக்கு முன் உதவியாக தலா 5 ஆயிரம் ரூபா வீதம் வழங்கினால் பல குடும்பங்கள் நன்மை அடையும். கூலி வேலை செய்யமுடியாத அளவுக்கு மிதிவெடி அபாயம். இந்த நிலையில் நிரந்தர வருமானமின்றித் தவிக்கும் பல குடும்பங்களின் அவலத்தைப் போக்குவது யார்?

அரசின் திறைசேரி வெறுமை

**கண்ணன்**
*சங்கத்தானை*

யாக உள்ளதால் இக்கொடுப்பனவுகளைப் பெற்றுக்கொடுக்க முடியவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது. அரசின் கூற்றை ஏற்றுக்கொள்ளத் தான் வேண்டும். ஏனெனில் தென்மராட்சிப் பிரதேசத்தில் மீளக்குடியமர்ந்த மக்களில் மீளக் குடியமர்வு கொடுப்பனவு பெற்றுக் கொள்ளாத 11 ஆயிரம் குடும்பங்களுக்கு தலா 5 ஆயிரம் ரூபா வீதம் கொடுக்க வேண்டுமாயின் சுமார் 55 மில்லியன் ரூபா தேவை.

இந்த பெருந் தொகையைப் பெறுவதில் அரசிற்கும் அரச அதிகாரிகளுக்கும் பெரும் சிரமம் தான். இருப்பினும் புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திட்ட பின்னர் இதுவரை பிரதம மந்திரி தொடக்கம் அரசில் உள்ள அனைத்து மந்திரிகளும் சாவகச்சேரிக்கு தமது குடும்பங்கள், ஆள் படைகள் ஆகியவற்றுடன் அனுதாப விஜயத்தினை மேற்கொண்டுள்ளனர்.

சாவகச்சேரி நிலையைப் பார்த்ததும் வேதனைப்படும் அமைச்சர்கள் நிதி இல்லை என்ற தாரக மந்திரத் தைக் கூறிவிட்டுச் சென்று விடுகின்றனர்.

ஓர் அமைச்சர் யாழ்ப்பாணம் வருகைதரும்போது அவரது குடும்பத்தினர், பாதுகாப்பு அதிகாரிகள், உட்பட சுமார் 30 பேர் வரை வந்து செல்கின்றனர்.

இந்தப் பட்டாளங்களுடன் அமைச்சர் வந்து செல்லும் செலவை (விமானப் பயணம் உட்பட) சற்று நோக்கிப் பார்த்தால் சராசரி அரை மில்லியன் ரூபா வரை செலவாகலாமென மதிப்பிடலாம்.

இதற்கு எங்கிருந்து நிதி கிடைக்கிறது? பயனில்லாத பயணத்தினை, மேற்கொள்ளும் அமைச்சர்களின் விஜயத்தினை இரத்துச் செய்து அந்தப் பணத்தினைப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கலாம். ஆனால் இதனை அரசு செய்யுமா?

# பொலீஸாரைத் தாக்கிவிட்டு துப்பாக்கி அபகரிப்பு

கொழும்பு,ஜூலை20

கட்டுநாயக்கா மல்கஸ் சந்தியில் இருக்கும் பொலீஸ் சோதனைச் சாவடியில் கடமையில் இருந்த பொலீஸ் கான்ஸ்டபிளை இனந்தெரியாத நபர்கள் தாக்கிவிட்டு ரி-56 ரகத் துப்பாக்கியை அபகரித்துச் சென்றுள்ளனர்.

இச்சம்பவம் கடந்த 14ஆம் திகதி இரவு நடைபெற்றுள்ளது. சோதனைச் சாவடியில் வழமையாக இரு பொலீஸார் கடமையில் ஈடுபடுவர்.

சம்பவதினத்தன்று கடமையில் இருந்த பொலீஸாரை மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர்கள் தாக்கிவிட்டு பொலீஸார் வைத்திருந்த ரி-56ரகத் துப்பாக்கிகளில் ஒன்றை எடுத்துச் சென்றுள்ளனர்.

மற்றைய பொலீஸ் அதிகாரி துப்பாக்கியால் அவர்களை நோக்கிச் சுட்டபோதும் அவர்கள் அதில் இருந்து தப்பிச் சென்றுள்ளனர். இது தொடர்பாக இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லை என கட்டுநாயக்கா பொலீஸார் தெரிவித்தனர். (ஒ)


**சாவகச்சேரி கைத்தொழில் வணிகர் மன்றம்**

**மாதாந்த பொதுக்கூட்ட அறிவித்தல்**

இடம் : சாவகச்சேரி டிறிபேக் கலலூரி
காலம் : 23.07.2002 செவ்வாய்க்கிழமை
நேரம் : முற்பகல் 10.30 மணி

அக்கூட்டத்தில் ரான் (RRAN) அதிகாரிகளும் அரசியல் துறை பொறுப்பாளர்களும் கலந்துகொள்ள இருப்பதால் சகல அங்கத்தவர்களையும் தவறாது கலந்துகொள்ளும்படி வேண்டுகின்றோம்.

*தனங்களப்பு வீதி,*
*சாவகச்சேரி.*

*செயலாளர்*
கைத்தொழில் வணிகர் மன்றம்,
சாவகச்சேரி.

(6182)



**யாழ்.மாவட்ட விவசாயிகளுக்கு ஒரு முக்கிய அறிவித்தல்!**

**சிலரின் போலியான பொய்ப் பிரசாரத்தை நம்பி ஏமாறாதீர்கள்!**

வெங்காயப் பயிர்களுடன் போட்டியிட்டு வளரும் சகல களைகளையும் ஒரே தடவையில் முற்றாக நீண்டநாள்களுக்குக் கட்டுப்படுத்தும் களை நாசினி:

CIC நிறுவனத்தாரின்
**கோல் 2 எக்ஸ் எல்**

வெங்காய தாழ்கோதிப் புழுக்களைக் கட்டுப்படுத்த
**அற்றப்புறோன் 5 ஈசி**

வெங்காய ஊதாப்புள்ளி, குமிழ் அழுகல் நோய்களுக்கு
**டைத்தேன் எம் 45**

பயிர்களின் ஆரோக்கியமான வளர்ச்சிக்கு
**வுக்ஸோல்** (திரவ உரப்பசளை)

மற்றும் பயிர்களைப் பூச்சிநோய்களிலிருந்து பாதுகாக்க
CIC நிறுவனத்தாரின்
**தரமான விவசாய இரசாயனங்களைப பாவியுங்கள்.**

*ஏக விநியோகஸ்தர்:*
*பவானி களஞ்சியம்,*
*இராச வீதி,*
*நீர்வேலி வடக்கு.*

*கிளை:*
*கஜமுகா றேட் சென்ரர்,*
*281, கே.கே.எஸ். வீதி,*
*யாழ்ப்பாணம்.*

**கெமிக்கல் இன்டஸ்றீஸ் (கொழும்பு) லிமிட்டெட்,**
199, கியூ வீதி, கொழும்பு - 02.

*விவசாய இரசாயனங்கள் ஆபத்தானவை அவதானமாகப் பாவியுங்கள்.*

(6188)



**41ஆம் நாள் நினைவலைகள்**

மண்ணில்
1985
-
07
-
30



விண்ணில்
2002
-
06
-
06

**செல்வி துரைராசா சுகந்தினி**

திதி: 20-07-2002

"கனவு பல கண்டிருந்தோம் பூமிதனில் நாம் இங்கு.
கண்மூடி எங்கு சென்றாய்?" பாரினிலே தவிக்கின்றோம்."

எங்கள் அன்புச் சகோதரியின் மரணச் செய்தி கேட்டு உடன் வந்து எமக்கு ஆறுதல் கூறி, தேறுதல் அளித்த ஐயா அவர்களுக்கும் அவருடன் தொழில் செய்யும் ஊழியர்களுக்கும் எமது நன்றியைத் தெரிவிக்கின்றோம். மேலும் எமது துயரத்தில் பங்குகொண்டு எம்மோடு தோளோடு தோள் நின்று பல வழிகளிலும் உதவிகள் செய்த உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது நன்றியைத் தெரிவிப்பதோடு, இன்று (20.07.2002) சனிக்கிழமை எமது வீட்டில் நடைபெறும் மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.


*சூசையப்பர் கோயிலடி,*
*கோப்பாய் மத்தி,*
*கோப்பாய்.*

து.தவராசா
(வரதராசா - சகோதரன்),
அண்ணர் குடும்பத்தினர்.

(6186)



**10ஆவது வருட நினைவலைகள்**



அமரர்
**தம்பிப்பிள்ளை வீரசிங்கம்**

*மண்ணில்: 14.09.1916 விண்ணில்: 10.07.1992*

திதி:20.07.2002

ஆண்டுகள் பத்துச் சென்றாலும் ஆறிடுமோ எமது நெஞ்சம் ஈண்டு உம் நினைவுடனே எந்நாளும் வாழுகின்றோம்.

*"கம்பளை இல்லம்"*
*கட்டப்பிராய்.*

- மனைவி,
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

(6185)



**விற்பனைக்கு**

159 - HONDA SUPER CUP 50
மோட்டார் சைக்கிள
விற்பனைக்கு உண்டு.

*தொடர்புகளுக்கு:-*
109, இராசாவின்தோட்டம் றோட்,
யாழ்ப்பாணம்.

(6191)

# படையினரின் நடவடிக்கைகளால் கல்விக்கு முட்டுக்கட்டை தொடர்ந்தால் போராடுவதைத்தவிர வேறுவழியில்லை!

# தென்மராட்சி மாணவர்கள் கண்காணிப்புக் குழுவிடம் மகஜர்

யாழ்ப்பாணம்,ஜூலை20

**எமது சுதந்திரமான கல்விக்கு தொடர்ந்தும் படையினரின் அத்துமீறல் முட்டுக்கட்டையாக இருக்குமானால் மாணவர்களாகிய எமக்கு போராடுவதைத் தவிர வேறு மார்க்கம் இருக்காது. ஆகவே சுதந்திரமாக நாம் கல்வியைத் தொடர ஆக்கபூர்வமான முயற்சிகளை மேற்கொள்ளுங்கள்.**

**யுத்தநிறுத்தக் கண்காணிப்புக்கான யாழ்.குழுவின் தலைவரிடம் தென்மராட்சி தமிழ் மாணவர் ஒன்றியம் இவ்வாறு வேண்டுகோள் விடுத்துள்ளது.**

தென்மராட்சி மாணவர் ஒன்றியத்தில் அங்கம் வகிக்கும் அப்பிரதேசப் பாடசாலைகளின் மாணவ, மாணவியர்களின் பிரதிநிதிகள் அடங்கிய குழு யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின யாழ்.அலுவலகத்தில் கண்காணிப்புக குழுவினரை நேற்று முற்பகல் 10 மணியளவில் சந்தித்தது. சுதந்திரமாகத் தமது கல்விச் செயற்பாடுகளை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளை எடுக்கும்படி கோரும் மகஜர் ஒன்றை மாணவப்பிரதிநிதிகள் கண்காணிப்புக குழுத்தலைவரிடம் அப்போது கையளித்தனர்.

அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

வடக்குக் கிழக்கில் வாழும் தமிழ் மக்களின் இயல்பு வாழ்க்கையை ஏற்படுத்தும் நோக்கில் உருவாக்கப்பட்டதே புரிந்துணர்வு உடன்படிக்கை ஆகும். கல்வி மக்களின் இயல்பு வாழ்க்கையின் பிரதான கூறு மட்டுமல்ல, அம்மக்களின் அடிப்படை உரிமையுமாகும். மக்களின் இவ்வடிப்படை உரிமையை மறுக்கும் வகையிலும், புரிந்துணர்வு உடன்படிக்கையை மீறும் வகையிலும் தென்மராட்சிப் பிரதேசத்தில் இராணுவம் மேற்கொண்டு வரும் அத்துமீறல் நடவடிக்கைகளை தென்மராட்சிக் கோட்டத் தமிழ் மாணவர் ஒன்றியத்தினராகிய நாம் தங்கள் மேலான கவனத்திற்குக் கொண்டுவர விரும்புகிறோம்.

எமது பிரதேசத்திலுள்ள ஆறு பாடசாலைகள் தமது சொந்தக் கட்டடங்களில் இயங்குவதற்கான சுதந்திரம் மறுக்கப்பட்டுள்ளது. இதனால் அப்பாடசாலை மாணவர்கள் அகதிகளாகப் பல்வேறு பாடசாலைகளுக்கும் அலைவதுடன், அவர்களில் சிலர் தமது கல்வியைக் கைவிட்டுமுள்ளனர்.

பாடசாலைக் கட்டடங்களிலிருந்து இராணுவம் வெளியேறியதாகக் காணப்பித்தாலும்கூட அப்பாடசாலைகளைச் சுற்றி அவர்கள் நிலைகொணடிருப்பதால் பாடசாலைகளின் சுதந்திரமான செயற்பாடுகள் தடுக்கப்பட்டுள்ளன. பாடசாலையைச் சுற்றி முகாம்களும், காவலரண்களும் அமைத்திருப்பதால் மாணவர்களும், ஆசிரியர்களும் பாடசாலைவர அஞ்சுகின்றனர். குறிப்பாக வளர்ந்த பெண் பிள்ளைகளும், ஆசிரியைகளும் பாடசாலைக்கு வர அஞ்சுகின்றனர். பல பெண்பிள்ளைகளை பெற்றோர்கள் பாடசாலைக்கு அனுப்பாது மறித்துள்ளனர்.

உசன் இராமநாதன் மகாவித்தியாலயத்தின் ஆரம்பப் பிரிவுக் கட்டடங்கள், விளையாட்டு மைதானம், பிரதான நுழைவாயில் போன்றவற்றில் இராணுவம் தொடர்ந்தும் நிலைகொண்டிருப்பதால் மாணவர்களும் ஆசிரியர்களும் வழமையான பாதையால் பாடசாலைக்கு வருவதற்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது. இதனால் மாணவர்களும் ஆசிரியர்களும் 300 மீற்றர் தூரம் மேலதிகமாகச்சென்று பாடசாலையுள் நுழைய வேண்டியுள்ளது.

வரணி மகாவித்தியாலயத்தில் கற்கும் மாணவர்கள் பாடசாலைக்கு வந்து செல்லும்போது பிரதான வீதி அடைக்கப்பட்டிருப்பதால் 500 மீற்றர் மணல்' பாதையால் பயணிக்க வேணடியுள்ளது. இப்பாதையில் சைகிள்களை மிகவும் கஷ்டப்பட்டே மாணவர்கள் உருட்டிச் செல்லவேண்டியுள்ளது. மழைக்காலம் தொடங்கினால் இப்பாதையில் பயணம் செய்யவே முடியாது.

கச்சாய்ப் பகுதியிலிருந்து நகரப் பாடசாலைகளுக்கு வரும் மாணவர்கள் 4 அல்லது 5 கிலோ மீற்றர் தூரம மேலதிகமாக பயணஞ் செய்ய வேண்டியுள்ளது.

பல வீடுகளில் இராணுவம் நிலைகொண்டிருப்பதால் அவ்வீட்டு உரிமையாளர்கள் உறவினர் வீடுகளிலும் வசதியற்ற கொட்டில்களிலும் வாழ்ந்து வருகின்றனர். அக்குடும்பங்களிலுள்ள பிள்ளைகள் கல்வி கற்பதற்கான வசதியில்லாது அல்லற்படுகின்றனர்.

தென்மராட்சிப் பிரதேசத்தில் உள்ளவர்களில் பெரும்பாலானோர் விவசாயிகளும், மீனவர்களுமாவர். அவர்களை சுதந்திரமாக தொழில் செய்ய விடாது இராணுவம் தடுப்பதால் இவர்களின் பிள்ளைகள் கல்வி கற்பதற்கான வசதியின்றி கஷ்டப்படுகின்றனர்.

இவ்வாறான பல்வேறு பிரச்சினைகளை தென்மராட்சி மாணவர்கள் ஆகிய நாம் தினம்தினம் அனுபவித்து வருகின்றோம். இப்பிரச்சினைகளிலிருந்து விடுபட்டு நாம் சுதந்திரமான முறையில் எமது கல்வியைத் தொடர விரும்புகின்றோம். இதற்கான ஆக்கபூர்வமான முயற்சிகளை கூடிய விரைவில் மேற்கொண்டு சாதகமான பதில்களைத் தருவீர்கள் என எதிர்பார்த்து நிற்கின்றோம். எமது சுதந்திரமான கல்விக்குத் தொடர்ந்தும் முட்டுக்கட்டை இடப்படுமானால் மாணவர்களாகிய எமக்குப் போராடுவதைத் தவிர வேறு மார்க்கமில்லாது இருக்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்கின்றோம் - என்றுள்ளது.

# அரசியல் போரின் மூலம் உரிமைகளை பெறுவோம்!

## றீகன் நினைவு தினத்தில் துரை

மட்டக்களப்பு,ஜூலை20

'உயிரிழப்பினைத் தவிர்த்து, அரசியல போர் மூலம் எமது உரிமைகளை வென்றெடுப்போம்.'

- இவ்வாறு கூறினார் விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு - அம்பாறை துணை அரசியற் பொறுப்பாளர் துரை, லெப்.கேணல் றீகனின் 12 ஆவது நினைவுதினம் மட்டக்களப்பு மாமாங்கம் தமிழீழ விடுதலைப் புலிகளின் அலுவலகத்தில் அனுஷ்டிக்கப்பட்ட போது, கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் தொடர்ந்து உரையாற்றுகையில் கூறியதாவது:-

"தனது குடும்பத்தினரை இராணுவம் வெட்டியழித்தபோதும் றீகன் தமிழழத்தை வென்றெடுக்க எமது போராளிகளை வழி நடத்தியவர். பல படையணிகள் உருவாக்கப்பட கேணல் கருணாவிற்குத் துணை யாக நின்றவர்.

"உலகில் ஆயுதப் போராட்டம் மக்கள் போராட்டமாக மாறி, உரிமைகளை வென்ற வரலாறு உண்டு. இன்று தேசத்தை மீட்க அனைத்து மக்களும் ஒன்றுசேரவேண்டும். அப்போதுதான் நாம் எம்மை ஆளும் நிலைமை ஏற்படும். மக்கள் அரசியல் செயற்பாட்டிற்கு தமது பங்களிப்பை எந்த வடிவத்திலும வழங்கலாம்".

- இவ்வாறு கூறினார் அவர்.

மேற்படி நிகழ்வுகள் விடுதலைப புலிகளின் மட்டு - அம்பாறை மாவட்ட கொள்கை முன்னெடுப்புப் பிரசாரப் பொறுப்பாளர் மா. இளங்கோவன் தலைமையில் நடைபெற்றன. கொடியினை ஏற்றி பெயர்ப்பலகையினை துணை அரசியல் பொறுப்பாளர் துரை திரைநீக்கம் செய்து வைத்தார். அதிபர் மு.இராசரத்தினம், இறைவரித் திணைக்கள அதிகாரி எஸ். கோபாலசிங்கம் ஆகியோரும் உரையாற்றினர். (ம)

# ஊடகத்துறையை கட்டுப்படுத்தும் முயற்சிகளைக் கைவிடுங்கள்!

## ஜனாதிபதியிடம் கோரிக்கை

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவைச் சந்தித்து, நாட்டின் ஊடகத்துறையினை ஜனாதிபதி தனது கட்டுப்பாட்டின்கீழ் கொண்டுவர முயற்சிப்பதைத் தவிர்த்துக்கொள்ளுமாறு சுதந்திர ஊடகத்துறை இயக்கப் பிரதிநிதிகள் கேட்டுக்கொண்டதாக ஆங்கிலப் பத்திரிகை ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

அந்தச் செய்தியில் குறிப்பிட்டிருப்பதாவது:-

முன்னுக்குப் பின் முரணான ஜனாதிபதியின் சில கருத்துக்களை, முழுமையாக அரச ஊடகங்கள் வெளியிடாதபோதும் அவற்றை தனது கட்டுப்பாட்டின்கீழ் கொண்டு வரப்போவதாய் ஜனாதிபதி மிரட்டல் விட்டுள்ளார். இதற்கு மேற்படி இயக்கம் தனது கண்டனத்தை இந்தச் சந்திப்பில் தெரிவித்துள்ளது.

மேலும் கடந்த பொ.ஐ.மு. ஆட்சிக் காலத்தில் ஊடகத்துறை பல தாக்கங்களுக்கு முகங்கொடுக்க வேண்டியிருந்தது. செய்தியாளர்களுக்கு பயமுறுத்தல், பத்திரிகைப் பணிமனைகள் மூடிச் 'சீல்' வைக்கப்பட்டமை, செய்தித்தணிக்கைகள் என்று பலவிதமாக ஜனாதிபதியும் அவரது கட்சியும் ஊடகங்களை தங்கள் சொந்த சொத்துப் போலவே பாவித்துள்ளனர். எது எவ்வாறாயினும், சுதந்திர ஊடகததுறை இயக்கமானது உண்மையாகவும் நடுநிலைமையாகவும் பொறுப்புணர்வுடனும், ஊடகத் துறை நெறிமுறைகளை பேணுகிறது'

என அந்த இயக்கம் தெரிவித்துள்ளது. (ஒ)

## ஆங்கிலதின எழுத்துப் போட்டி

யாழ். கல்வி வலய ஆங்கிலதின எழுத்துப் போட்டிகள் அனைத்தும் எதிர்வரும் 23ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9மணிக்கு நல்லூர் ஸ்தான சி.சி.த.க. பாடசாலையில் நடைபெறவுள்ளன.

கோட்ட மட்டப் போட்டிகளில் முதலாம், இரண்டாம் இடங்களைப் பெற்றவர்களை இதில் தவறாது கலந்துகொள்ளுமாறு யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் கேட்டுள்ளார்.

# ஏற்றுமதி இறக்குமதியை ஊக்குவிக்க இலத்திரனியல் இணையத்தளம்

கொழும்பு,ஜூலை20

இலங்கையில் முதல்முறையாக அமைக்கப்படும் ஏற்றுமதி இறக்குமதிக்கான இலத்திரனியல் வாயில் இணையத்தளம் மூலம் இலங்கை அரசுக்கு மாதாந்தம் பல கோடிரூபா வெளிநாட்டு வருமானமாகக் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

எந்தவிதமான முதலீடுகளும் இன்றி 40 வீதமான பங்குகளும், அதற்கான ஆதாயமும் கிடைக்கும் என்று வர்த்தக, வாணிப, நுகர்வோர் விவகார அமைச்சர் ரவி கருணாநாயக்க கடந்த புதன்கிழமை கூறினார்.

வர்த்தக, வாணிப அமைச்சும் பல்தேசிய நிறுவனமான பி.ஸி.கொம்பியூட்டர் நிறுவனமும் கூட்டாக இந்த ஏற்றுமதி இறக்குமதிக்கான இலத்திரனியல் வாயில் இணையத்தளத்தை ஆரம்பித்துள்ளன. கடந்த புதன்கிழமை ஆரம்பிக்கப்பட்ட இப்புதிய இணையத்தளத்துக்கு "சேர்விஸ லங்கா" எனப் பெயரிடப்பட்டுள்ளது. இது தொடர்பான ஒப்பந்தம் வர்த்தக, வாணிபத்துறை அமைச்சில் கைச்சாத்திடப்பட்டது. அமெரிக்கத்தூதுவர் ஆஸ்லி வில்ஸ், அமைச்சர் ரவி கருணாநாயக்க ஆகியோர் முன்னிலையில் அமைச்சின் செயலாளர் ஹர்ஷ விக்கிரம சிங்கவும், பி.ஸி கொம்பியூட்டர் நிறுவனத்தின் தலைவரும் இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டனர்.

முப்பது லட்சம் அமெரிக்க டொலர்களை மூலதனமாகக் கொண்டு ஆரம்பிககப்பட்டுள்ள இப்புதிய இணையத்தளத்தில் 40 வீதப் பங்குகள் இலங்கை அரசுக்கு உரித்துடையதாகும். (ஒ)

## புனர்வாழ்வு அலுவலகம் மட்டுநகரில்!

தமிழர் புனர்வாழ்வுக்கழக அலுவலகம் மட்டக்களப்பு - மகிழடி வீதியில் விடுதலைப் புலிகளின் சிறப்பு அரசியல பொறுப்பாளர் சி.கரிகாலனால் நேற்றுமுன்தினம் காலை திறந்து வைக்கப்பட்டது.

மட்டு. - திருமலை மறைமாவட்ட ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை, விடுதலைப் புலிகளின் புளியந்தீவு கோட்ட இராணுவத் தளபதி சி.சாந்தன், அரச அதிபர் வே.சண்முகம், துணை அரசியல் பொறுப்பாளர் கா.துரை ஆகியோர் இதில் கலந்துகொண்டனர். (ம)

## கருத்தரங்கு

யாழ். உதைபந்தாட்ட லீக்கினால் கடந்த பெப்ரவரியில் நடத்தப்பட்ட மத்தியஸ்தர் பரீட்சைக்குத் தோற்றியவர்களுக்கான கருத்தரங்கு ஒன்று நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10 மணிக்கு லீக் பணிமனையில் இடம் பெறவுள்ளது. (ம-3)

# மக்கள் முகம்



வணணார்பண்ணை, யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த செல்லத்துரை கனகசுந்தரம் 29.05.2002 அன்று சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

ஓய்வுபெற்ற தபால் அதிபராகிய இவர் யாழ்.மாவட்ட நீதிபதி இ.த.விக்னராஜா முன்னிலையில் அண்மையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டுள்ளார். (எ)

★ ★ ★

மருதங்கேணி, தாளையடியைச் சேர்ந்த ஆயுர்வேத வைத்தியர் சிவசாமி மயில்வாகனத்திற்கு சுகாதார போசணை நலனோம்புகை அமைச்சு 'சஹாஸ்ராபிஷேக வைத்திய சிகாமணி' விருது வழங்கிக் கௌரவித்துள்ளது.



நான்கு பரம்பரையாக சித்த வைத்தியத்துறையில் ~ மருத்துவ சேவையாற்றிய குடும்பத்தைச் சேர்ந்த வைத்தியர் சிவசாமி மயில்வாகனம், இலங்கையிலே கௌரவ மருத்துவ சேவையையாற்றியுள்ள நூறு சுதேச மருத்துவர்களுள் ஒருவராக சுகாதார போசனை நலனோம்புகை அமைச்சினால் கௌரவிக்கப்பட்டுள்ளார். (எ-173)

★ ★ ★

தெல்லிப்பழை, புற்றளையைச் சேர்ந்த இளைப்பாறிய அதிபர் எஸ்.தா மலிங்கம் நீதி அமைச்சினால் அகில இலங்கைச் சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்டு,



யாழ்.மாவட்ட நீதிபதி ஆர்.ரீ.விக்னராஜா முன்னிலையில் அண்மையில் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

பிரபல சமூக சேவையாளரான இவர் கரவெட்டி விக்னேஸ்வராக் கல்லூரியில் 1950ஆம் ஆண்டு உதவி ஆசிரியராகப் பணியை ஆரம்பித்து 1959ஆம் ஆண்டு தொடக்கம் 1964ஆம் ஆண்டுவரை அக்கல்லூரியின உப அதிபராகக் கடமையாற்றினார். பின்னர் பதவி உயர்வுபெற்று கரணவாய் மகா வித்தியாலய அதிபராக நியமனம் பெற்றார். பின் தெல்லிப்பழை புற்றளை மகாவித்தியாலயத்திற்கு இடமாற்றம் பெற்று அங்கு 17 வருடங்கள் அதிபராகச் சிறப்பான பணிகள் ஆற்றினார். (எ-173)

★ ★ ★

அம்பாறை மாவட்ட சமூக நல்வாழ்வு அமைப்பின் ஸ்தாபகரும், இணைப்பாளரும், அம்பாறை மாவட்ட அரசசார்பற்ற அமைப்புகளின் இணையத் தலைவரும், சமூக சேவை நிறுவனங்களின் கூட்டமைப்புத் தலைவருமான 'சமூக ஜோதி' ச.செந்துராசா லண்டனில் நடைபெறவுள்ள ஒக்ஸ்பாமின் உலக மாநாட்டில் கலந்து கொள்வதற்காக லண்டன் பயணமாகியுள்ளார்.



'ஒக்ஸ்பாம்' நிறுவனமானது இலங்கையில் உள்ள தமது பங்காளி அமைப்புகளிடையே சிறந்த அமைப்பாக அம்பாறை மாவட்ட சமூக நல்வாழ்வு அமைப்பைத் தெரிவுசெய்து லண்டன் ஒக்ஸ்போட் பல்கலைக்கழகத்தில் நடைபெறும் உலக மாநாட்டுக்கு இலங்கைப் பிரதிநிதியாக ச.செந்துராசாவை அந்த அமைப்பு அழைத்துள்ளது. (எ-173)

★ ★ ★

இலங்கை சுங்கத் திணைக்கள உத்தியோகத்தர் எம்.ஆர்.ராஜ்மோகன் இலங்கை



சட்டக் கல்லூரியின் சட்டத்தரணிகளுக்கான மூன்று வருடங்களுக்குமான 22 பாடங்களையும், லண்டனில் பட்டம் பெற்ற 12 மாதங்களில் சித்தி யெய்தி சட்டக் கல்லூரி வரலாற்றில் புதிய சாதனை ஒன்றை நிலைநாட்டியுள்ளார்.

இச்சாதனையை நிலைநாட்டியுள்ள ஒரேயொரு தமிழ மாணவனான எம்.ஆர்.ராஜ்மோகன் பருத்தித்துறையைச் சேர்ந்தவராவார். (எ-173)

# சின்னஞ்சிறு விளம்பரம்

## மணமகள் தேவை

1964, பூராட நட்சத்திரம், செவ்வாய்க்குற்றமற்ற, U.K.இல் வேலை செய்பவருக்கு Sponser செய்யக் கூடிய மணப்பெண் தேவை. தொடர்பு: துரைவிமலா, நாச்சிமார் கோயிலடி, யாழ்ப்பாணம். (5734)

யாழ்.இந்து கௌரவ குடும்பத்தைச் சேர்ந்த, செவ்வாய்க் குற்றமற்ற, பட்டதாரி, 1975இல் பிறந்த மணமகனுக்கு தகுந்த மணமகளை எதிர்பார்க்கிறார்கள். பட்டதாரி அல்லது அரச நிறுவனங்களில் கடமை புரிவோர் விரும்பத்தக்கது. ஜாதக மற்றும் விவரங்களுடன் தொடர்பு கொள்ளவும். விளம்பர இல.1574, C/o உதயன், யாழ்ப்பாணம். (6130)

கனடா (Canada) நிரந்தர பிரஜாவுரிமை பெற்ற, 1971ஆம் ஆண்டு பிறந்த, விசாகம் 3ஆம் பாதம் 12இல் செவ்வாய் உள்ள மணமகனுக்கு அழகிய, படித்த மணமகள் தேவை. தொடர்பு: விளம்பர இல.1575, C/o உதயன், யாழ்ப்பாணம். (6129)

சதய நட்சத்திரம் 3ஆம் பாதம், (பாவம் 104) கொண்டவரும், 1970ஆம் ஆண்டில் பிறந்த, படித்த மணமகனுக்கு வெளிநாட்டிலுள்ள படித்த மணப்பெண் உடன் தேவை. நேரில் வரவும். "ஜீவா திருமண சேவை", சாத்தாவத்தை, மானிப்பாய் கிழக்கு, மானிப்பாய். (6181)

## வகுப்புகள்

Maths, English விசேடமாக O/L பரீட்சையில் A, B, C பெறுபேறுடைய Paper Class உட்பட தரம் 8,9,10 ஆரம்பத்திலிருந்து கற்பிக்கப்படும். ஆசிரியர், 85, சிவன்கோயிலடி மேற்கு வீதி, திருநெல்வேலி. (6147)

## இறைச்சிக் கோழி விற்பனைக்கு


புறொயிலர் மற்றும் இறைச்சிக் கோழிகள் மிகவும் குறைந்த விலையில் மொத்தமாகவும் சில்லறையாகவும் தினமும் சுத்தம் செய்து எவ்வேளையும் பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: Y.A. சுரேஸ், கிராமக்கோட்டடி, எரிபொருள் நிலைய முன் வீதியில் (150 மீற்றருக்குள்), பருத்தித்துறை. (சுத்தம் செய்தல் இலவசம்) (6108)

Broiler மற்றும் இறைச்சிக் கோழிகள் சுகாதார முறைப்படி சுத்தம் செய்து, தேவையான நிறைகளில், குறைந்த விலையில் தினமும் பெற்றுக்கொள்ளலாம். 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச் சந்தையடி, நல்லூர். (6058)

புறொயிலர் கல்பேட்ஸ் என்பன விற்பனைக்கு உண்டு 1kg 150/- மட்டுமே. சுத்தம்செய்து 1/2 கிலோவிலிருந்து பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: S.குமரன், 227, பிறவுண் வீதி, (நரிக்குண்டு அருகில்) யாழ்ப்பாணம். (6145)

புறொயிலர் இறைச்சிக் கோழிகள் விற்பனைக்கு உண்டு. 1kg 140/-. மொத்தக் கொள்வனவுகளுக்கு விசேட விலைக் கழிவுகள் உண்டு. தினமும் வேண்டிய நிறைகளில் சுத்தம் செய்து பெற்றுக்கொள்ளலாம். தொடர்பு: சிவா, பருத்தித்துறை வீதி (வட்டக்குளம் முன்பாக), கட்டப்பிராய். (6179)

புறொயிலர் இறைச்சிக்கோழி விற்பனைக்கு உண்டு. தொடர்பு: ப.ரஞ்சன், பொற்பதி றோட், கலைவாணி ஒழுங்கை, கொக்குவில் கிழக்கு. (6178)




**YARL PAADY RESIDENCY**

51C, Amman Road, Nallur; Jaffna. Phone : 021-2364

**TARIFF**

| | |
|---|---|
| DOUBLE BEDROOMS | |
| ✦ Deluxe | Rs.1530.00 (Two Persons) |
| ✦ Standard | |
| With Attach Bathrooms | Rs. 750.00 (Two Persons) |
| Extra Person | Rs. 250.00 |
| Without Attach Bathrooms | Rs. 600.00 (Two Persons) |
| Extra Person | Rs. 150.00 |
| DORMITORY | |
| ✦ Mats | Rs. 100.00 per Person |
| ✦ Beds (Sharing Rooms) | Rs. 250.00 per Person |

*All Rates exclude 10% Service Charge and Government Taxes*

(6133)


## விற்பனைக்கு

Original Prima கோழித்தீன், தண்ணீர்ப் பாத்திரங்கள், சாப்பாட்டுப் பாத்திரங்கள் நியாயமான விலையில் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். (6092)

நல்ல நிலையில் உள்ள Honda M.D. 90 GQ தொடரிலக்கம் கொண்ட மோட்டார் சைக்கிள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: க.சௌந்தரராஜன், சேவில் ஒழுங்கை, தும்பளை மேற்கு, பருத்தித்துறை. (6165)

Roland pad. Model No. SPD - 20 Brand - New, Yamaha Pad - Model No.: DD 50, Bongos, Piano (London Make) சிறு திருத்தங்களுடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: A.B. Asbury, Church Lane, Araly North. (6095)

நியூமொடல் சாளி எக்னோபவர் C/90 மோட்டார் சைக்கிள், ஒலிம்பியா ஆங்கிலத் தட்டச்சு, சிங்கர் தையல் மெசின், காஸ் குக்கர், நிப்போன் அன்ரனா பூஸ்ரர் இன்னும் பல பொருள்கள் விற்பனைக்கு உண்டு. சனிக்கிழமை பிற்பகலிலும் ஞாயிற்றுக் கிழமையிலும் பார்வையிடலாம். தொடர்பு: இல.129, இராசாவின் தோட்டம் வீதி, யாழ்ப்பாணம். (6170)

Gold fish மீன்கள் (BLACK & RED), PEARL, மஞ்சள், ஏஞ்சல் மற்றும் புதிய இனங்கள் விற்பனைக்கு உண்டு. விலை: ரூபா 75/- முதல் தொடர்பு: இல.169, மருத்துவபீடம் முன்பாக திருநெல்வேலி. (6174)

புதிய மொடல் (Electronic) சிறிய ரக (ஹெல்மெட், லைசன்ஸ் தேவையற்ற) மோட்டார் சைக்கிள், CD Set Panasonic 1400w என்பன விற்பனைக்கு உண்டு. No.40, பிறவுண் றோட், யாழ்ப்பாணம். (6180)

உடுப்பிட்டி, சந்நிதி பிரதான வீதியில் அமைந்துள்ள காணி ஒன்று விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இ. சந்திரசேகரி, 90,வித்தியாலயம் வீதி, திருகோணமலை. தொலைபேசி 21309. (6085)

## வீடு விற்பனைக்கு

பலாலி றோட்டுக்கு அண்மையில் தாழையடி ஒழுங்கை, திருநெல்வேலியில் 3 பரப்புக் காணியில் அமைந்த வீடு விற்பனைக்கு உண்டு. நேரில்வரவும். தொடர்பு: ரே.தம்பித்துரை, தாழையடி ஒழுங்கை, திருநெல்வேலி. (6172)

பலாலி றோட், கந்தர்மடச் சந்தியில் 11/2 பரப்புக் காணியில் இரு கடைகளுடன் அமைந்துள்ள வீடு விற்பனைக்கு உண்டு. நேரில் வரவும். தொடர்பு: ரே.தம்பித்துரை, தாழையடி ஒழுங்கை, திருநெல்வேலி. (6171)

## தவறிவிட்டது

18-07-2002 அன்று திருநெல்வேலி முத்துமாரி அம்மன் கோயிலுக்கும் கச்சேரிக்கும் இடைப்பட்ட பகுதியில் திறப்புக் கோர்வை (மோட்டார் சைக்கிள், அலுமாரி, கதவு) ஒன்று தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் முத்திரைச்சந்தி, திருவள்ளுவர் அச்சகத்தில் ஒப்படைத்து உதவவும். சன்மானம் வழங்கப்படும். (6148)

உச்சியோடை, மானிப்பாய் வடக்கு, மானிப்பாய் என்னும் முகவரியில் வசிக்கும் மார்க்கண்டு புஸ்பமலர் என்பவரின் தேசிய அ.அட்டை (இல.515801626V) கடந்தவாரம் சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்துக்கும் மானிப்பாய்ச் சந்திக்கும் இடையில் பஸ்ஸில் பயணிக்கும்போது தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து மேற்குறிப்பிட்ட முகவரியில் ஒப்படைத்துதவவும். சன்மானம் வழங்கப்படும். (C/23003)


போசன் வேலையாளர்கள்

**தேவை**

மேசன்வேலைக்கு ஆள்கள் தேவை. தகுதிக்கேற்ற ஊதியம் வழங்கப்படும்.

மனோகரன் அன்ட் வெற்றிவேல்.
49, அம்பலவாணர் வீதி,
அத்தியடி, யாழ்ப்பாணம். (6140)



**விற்பனைக்கு**

செங்கற்கள்
விற்பனைக்கு உண்டு.
தொடர்பு:-
தினேஸ் பேக்கரி
மானிப்பாய்.
(6154)



இன்று ஆரம்பமாகின்றது

**திருமறைக் கலாமன்றம்**

நடத்தும்

ஜஸ்ட்சனின்

**ஓவியக் கண்காட்சி**

(சமகால வாழ்வுச் சுவடுகளின் வரைவுப் பதிவுகள்)

காலம்:
20,21,22,23, ஜூலை 2002
(சனி, ஞாயிறு, திங்கள், செவ்வாய்)

நேரம்:
காலை 9.00 மணி - மாலை 5.00 மணி

இடம்:
கலாமுற்றம்
15,றக்கா வீதி, யாழ்ப்பாணம்.

*அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்*

பாசவசம் இசைவசம்

~ திருமறைக் கலாமன்றம்
*238, பிரதான வீதி,*
*யாழ்ப்பாணம்.*

T.P.021-2393
website: www.cpateam.org.
E-mail: cpajaffna @eureka.lk

(C/2300)



**FLASH VACANCY**
**MICRO PROJECT TEAM**

**VACANCY**

The Micro Project Team as a part of Project Implementation for Jaffna District is announcing the following vacancies in order to assist Government Implementing Partner:

1. Field Monitoring Officer
2. Field Finance Officer
3. Computer clerk

**Candidates are expected to meet the following requirements:**

- Secondary education with good experience in Community Activities.
- Fluency in English, both spoken and written.
- Good inter - personal skills, team work and flexibility.
- Experience in project documentation and computer skills.
- Field experience in assessment and monitoring projects (post 1 and 2).
- Excellent report writing skills (post 1 and 2).
- Ability to perform independent office management (post 1 and 2).
- Holding of Motorcycle driving licence (post 1 and 2).
- Good co-ordination abilities with other project partners (post 1,2,3).

Candidates should be aware that: **Over 60% OF THE WORK TIME WILL BE SPENT IN THE FIELD.**

Applications and C.V. should be forwarded to the address bellow, on or before: 26th July 2002.

**UNHCR**
223, Temple Road, Jaffna.

(6132)


**31ஆம் நாள் நினைவஞ்சலி**

| மலர்வு | உதிர்வு |
|---|---|
| 03 - 07 - 1930 | 20 - 06 - 2002 |



**திருமதி அப்புத்துரை பூமணி**

இன்று (10.07.2002) சனிக்கிழமை ந.ப.12.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் மதியபோசனத்திலும் பங்குகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

*பாடசாலை லேன்,*
*வண்ணார்பண்ணை வடமேற்கு,*
*ஆனைக்கோட்டை.*

(6162)

- குடும்பத்தினர்.

யாழ்.பல்கலைக்கழக சித்தமருத்துவ மாணவர் ஒன்றிய
வளர்ச்சி நிதிக்காக யாழ்.பல்கலை மாணவர் இணைந்து வழங்கும்
முற்றிலும் வித்தியாசமான - அநேகரின் பாராட்டைப் பெற்ற

தாளம்

(இன்னிசையும் பரதமும்)

MEGA MUSICAL EVENING WITH DANCE

ஈழத்துச் சாந்தனின் குரல் வண்ணம் மற்றும் நீங்கள் எப்போதும் கண்டிராத புதிய அம்சங்களுடன் - (6204)

நாளை (21.07.2002) ஞாயிறு மாலை 2.30 மணிக்கு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில்

காணத்தவறாதீர்கள்!

- சித்தமருத்துவ மாணவர் ஒன்றியம், யாழ்.பல்கலைக்கழகம்

வடமராட்சி சிகை அலங்கரிப்பாளர் சங்கத்தின்

## முக்கிய அறிவித்தல்

எதிர்வரும் (24.07.2002) புதன்கிழமைமுதல் சகல சிகை அலங்கரிப்பு நிலையங்களும் திறந்து இயங்குதல் வேண்டும். 28.07.2002 ஞாயிறு முதல்வரும் ஞாயிற்றுக்கிழமைகள் விடுமுறை தினங்களாகக் கருதப்படும்.

இந்த முடிவு மேற்படி சங்கத்தால் எடுக்கப்பட்ட இறுதித் தீர்மான மாகும்.

ஆகவே, இதனை அலட்சியப்படுத்தி மீறுபவர்களுக்கு 1000 ரூபா அபராதம் அறவிடப்படுவதுடன் அந்த விடயம் தினசரிப் பத்திரிகை களிலும் பிரசுரிக்கப்படும் என்பதனையும் இத்தால் சகல அங்கத்த வர்களுக்கும் அறியத்தருகின்றோம்.

வடமராட்சி சிகை அலங்கரிப்பாளர் சங்கம்,
நெல்லியடி.

(C-23007)

கிளி/வேம்பொடுகேணி சி.சி.த.க. பாடசாலை அபிவிருத்திச் சங்க

## பொதுக்கூட்டம் - 25.07.2002

இடம் : கொடிகாமம் தனியார் கல்விநிலையம்
(பஸ் நிலையம் அருகில்)
நாள் : 25.07.2002 (வியாழக்கிழமை).
நேரம் : முற்பகல் 10.00 மணி.

அனைத்துப் பெற்றோர்களையும் அனைத்து ஆசிரியர்களையும் சமுகம் தரும்படி வேண்டுகின்றோம்.

*குறிப்பு:-*
*01. இலவச சீருடைக்கான விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதிநாள் ஆகும்.*
*02. மாணவர்களின் பி. அ. பத்திரங்களின் ஒருதொகுதி மீள வழங்கப்படும்.*
*03. ஆசிரியர்களின் சம்பளம் அன்றையதினம் வழங்கப்படும்.*

சி.இமைலிங்கம்
தலைவா (அதிபர்) (6197)

பொ.சுப்பிரமணியம்
செயலாளர்.

## வரவேற்பதில் பெருமகிழ்வடைகின்றோம்



இலங்கைக் கராத்தேயின் தந்தை என அழைக்கப்படுபவரும SHOTOKAN KARATE - DO INTERNATIONAL FEDE-RATION இன் இலங்கைக்கான பிரதிநிதியும், தலைவருமாகிய SHIHAN BONNIE ROBERTS (8TH DAN Black Belt) அவர்கள் யாழ்ப்பாணத்திற்கு வருகைதந்து S.K.I.F. இன் யாழ். கிளை மாணவர்களுக்கு பயிற்சி முகாமை நடத்தவுள்ளார். இவரை வரவேற்பதில் நாம் பெருமகிழ்வடைகின்றோம்.

S.K.I.F. இன் கழகப்பயிற்றுநர்,
மாணவர்கள், நலன்விரும்பிகள்.

(6192)

## ஓட்டோ உரிமையாளர் கலந்துரையாடல்

யாழ்ப்பாணம்,ஜூலை20

குடாநாட்டின் சகல பகுதிகளிலும் சேவையில் ஈடுபடும் ஓட்டோக்களின் உரிமையாளர்கள் மற்றும் சாரதிகளுடன் ஓட்டோ சேவை ஒழுங்கு தொடர்பாக விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10மணிக்கு யாழ்.ப.நோ.கூ.சங்க கேட்போர் கூடத்தில் முக்கிய சந்திப்பு ஒன்றை நடத்தவிருக்கின்றனர். (-3)

## தொலைக்கல்வி இறுதிப் பரீட்சை

தொலைக்கல்வி பயிற்சி நெறியை மேற்கொண்டவர்களுக்கான இறுதிப் பரீட்சை அடுத்த மாதம் இடம்பெறும் என தேசியக் கல்வி நிறுவனம் அறிவித்துள்ளது.

தொலைக்கல்விப் பயிற்சி நெறியை மேற்கொண்டு தேர்ச்சி பெறாதவர்கள் இந்தப் பரீட்சைக்கு தோற்ற வசதியாக தங்கள் பெயர் விவரங்களை நாளை ஞாயிற்றுக்கிழமை யாழ்.இந்துக் கல்லூரியில் செயற்படும் தொலைக்கல்வி நிலையத்தில் பதியுமாறு சிரேஷ்ட போதனாசிரியர் கேட்டுள்ளார். (-3)

## விண்ணப்ப திகதி நீடிப்பு

அரியாலை சனசமூக நிலையத்தின் 53ஆவது ஆண்டு நிறைவையொட்டி யாழ்.மாவட்ட ரீதியாக நடத்தப்படவுள்ள கரப்பந்தாட்டம் மற்றும் வலைப்பந்தாட்டப் போட்டிகளுக்கான விண்ணப்ப இறுதித்திகதி நாளை மறுதினம் திங்கட்கிழமை வரையும் நீடிக்கப்பட்டுள்ளதாக நிலையத்தின் தலைவர் அறிவித்துள்ளார். (ஒ-10)

## திருநெல்வேலியில் நாய்களுக்கு தடுப்புசி

நல்லூர் பிரதேச சபை எல்லைக்குட்பட்ட பகுதிகளில் நாளைமறுதினம் திங்கட்கிழமை நாய்களுக்கு விசர் நாய் தடுப்பூசி போடப்படவுள்ளது.

அன்று காலை 9மணிக்கு இந்து இளைஞர் வாலிபர் சங்கத்திலும் -

11மணிக்கு காளிகோவில் சனசமூக நிலையத்திலும் -

பிற்பகல் ஒரு மணிக்கு கலைச்சுடர் சனசமூக நிலையத்திலும் நாய்களுக்குத் தடுப்பூசி போடப்படவுள்ளதாக நல்லூர் பிரதேச சபை அறிவித்துள்ளது.

நல்லூர் பொதுச் சுகாதார பரிசோதகரால் மேற்கொள்ளப்படவுள்ள இந் நடவடிக்கையின் போது வளர்ப்பு நாய்களுக்கான உரிமத்தகடும் வழங்கப்படவுள்ளது. (ஒ-117)

## கலந்துரையாடல்

ஜனசக்தி காப்புறுதி நிறுவன யாழ்மாவட்ட அலுவலகத்தைச் சேர்ந்த அனைத்து வெளிக்கள உத்தியோகத்தர்களுக்குமான கலந்துரையாடல் ஒன்று இன்று காலை 9மணிமுதல் அலுவலக மண்டபத்தில் இடம்பெறும் என்று தெரிவிக்கப்பட்டது. (ம-3)

எழுதுவினைஞர் பரீட்சை!
விற்பனையாகிறது
பொது உளச்சார்பும் மொழித்திறனும்
ஆக்கம்: V.A.சிவராசா
இங்கும் பெறலாம்!
பூபாலசிங்கம் புத்தகசாலை.
(6203)

ராஜா யாழ்ப்பாணம்.
அஜித், ஜோதிகா, வடிவேல், ராதாரவி நடித்த
ராஜா
தினசரி 10.30, 2.30, 5.30
(C-22943)

நிறைஞ்சனாஸ் சங்கானை
ரஜனி, சிவாஜி, சௌந்தர்யா நடித்த
படையப்பா
காட்சிகள்: 11.00, 2.30, 5.30 (அதியநேரம்)
(C-22944)

நாகம்ஸ் சுன்னாகம்
பிரபுதேவா, கீர்த்திரெட்டி, வடிவேல், கடாலி, விவேக் நடித்த
மனதைத் திருடிவிட்டாய்
(கீஸ்ஸ்)
காட்சிகள்: 11.00, 3.00, 6.30 (பு.நே)
(6191)

ஆடிவேல் கதிர்காம சுற்றுலா

வரப்போகும் ஆடிவேல் விழா, கதிர்காம முருகன் தரிசனம காண்பதற்கும் மற்றும்
கொழும்பு, கண்டி, நுவரேலியா, றம்பொடை, கக்கல, திருகோணமலை, முனீஸ்வரம் ஆகிய இடங்களுக்கும் சுற்றுலாக்குழு ஜூலை 22ஆம் திகதி திங்கட்கிழமை புறப்படவுள்ளது.
பயணம் - சொகுசு பஸ் சேவை
தங்குமிட வசதிகளுடன்
பயணக் கட்டணம் 3,250/= மட்டுமே!
இச்சுற்றுலாவில் பங்குகொள்ளவிரும்புவோர் கீழ்க்காணும் இடங்களில் உடன் பதிவுசெய்துகொள்ளவும்.
மேலதிக விவரங்களையும் அறிந்துகொள்ள

✱ கணேசன் கொமினிக்கேஷன்
கொக்குவில் சந்தி,
கொக்குவில்.
T.P. 021-2585

✱ ஸ்ரீராம் கொமினிக்கேஷன்
காளி கோவிலடி, குறுக்கு வீதி,
நீர்வேலி வடக்கு.
T.P. 021-3423

✱ றஞ்சனாஸ் புடைவை மாளிகை
நவீன சந்தை,
சுன்னாகம்.

✱ சுவாஸ் கொமினிக்கேஷன்
தாவடிச்சந்தி,
தாவடி.
T.P. 021-3522

✱ பிள்ளையார் கொமினிக்கேஷன்
கே.கே.எஸ். வீதி, இணுவில்.
T.P. 021-3570

✱ மகாத்மா கொமினிக்கேஷன்
ஏழாலை.

(6202)

## கண்ணீர் அஞ்சலி

கிளி/வேம்பொடுகேணி சி.சி.த.க. பாடசாலையின்
உதவி அதிபர் திரு. ஆ. தங்கவேலு
அவர்களின் பாசமிகு தந்தையார்

### அமரர் மரியாம்பிள்ளை ஆறுமுகம்

(அரசர்கேணி, பளை)

அவர்களின் மறைவினையொட்டி துயருற்றிருக்கும் அன்னாரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவிப்பதோடு அன்னாரன் ஆத்மா சாந்தியடைய இறைவனை வேண்டுகின்றோம்.

***கிளி/வேம்பொடுகேணி சி.சி.த.க.பா.*** அதிபர், ஆசிரியர்கள்
*இத்தாவில், பளை.* (6296) ஊழியர்கள்.

## மரண அறிவித்தல்கள்

### சங்கரப்பிள்ளை செல்வநாயகம்

அல்லைப்பிட்டியைப் பிறப்பிடமாகவும் கந்தர்மடம், பழம் வீதியை வசிப்பிடமாகவுங்கொண்ட சங்கரப்பிள்ளை செல்வநாயகம் அவர்கள் நேற்று (19.07.2002) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் அல்லைப்பிட்டி சங்கரப்பிள்ளை - மீனாட்சி தம்பதிகளின் அன்பு மகனும் சுந்தரம்மாவின் அன்புக் கணவரும் சங்கரத்தை ஆனந்தக்குமாரசாமி - தையல்நாயகி தம்பதிகளின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற பூமணி, இராசையா மற்றும் செல்வரத்தினம் ஆகியோரின் சகோதரரும் செல்வநாயகி (உப அஞ்சல் அலுவலகம், நாச்சிமார்கோயிலடி), செல்வநாதன், செல்வமூர்த்தி (சவூதி), செல்வசுந்தரராசா, செல்வானந்தன் (சவூதி), செல்வராணி, செல்வஜோதி (கன்னியர்மடம் ம.வி.) ஆகியோரின் பாசமிகு தந்தையும் குகதாஸ் (கொழும்பு), இராஜரத்தினம் ஆகியோரின் மாமனாரும் நேசல்யாவின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.07.2002) சனிக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக கோம்பையன்மணல் மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*41A, பழம் வீதி,*
*கந்தர்மடம்,*
*யாழ்ப்பாணம்.* (6108)

தகவல்:
செ.செல்வசுந்தரராசா
(மகன்)

### நல்லையா கனகரத்தினம்

(C.T.B. - கரம்பகம்)

மிருசுவில், கரம்பகத்தைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும், தற்பொழுது கொக்குவில் கிழக்கு, ஆடியபாதம் வீதியில் வசித்து வந்தவருமான நல்லையா கனகரத்தினம் (முன்னாள் C.T.B. உத்தியோகத்தர், கிளிநொச்சி) நேற்று (19.07.2002) வெள்ளி அதிகாலை காலமாகிவிட்டார்.

அன்னார் தங்கம்மாவின் அன்புக் கணவரும் தங்கரத்தினம், ஜெயராசசிங்கம், இரத்தினசோதி (லண்டன்), புஸ்பராசா (சுவிஸ்), இரத்தினாவதி (பிரான்ஸ்), தேவராசா (சுவிஸ்), வதனாராணி (ஆசிரியை, பம்பலப்பிட்டி இந்துக் கல்லூரி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், பொன்னுத்துரை (தேவா), யோகம்மா, குணநாதன் (லண்டன்), மேகலா (சுவிஸ்), ஞானதாஸ் (பிரான்ஸ்), உதயமதி (சுவிஸ்), விமலேந்திரராசா (உதவிச் செயலாளர், துறைமுக கிழக்கு அபிவிருத்தி அமைச்சு) ஆகியோரின் பாசமிகு மாமனாரும், சர்மிலன் (சப்ரகமுவ பல்கலைக்கழகம்), சாரங்கா (மாணவி, கொக்குவில் இந்துக் கல்லூரி), சஜீவிகா (மாணவி, வேம்படி மகளிர் கல்லூரி), மேனகா, கஜன், கோபிகா (மாணவர்கள், வீரசிங்கம் ம.வி.), சுஜானி, நிசானி, நிலானி (லண்டன்), சவீனன், சவீனா (சுவிஸ்), ஞானிதா, ஞானிதன், சுஜீதன் (பிரான்ஸ்), திபிசா (சுவிஸ்), இலக்கியா ஆகியோரின் பாசமிகு பேரனும் காலஞ்சென்றவர்களான நவரத்தினம், இராசம்மா அழகரத்தினம் மற்றும் நேசம்மா, அருளம்மா ஆகியோரின் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (22.07.2002) திங்கட்கிழமை மதியம் 1.30 மணிக்கு கொக்குவில் உள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக கொக்குவில் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*ஆடியபாதம் வீதி,* மனைவி, மக்கள், மருமக்கள்
*கொக்குவில் கிழக்கு,* க.ஜெராசசிங்கம் (மகன்)
*கொக்குவில்.* (6205) க.பொன்னுத்துரை (தேவா, மருமகன்)

## முகாமிலிருந்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

றீர்கள். வீடில்லாதவர்கள் பாடசாலைக் கட்டடங்கள் தவிர்ந்த ஏனைய அரச கட்டடங்களில் குடியேற அனுமதிக்கப்படுகிறீர்கள். ஆள்கள் இல்லாத வீடுகளில் நீங்கள் குடியேறலாம். குடியேறமுன் பொதுசனத் தொடர்பு அதிகாரியுடன் தொடர்பு கொண்டு அனுமதியைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

இதற்குமேலும், இருப்பிட வசதி தேவைப்படின் முகாம்களுக்கு அப்பால் உங்களது சொந்தக் காணிகளில் தற்காலிகக் குடியிருப்புகளை அமைக்கலாம். அது 200 மீற்றருக்கு அப்பால் அமையவேண்டும். அப்படிக் குடியேறுபவர்கள் தங்களுடைய காணிகளின் உறுதிகளைக் காட்டியே குடிசைகள் அமைக்க வேண்டும்.

குடியிருப்பு முகாம் அமைக்க காணிகளை ஒதுக்கும் யோசனைகள் உண்டு. துறைமுகத்திற்கு அண்மையில் யாரையும் குடியமர்த்த இப்பொழுது அனுமதிக்க இயலாது.

யுத்த நிறுத்தம் மட்டுமே இப்பொழுது ஏற்பட்டுள்ளது சமாதானம் இன்னும் வரவில்லை. அது வந்ததும் நாங்கள் இங்கிருந்து முற்றாக வெளியேறிவிடுவோம்.

விவசாயிகளது பிரச்சினை ஒரு பெரிய பிரச்சினை. விவசாயிகளது வீடுகளிலேயே மீன்பிடிக் குடும்பங்கள் குடியேறியுள்ளன. அவர்கள் மீளக்குடியேறும்பொழுது அவர்களது வீடுகளை அவர்களிடம் ஒப்படைக்க நடவடிக்கை எடுக்கப்படும். அதுபற்றி நாங்கள் கலந்துரையாடி உள்ளோம்.

புகையிலைச் செய்கைக்கும் நெற்செய்கைக்கும் அனுமதிக்கப்படும்.

மீன்பிடிப்பவர்கள் பாலைதீவு, இரணைதீவுப் பகுதிகளில் போய்த் தங்கிநின்று மீன்பிடிக்க அனுமதிக்க முடியாது. அந்தப் பகுதிகளில் அண்மையில் வேண்டாத பிரச்சினைகள் ஏற்பட்டுள்ளன. கல்முனைப் பகுதிக்குச் சென்று இப்போதைக்கு மீன்பிடிக்க முடியாது. உங்களது வலைகள் அள்ளுப்பட்டு அப்பகுதிகளுக்குச் செல்லுமாயின் அதுபற்றிப் படையினருக்கு அறிவித்தால் நடவடிக்கை எடுக்கப்படும்.

கடலட்டை பிடிப்பதற்கும் அனுமதிக்கப்படுகிறது. சகலரும் இதில் ஈடுபடலாம். ஆனால் கடலில் உள்ள கம்பிவேலிகளுக்கு அண்மையில் 50 யார் தூரத்திற்குள் வரக்கூடாது. வந்தால் அவர்களது மீன்பிடி அனுமதிப் பத்திரம் ஒருமாதத்திற்கு தடைசெய்யப்படும்.

துறைமுகத்திற்கு வடக்காகவோ கிழக்காகவோ செல்ல அனுமதிக்க முடியாது. (ம-ரி)

## ஒஸ்ரின்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சங்கரி, மாவை சேனாதிராசா, ஜி.ஜி. கஜேந்திரகுமார், என்.ரவிராஜ், எம்.கே.சிவாஜிலிங்கம், ஆகியோரும் வலி. வடக்குப் பகுதிக்கு இந்தக் குழுவுடன் இணைந்துசெல்வர்.

தெல்லிப்பழைப் பிரதேச செயலகத்தில் இடம்பெறும் உயர்மட்ட மாநாட்டில் குழுவினர் பங்குபற்றுவர்.

நாளை தென்மராட்சிக்குச் செல்லும் ஒஸ்ரின் பெர்னாண்டோ அங்குள்ள நிலைமைகளை ஆராய்வார். சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடக்கும் கூட்டத்தில் அவர்கள் பங்குபற்றுவர்.

தென்மராட்சியில் பனை மரங்கள் தறிக்கப்பட்டு பங்கர்கள் அமைக்கப்பட்டுவருவதையும் -

பொதுமக்கள் வீடுகளில் படையினர் இன்னும் தரித்திருப்பதையும் - பாதுகாப்பு அமைச்சு செயலருக்குக் காட்டவிருக்கின்றோம் என்று நாடாளுமன்ற உறுப்பினர் என். ரவிராஜ் தெரிவித்தார். (ம-3)

## சுயாதீன...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நிலைமைகள் குறித்துக் கலந்துரையாடினர்.

கடந்த 16ஆம் திகதிமுதல் நேற்று வரை யாழ். செயலகத்தில் நடந்த விசாரணைகளில் படைத்தரப்பில் இருந்து வடபிராந்திய கடற்படைத் தளபதி ரியர் அட்மிரல் சரத் வீரசேகர, யாழ். மாவட்டப் பிரதி பொலீஸ்மா அதிபர் கீர்த்தி கஜநாயக்க, யாழ். மாவட்ட இராணுவத் தளபதி மேஜர் ஜெனரல் சரத் பொன்சேகா, விடுதலைப் புலிகளுடன் சுமுகமாக நடந்து கொள்ளாததினால் இடமாற்றம் செய்யப்பட்ட ஊர்காவற்றுறை கடற்படைக் கட்டளைத்தளபதி லெப்.கொமாண்டர் சந்திரசிறி, கடற்படை அதிகாரி வியனாராட்சி ஆகியோரும் -

விடுதலைப் புலிகளின் தரப்பில் செம்மணன், தயாளன் ஆகியோரும் -

பொதுமக்கள் தரப்பில் வல்லிபுரம் செல்வானந்தன், திருமதி விக்கினேஸ்வரி செல்வானந்தன், விஸ்வலிங்கம் செல்வம், திருமதி ஆனந்தவராசா அமிர்தகௌரி, தீவக மக்கள் நலன் காப்பக தலைவர் த.சத்தியதாசன் ஆகியோரும் சாட்சியமளித்துள்ளனர்.

விசாரணைக்குழு தமது இறுதி அறிக்கையை எதிர்வரும் 31ஆம் திகதி புதன்கிழமை பாதுகாப்பு அமைச்சுக்கு சமர்ப்பிக்கும் என்று தான் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவிற்கு உறுதியளித்துள்ளதாக சுயாதீன ஆணைக்குழுவின் தலைவர் எயர் வைஷ் மார்சல் ஹரி குணதிலக தெரிவித்தார். (ம-8)


**BIT**

**கல்வியாண்டு 2002/2003**

**விரிவுரைகள் ஆரம்பம்**

கொழும்பு பல்கலைக்கழகத்தின் தகவல் தொழில்நுட்பமாணி (BIT) தெரிவுப்பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களுக்கு, மேற்படி கற்கைநெறிக்கான விரிவுரைகள் சம்பந்தமாகவும், பல்கலைக்கழகப் பதிவுகள் தொடர்பாகவும் கலந்துரையாடல் ஒன்று எதிர்வரும் (28.07.2002) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு IIS தலைமை அலுவலக பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இக்கலந்துரையாடலுக்கு யாழ். மாவட்டத்தில் இருந்து தெரிவுப் பரீட்சையில் சித்தியடைந்த அனைத்து மாணவர்களையும் தவறாது சமுகமளிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

"BIT பட்டப்படிப்பிற்கு தனித்துவம் வாய்ந்த ஒரே ஒரு நிறுவனம் IIS"

(C/23206) இயக்குநர், IIS, யாழ்ப்பாணம்.

**திருவருள்மிகு கைதடி வீரகத்திப் பிள்ளையார் கோயில்**

**வரலாறு வெளியீட்டு விழாவும், அறநெறிப் பாடசாலையில் சித்திபெய்திய மாணவர்களுக்குச் சான்றிதழ் வழங்குதலும்**

1. சித்திரபானு வருடம் ஆடி மீ 05ஆம் திகதி (21.07.2002) ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணிக்கு மேற்படி ஆலய மண்டபத்தில் வரலாறு வெளியீடு இடம்பெறும். அத்தருணம் சைவப்பெரியார்கள். ஆலய உபயகாரர்கள். வர்த்தகப் பெருமக்கள் மற்றும் அடியார்கள் அனைவரும் சமுகம் தந்து வரலாற்று நூல் பிரதியைப் பெற்று விழாவைச் சிறப்பிக்குமாறு அன்பாக வேண்டுகின்றோம்.
2. மேற்படி ஆலய சிவன் தேர்த்திருவிழா உற்சவமாகிய ஆடி மீ 07ஆம் திகதி செவ்வாய்க்கிழமை (23.07.2002) பகல் 11 மணியளவில் மேற்படி ஆலய அறநெறிப் பாடசாலையில் பயின்று இந்துசமய கலாசார அலுவல்கள் அமைச்சினால் நடத்தப்பெற்ற பரீட்சையில் தோற்றி சித்தியெய்திய மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படும். சித்தியெய்திய மாணவர்கள் சமுகம் தந்து சான்றிதழ்களைப் பெற்றுக்கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

நம்பிக்கைப் பொறுப்பாளர், பரிபாலன சபை,
*கைதடி வீரகத்திப் பிள்ளையார் கோயில்*
*முதலாம் கோயில்கள், கைதடி.*


## சிறை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

னாண்டஸ் கூறுகையில் -

வைகோவை பொறுத்தவரை பொடா தவறாகப் பயன்படுத்தப்பட்டிருக்கிறது என்று தேசிய ஜனநாயகக் கூட்டணி கருதினாலும்கூட - அவரைக் கைதுசெய்வது என்பது மாநில அரசின் உரிமை. அதன் அதிகாரவரம்பிற்கு உட்பட்டே அது செயற்பட்டிருக்கிறது. எனவே, அதில் தலையிடக் கூடாது என்று கூட்டணி முடிவு எடுத்திருக்கிறது என்றார்.

வாஜ்பாய் அரசிற்கு நெருக்கடி ஏற்பட்டபொழுதெல்லாம் ஆதரவளித்த வைகோவை இப்படி உதாசீனப்படுத்தலாமா என்று செய்தியாளர்கள் கேட்டதற்கு - வைகோ ஒரு புரட்சியாளன். அவர் இதுவரை இந்த வழக்கிலிருந்து மீள எங்கள் ஆதரவை கோரவில்லை. எனவே நாங்கள் அவரைக் கைவிட்டு விடுவதாகக் கூறுவது சரியல்ல என்று பதிலளித்தார் பெர்னாண்டஸ்.

## தேடப்படும்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யதும் பிரஸ்தாப நபரை அங்கு கைது செய்யமுடியாது போனதும் - தெரிந்ததே.

இந்த வழக்கு யாழ். நீதிமன்றத்தில் நேற்று நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா முன்னிலையில் எடுக்கப்பட்டது.

அச்சமயம் நீதிமன்றத்தில் பிரசன்னமாகியிருந்த குற்றப்புலனாய்வுப் பிரிவு இன்ஸ்பெக்டர் பி.எச்.டி.ரஞ்சித் சில்வா மனு ஒன்றைத் தாக்கல்செய்தார்.

"சந்தேகநபர் ஈ.பி.டி.பி. அமைப்பைச் சேர்ந்தவர். அவரது இருப்பிடங்கள் தொடர்பான விவரங்கள் அந்த அமைப்பின் தலைமை அலுவலகப் பொறுப்பாளருக்குத் தெரியும். எனவே சந்தேகநபரை நீதிமன்றத்தில் ஆஜர் செய்யுமாறு பொறுப்பாளருக்கு உத்தரவிடுங்கள்." என்று அந்த மனுவில் கோரப்பட்டிருந்தது.

அந்த மனுவை ஏற்றுக்கொண்ட நீதிவான் சந்தேகநபரை எதிர்வரும் 2ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜர் செய்யுமாறு பொறுப்பாளருக்குக் கடிதம் அனுப்பும்படி பதிவாளருக்கு நீதிவான் உத்தரவிட்டார்.

இந்தச் சம்பவம் தொடர்பாகக் கைதுசெய்யப்பட்டுத் தடுத்து வைக்கப்பட்டுள்ள ஈ.பி.டி.பி. அமைப்பைச் சேர்ந்த இரு சந்தேகநபர்களையும் அடுத்த மாதம் 2ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கும்படி நீதிவான் உத்தரவிட்டார். (ம-3-10)

## ஜனாதிபதி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருவரும் கருத்துக்களைப் பரிமாறியுள்ளனர்.

ஜனாதிபதியின் சில செயற்பாடுகளினால் அரசு முகங்கொடுக்கவேண்டியிருக்கும் சிரமங்கள் குறித்து பிரதமர் எடுத்துக் கூறினார். அப்போது ஜனாதிபதி, பிரதமரைப் பார்த்து உங்களுடைய அமைச்சர்கள் குறிப்பாக ரவி கருணாநாயக்கா, ராஜித சேனரத்ன, பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் ஆகியோர் தான் எல்லாவற்றுக்கும் காரணம். அவர்கள் சும்மா என்னுடன் சண்டிக் கொண்டிருக்கிறார்கள் என்று முகத்தில் அறைந்தால் போல கூறினார்.

அதற்குப் பிரதமர் அமைச்சர்களுடன் பேசி எல்லாவற்றையும் சீர்ப்படுத்திவிடலாம் என்ற தொனியில் பதிலளித்தார். அடுத்து சமாதான முன்னெடுப்புகள் பற்றிப் பேச ஆரம்பமானபோது தான் பிரச்சினை எழுந்தது.

சமாதான முன்னெடுப்புகளில் தாம் நடந்துகொள்ளும் விதம் பற்றி அரசாங்கம் என்ன நினைக்கிறது? அது ஆதரவானதாகக் கருதப்படுகிறதா என்று ஜனாதிபதி கேட்டார்.

சமாதான முயற்சிகளுக்கு அனுசரணை வழங்குமாறு தாமே முதன் முதலாக நோர்வேக்காரர்களை அழைத்தார் என்பதையும் ஜனாதிபதி நினைவுபடுத்தினார். ஜனாதிபதியின் கேள்விக்குப் பிரதமர் நேரடியாகப் பதிலளிக்கவில்லை.

சமாதான முன்னெடுப்புகள் ஏன் தாமதமாகின்றன என்று ஜனாதிபதி வினவினார். அதற்குப் பிரதமர் பதிலளிக்கையில், சில தடங்கல்கள் ஏற்பட்டாலும் கடந்தவார இறுதியில் நோர்வே அனுசரணைக்குழுத் தலைவர் ஹெல்கிசன் லண்டனில் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கத்தைச் சந்தித்துப் பேசியதோடு சமாதான முயற்சிகள் மீண்டும் முன்னேறத் தொடங்கியுள்ளன என்றார்.

சமாதான முயற்சிகளில் தாம் எந்தவிதமான பங்களிப்பைச் செய்ய வேண்டும் என்று அரசாங்கம் எதிர்பார்க்கின்றது என்பது தனக்கு கொஞ்சமும் தெரியவில்லை என்றார் ஜனாதிபதி. அதற்குப் பிரதமர் பதில் ஏதும் கூறவில்லை. (ம)

## மீன்பிடி ட்றோலர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

• இந்த ட்றோலர் குறித்து உண்மை நிலையைத் தெளிவுபடுத்தி, தங்களது விசாரணைக்கு உதவுமாறு இந்தியாவை இலங்கை கோரியிருந்தது.

"இலங்கைக் கடற்பிரதேசத்துக்குள் நுழையும் இந்திய மீனவர்களின் ட்றோலரை புலிகள் கைப்பற்றுவது வழமை. அப்படி 90களில் புலிகளால் கைப்பற்றப்பட்ட ட்றோலராக இது இருக்கலாம்." - என்று இந்தியா தற்போது தெரிவித்துள்ளது. (ம

# மரண அறிவித்தல்கள்

## தில்லையம்பலம் நவரத்தினம்

**(ஓய்வுபெற்ற உதவி அதிபர், யாழ். செங்குந்த இந்துக் கல்லூரி)**

கட்டுவன் மேற்கைப் பிறப்பிடமாகவும் கல்வியங்காட்டை வதிவிடமாகவும் கொண்ட தில்லையம்பலம் நவரத்தினம் அவர்கள் நேற்று (19.07.2002) வெள்ளிக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தில்லையம்பலம் - செல்லம்மா தம்பதியினரின் மூத்த புதல்வரும் வவுனியாவைச் சேர்ந்த காலஞ்சென்ற தர்மலிங்கம் தம்பதியினரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற திருமதி தர்மநாயகியின் (ஓய்வுபெற்ற ஆசிரியை) அன்புக் கணவரும் Dr. சுரபி, தர்சினி (ஆசிரியை), சஞ்சீவ் (மாணவன் - உடற்கல்வித்துறை, யாழ். பல்கலைக்கழகம்) ஆகியோரின் அன்புத் தந்தையும் Dr. அகிலன், Dr. உதயகுமார் ஆகியோரின் அன்பு மாமனாரும் நிஷாவின் அன்புப் பேரனும் காலஞ்சென்ற திருமதி அன்னரத்தினம், குணரத்தினம் (ஓய்வுபெற்ற ஆசிரியர்), யோகரத்தினம் (நில அளவையாளர்), சிவகுருநாதன் (துரை - நாதன் ஸ்ரோர்ஸ், மல்லாகம்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.07.2002) சனிக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் கட்டுவன் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக உயத்தியோடை மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*நாச்சிமார் கோயிலடி,* தகவல்:
*கட்டுவன் மேற்கு,* சஞ்சீவ் (மகன்),
*தெல்லிப்பழை.* (6176) துரை (சகோதரன்).

## திருமதி சிவகுரு இராசம்மா

பேராளை, பளையைப் பிறப்பிடமாகவும் மல்லாவியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சிவகுரு இராசம்மா அவர்கள் நேற்று (19.07.2002) வெள்ளிக்கிழமை யாழ்ப்பாணத்தில் காலமானார்.

அன்னார் சிவகுருவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான சின்னையா - பொன்னு தம்பதிகளின் அன்பு மகளும், காலஞ்சென்ற யோகராஜா (பச்சிலைப்பள்ளி பிரதேச சபை ஊழியர்) மற்றும் செல்வராசா, ஜெயராசா (ராஜன் விற்பனை நிலையம், மல்லாவி), குலராசா, நிமலராசா ஆகியோரின் அன்புத் தாயாரும் பாமினி, புஸ்பலீலாவதி, பரிமளா (ஆசிரியர், கலாசாலை கோப்பாய்), தர்சினி ஆகியோரின் மாமியாரும் துவாரகன், கயோதா, தட்சிகா ஆகியோரின் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.07.2002) சனிக்கிழமை மாலை 4.00 மணியளவில் கோப்பாயில் நடைபெற்று, பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக கோப்பாய் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

மு.நடராசா, தகவல்:
*பிரதேச செயலகம் அருகில்,* செல்வராசா
*கோப்பாய் வடக்கு,கோப்பாய்.* (6206) (குஞ்சன் - மகன்)

## செல்வி பரமானந்தன் கோபினி

ஏழாலையைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி பரமானந்தன் கோபினி அவர்கள் நேற்று (19.07.2002) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் பரமானந்தன் - கெங்கா (வலிகாமம் கல்வி வலயம் - மருதனார்மடம்) தம்பதியினரின் அன்பு மகளாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.07.2002) சனிக்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் நல்லடக்கத்திற்காக ஏழாலை இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*ஏழாலை கிழக்கு,* சி.பரமானந்தன் (தகப்பன்)
*ஏழாலை.* (6237) (பலசரக்குக் கடை உரிமையாளர்)

## இராமநாதன் கோபாலபிள்ளை

நயினாதீவைப் பிறப்பிடமாகவும் நல்லூர், மூத்தவிநாயகர் வீதியை வசிப்பிடமாகவும் கொண்ட இராமநாதன் கோபாலபிள்ளை அவர்கள் நேற்று (19.07.2002) வெள்ளிக்கிழமை கொழும்பில் காலமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
*32, மூத்தவிநாயகர் வீதி,* கோ.ஜெயேந்திரா
*நல்லூர்.* (C/23008) (மகன்).

## கந்தசாமி உருத்திரநாதன் (செல்வா)

தொண்டமனாறு, செல்வச்சந்நிதி மணியம் மடத்தைப் பிறப்பிடமாகவும் உடுப்பிட்டி, பொக்கணைச்சந்தியை வசிப்பிடமாகவும் கொண்ட கந்தசாமி உருத்திரநாதன் நேற்று (19.07.2002) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கந்தசாமி-இராஜபூபதியின் அன்பு மகனும் சிவலிங்கம்-ஜெயலக்சுமியின் அன்பு மருமகனும் வசந்தகுமாரி (வசந்தி)யின் அன்புக் கணவரும் துவந்திகா (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), மயூரதன் ஆகியோரின் அன்புத் தந்தையும் இரவீந்திரநாதன் (மயூரன்-சாவகச்சேரி), இரகுநாதன் (துணுக்காய் பல நோ.கூ.ச.), சிவநாதன் (ஜேர்மனி), புஸ்பநாதன் (மணியர்மடம்), மாலினி, பவானி, ரஞ்சநாதன் (லண்டன்) ஆகியோரின் அன்புச் சகோதரனும் சரோஜினிதேவி, சந்திரகலா, கெங்காதேவி (ஜேர்மனி), திருலோகநாயகி (மாலா), இராஜேந்திரம், சந்திரகுமார் (லண்டன்), செல்வகுமாரி, தர்சினி, சிவநேசன், அமுதினி (கனடா) ஆகியோரின் மைத்துனரும் குணேந்திரன் (குணம் அரிசி ஆலை, மிசாலை), ஞானம் (கனடா) ஆகியோரின் சகலனும் தங்கலஷ்சுமியின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (20.07.2002) சனிக்கிழமை மாலை 4.00மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் வல்லை கரம்பைவெளி இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சந்நிதி வீதி,* தகவல்:
*பொக்கணைச் சந்தி,* க.இரவீந்திரநாதன்
*உடுப்பிட்டி.* (C/23009) (சகோதரன்)

பருத்தி ... நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 20.07.2002இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.